www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஜூலை.28–ஆக.03,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 163



## ரணில் நடத்திய நாடகம்

## கொழும்பில் இரகசிய மறைவிடம்



## சாக்ஸியின் கனவு சினிவிசிட்

## பூலான் தேவி கதை சொல்கிறார்

## ஜெயா சசி உறவு மலர்ந்தகதை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மாறாத விதி

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

"யாழ்-குடாநாட்டுக்கு
பத்தாயிரம் தொண்டர்கள்!
தெற்கிலிருந்து அனுப்பியே தீருவோம்.
முடிவில் மாற்றமில்லை."
அரசாங்கத் தரப்பு
அடித்துச் சொல்லிவிட்டது!

இப்படியான முடிவுகளில் மட்டும்
முன்வைத்த காலைப் பின்வைப்பதில்லை.

தமிழ் மக்களைப் பாதிக்கும் என்று
சுட்டிக்காட்டப்படும் விடயங்களை
தட்டிக்கழித்துவிடுவதுதான்
அன்றும், இன்றும்
அரசாங்க அணுகுமுறை!

ஆயுதங்களை கீழே போடுங்கள்
என்று உபதேசிப்பது சுலபம்!
ஆயுதம் இன்றி அமைதிவழியில்
தமிழ் கட்சிகள் குரல் கொடுத்தால்
அலட்சியம்தான் பதிலாக கிடைக்கிறது!

ஆயுதம் இல்லாமல்
பிரபாகரன் வந்தாலும்
மரியாதை இதுதானோ?
யோசிக்க வேண்டியிருக்கிறது!

'பல்லுள்ள வரைதான்
பாம்புக்கு மரியாதை' என்று
நினைக்கும் வகையில்தான்
நிகழ்ச்சிப் போக்குகள் நீள்கின்றன.

பிரச்சனைகளைப் பேசித்தீர்க்கலாம்
என்று பிரபாகரனை
குற்றம்சாட்டுவது இருக்கட்டும்.
பேச்சில் நம்பிக்கை கொண்ட
தமிழ் கட்சிகள் விடயத்தில்
அரசின் அணுகுமுறை என்ன?

"நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள்;
நாங்கள் செய்வதைச் செய்வோம்;
ஆதரித்தால் வரவேற்போம்;
எதிர்த்தால் எடுத்தெறிவோம்!"
என்ற போக்குத்தானே
வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது!

பத்தாயிரம் தொண்டர்களை
யாழுக்கு அனுப்பும் விடயத்திலும்
தமிழ் கட்சிகளின் கருத்துகளுக்கு
அரசு காது கொடுக்கவில்லை!

யாழ்-குடாநாட்டுக்கு
சென்றுவர தொண்டர் நிறுவனங்களுக்கு
அனுமதி கொடுக்கவே
அரசு யோசித்து தாமதிக்கிறது.

தாமாக முன்வந்து
பத்தாயிரம் தொண்டர்களை
அனுப்பப்போவதாக அறிவிக்கிறது!

நோக்கம் என்ன?
புனரமைப்பா? அல்லது
புதிய படைப்பிரிவுக்கு
'சமாதானப்படை' என்ற பெயரா?

பின்னதுதான் சரி என்று தெரிகிறது.
உண்மையை நேராகச் சொல்லாமல்
சுற்றிவளைத்து சொல்வது முறையல்ல.

"யாழ்-குடாநாட்டை
சமாதான நகரமாக்குவோம்"
என்று சொன்னார் ஜனாதிபதி!

சமாதான நகரமாக்குதல் என்பது
யாழ் நகரை பல்லின நகரமாக்கும்
எண்ணத்தில் கூறப்பட்டிருந்தால்
பத்தாயிரம் பேரை
அனுப்புவதோடு மட்டும்
காரியம் நின்றுவிடப் போவதில்லை!

யாழ் செல்லும் பத்தாயிரம் பேரும்
உடைந்த வீடுகளுக்கு
ஓடுகள் போடவும்,
சிதைந்த வீதிகளைச் செப்பனிடவுமே
செல்கிறார்கள் என்று
சொல்லப்படுமானால் அதனை
எவர்தான் நம்புவர்?

தீர்வில் உள்ள நாட்டத்தைவிட
தமது விருப்பத்திற்கு ஏற்ப
சூழலை வளைப்பதில்தான்
அரசாங்கம் அக்கறை காட்டுகிறது!

இது-சப்பாத்துக்கு ஏற்ப
கால்களை வெட்டும் அணுகுமுறை!
இந்த அணுகுமுறையின்
நாளைய விளைவுகளுக்கு
பொறுப்பேற்கப் போவது யார்?

யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு
ஆட்களுக்கல்ல,
அத்தியாவசியப் பொருட்களுக்குத்தான்!
புனரமைப்பு என்ற முழக்கத்தைவிட
போதிய அத்தியாவசியப் பொருட்களை
அனுப்பிவைத்தால் போதுமே!

'நடக்கவேண்டியது நடக்காது.
நடக்கக்கூடாதது நடக்கும்!'
இந்த விதி மாறாதவரை
இந்த நாட்டின் தலைவிதி
நல்லதாக மாறப்போதில்லை!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை **என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்**

## உலக ஆசை

வேதம் சொல்கிறது "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவான் 2:15)

லோத்தின் மனைவியைப் பாருங்கள். அவளுடைய உள்ளம் சோதோம் கொமோராவோடு கூட இணைக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு நவீனமான லோத்தின் மனைவிகளை கர்த்தர் அழைத்தால்; அவர்களுடைய உள்ளமோ 'ஆண்டவரே, கலர் டி.வி.யை விட்டு விட்டு எப்படி உமக்கென்று செல்வது? இப்போதுதானே ஃபிரிட்ஜ் வாங்கினோம். இப்போதுதானே வீட்டிற்கு புதிய சோபா செட்கள் வாங்கினோம்' என்றெல்லாம் எண்ணி பின்னிட்டு திரும்பிப் பார்த்து விடுவார்கள்.

நீதிமானுடைய மனைவி உப்புத்தூணாக மாற முக்கிய காரணமென்ன? அவளிலே இருந்த லௌகீகம், உலக ஆசை அல்லவா? தேவ பிள்ளையே, உலக ஆசைகளின் மேல் ஜாக்கிரதையுள்ளவனாய் இரு. கர்த்தருக்காக நீ எழும்பி பிரகாசிக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட உலக நேசங்களுக்குள் சிக்கிக் கொள்ளாதே

நீ கர்த்தருக்காக எழும்பி பிரகாசிக்க வேண்டும் என்பதை மறந்து போகாதே. கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

தொகுப்பு: தி.பெ.தேவபாலன், மட்டக்களப்பு.

## ஆன்மீகம்



### அனுமதியின்றி அதை அனுபவிக்கலாகாது

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு ஜனாஸாவில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த போது, ஒரு பெண் விருந்துண்ண வருமாறு தன் வீட்டிற்கு அழைத்தாள். நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய ஸஹாபாக்களுடன் அங்கு சென்றார்கள். உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டவுடன் நபியவர்கள் அதனை எடுத்து வாயில் வைத்து மென்றார்கள். ஆனால் அது அன்னாரின் தொண்டையினுள் இறங்கவில்லை. இதனை ஸஹாபாக்களும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ரஸூல் (ஸல்) அவர்கள், "இந்த ஆட்டிறைச்சி அதன் உரிமையாளரின் அனுமதியின்றி கொண்டு வந்து சமைக்கப்பட்டது போல் தெரிகிறது." என்று கூறினார்கள். இதனைக் கேட்ட அப்பெண்மணி, "யாரசூலல்லாஹ்! ஆடு வாங்கிவர ஆட்டு மந்தைக்கு ஆள் அனுப்பினேன், அங்கு ஆடு கிடைக்கவில்லை. பக்கத்து வீட்டுக்காரர் ஓர் ஆடு வாங்கி வைத்திருந்தார். நான் அதனை விலைக்கு வாங்கிவர ஆளனுப்பினேன். அவரைக்காணவில்லை. ஆனால், அவருடைய மனைவி ஆட்டை என்னிடம் அனுப்பிவைத்துவிட்டார். நான் அதனை அறுத்து சமைத்து வைத்தேன்" என விபரம் கூறினார். இதனைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள், "இதனை கைதிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள்" என்று கட்டளையிட்டார்கள் (மஷ்கூத் ஸஹாபா)

ஏ.எம்.மகூத் அஹமத், காத்தான்குடி-03.

## கவிதைப் போட்டி இல.160

### பரிசுக்குரிய கவிதை

### அன்று – இன்று – என்றும்

**போதுமா போதுமா என்று**
**போட்டேன் சோறு-அன்று!**
**ஏதுமே கூற என்னால்**
**ஆகாதே என் செய்ய?- இன்று!**
**வேகுதே என் மனமும் போர்வேள்வியில்**
**ஆகுதிகள் தானா நாம்-என்றும்....!**

அரியாலையூர் அம்புயம்- யாழ்ப்பாணம்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**காணி நிலம்**

படையலாகக் கட்டுச் சோறுடன்
பக்கத்திலே என் பத்தினிப் பெண்!
ஆனால்,
பாரதியார் சொன்னபடி- எம்
காணிநிலத்தைக் காணோம்!

சி.மைதிலி- குடியிருப்பு,வவுனியா.

**என்ன பயன்...?**

அள்ளி உண்ண சோறிருந்தும்
கிள்ளி கொஞ்ச மகளிருந்தும்
பள்ளி கொள்ள துணையிருந்தும்
கொள்ளி வைக்கும் நாட்டினிலே
தள்ளி வைத்தேன் நிம்மதியை.

திருமதி. சுமதி நித்தியானந்தன்- முகத்துவாரம்.

**ஜனநாயகம்(!)**

இந்நாளில்
நம் பந்தியெல்லாம்
சந்திகளில்தான்...!

தேன்மொழி- மெலிபன் வீதி, கொழும்பு.

**வடக்கில்...!**

'வருக வருக' வென்ற
வரவேற்போ ஒரு புறம்;
'போகவேண்டாம்' என்று
மறுப்பதோ மறுபுறம்
இரண்டிற்கும் நடுவில்
எம்வாழ்வோ தெருப்புறம்!

அமுதா- மகாலிங்கசிவம், மட்/ கல்லடி.

**அறுசுவையோ?**

ஒருவேளைச் சோற்றுக்காக
ஒடியோடிக் கியூவில் நின்ற
களைப்பின் அறுவடைதான்
காலம் படைக்கும் அறுசுவையோ?

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம்.

**அகதி முகாம்**

வாழை இலை விரித்து
வளமாக உண்பதற்கு
அகதி முகம் தானோ
ஆதரவை நல்கியது?

ஏ.எம்.முஸ்தபா- மட்/ மீராகேணி, ஏறாவூர்.



**மலையக மக்கள்**

நூற்றாண்டுகளுக்கு முன்பும்
நூற்றாண்டுகளுக்கு பின்பும்
என்றும் மாறாத
எங்கள் நிலை!

ஐ. விநாயகமூர்த்தி- பொகவந்தலாவ.

## கவிதைப் போட்டி இல-163



**கவனியுங்கள்**

*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 03.08.1996*

**-முகவரி-**
கவிதைப் போட்டி இல.163
தினமுரசு வாரமலர்
த.பெ. இல-1772, கொழும்பு.

**விதி**

கிளாலிக் கரையில் கீரைக்கறியுடன்,
கிழமைகள் இரண்டு!
முருகண்டி முகாமில் முருங்கக்காயுடன்
முப்பது நாள்!
ஓமந்தைவிடுதியில் ஒரு நேரச் சோற்றுடன்
ஒன்பது நாள்!
கடந்தது நோவல்ல, கம்பிக்குள்
இனி உண்ணாவிட்டால்.

க. கஜானன்- வரியப்புலம், சுன்னாகம்.

**மீண்டும் வருமா?**

வந்தாரை வரவேற்கும் வடபகுதி இனம் நாங்கள்!
வாழை-இலைபோட்டு, வயிறார உண்ண வைத்து
தூய தமிழ் பேசி, துன்பமே தெரியாமல்
வாழ்ந்தகாலம் என்று வரும்...?
காவல் இருக்கின்றோம்; காலம் வருமா?

க. கமலாம்பிகை-கரப்பன்காடு, வவுனியா.

**பெரிது! பெரிது!**

சிறை மீண்ட சிற்றம்பலம்
இரையுண்ணும் இலட்சணத்தை
முரசே! உன் பிரசுரத்தால்
பறைசாற்றும் விதம் பெரிது!

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப், வெலிமடை.

**புகலிடம்**

இரண்டாயிரம் ஆண்டளவில்
யாவருக்கும் புகலிடமாம்!
எம்மைப்போன்ற மக்களுக்கோ
என்றும் தெருவே நிரந்தரமாம்.

சதா கணபதி- அதிகாரவத்தை, உடபுஸ்ஸல்லாவ.

**தடை**

வடபுலத்து சண்டையினால்
கடை இழந்த கனகராசா
குடி பெயர்ந்து குடும்பத்துடன்
கொழும்பு செல்லப் போனவர்க்கு,
படைமுகாமின் பாஸைப் பெற
நாட்கள் பல நீள்வதாலே
வீதியிலே வாடி போட்டு
வேதனை யோடுண்ணுகிறார்!

சு.இரத்தினம்- தேசிய கல்லூரி, அக்கரைப்பற்று-07.

## வாசக(ர்)சாலை

யாழ்-குடாநாட்டில் உணவுத்தட்டுப்பாடு நிலவ புலிகளே காரணம் என்றும், புலிகள்தான் ஒருபகுதியை எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் முன்னர் காரணம் சொன்னார்கள். அரச நிவாரணப்பொருட்களில் புலிகள் தமக்கும் எடுத்துக் கொண்டது உண்மைதான். ஆயினும் அது மட்டும்தான் முன்னைய தட்டுப்பாடுகளுக்கு காரணம் எனில், தற்போது வினியோகப் பொறுப்பு முழுவதும் அரசாங்கத்திடம்தானே இருக்கிறது. இப்போது ஏன் தட்டுப்பாடு நிலவவேண்டும்? காரணம் சொல்ல நியாயம் தேடாமல், ஆகவேண்டியதைச் செய்ய முன்வரவேண்டும்.

தி.கந்தசாமி, கரவெட்டி, யாழ்ப்பாணம்.

⊠ ✂ ⊠

"அது ஒரு காலம்" தந்த புகைப்படங்கள் முரசுக்கே உரிய தனித்துவ பாணி. கீப்.. இட்... அப்.

கலைநேசன்-ஜவாத், புத்தளம்.

⊠ ✂ ⊠

தித்திப்பாயினும் திகட்டாத பல "க்ரைம்" தொடர்களை தந்த தினமுரசே! பட்டுக்கோட்டை பிரபாகரின் 'தா'வின் முதல் அத்தியாயமே இதயத்தை அள்ளித்'தா'ன் கொண்டது.

சியாமளா கணேசன், முன்னேஸ்வரம்.

⊠ ✂ ⊠

குஷ்பு கர்ப்பமானார் என்ற 'சினிவிசிட்' செய்தியை கேட்டு என்னமோ ஏதோ என்று குழம்பி விட்டோம். என்னய்யா? இப்படியெல்லாமா? தலைப்பிடுவது...?

பத்மா டெமிசி, சரவணேஸ் டெமிசி, இறம்பொடை.

⊠ ✂ ⊠

ரசிகன் தந்த இலக்கிய நயம் சூப்பர். எக்ஸ்ரே ரிப்போர்டில், அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை மிகவும் துணிச்சலுடன் ஆராய்ந்து எமக்கு அறியத் தந்த நாரதரே, நீர் பொல்லாத ஆளப்பா!

பி.ஆர்.சங்கர், வெலிகந்த.

⊠ ✂ ⊠

ராஜேந்திர குமாரின் 'நீ,நீயா?' திகில் 'தொடர்' முற்றுப் பெற்றாலும் என் 'மனதில்' இருக்கும் 'மறக்க முடியாத கதை'களில் அதுவும் ஒன்று! 'பி.கே.பி'யின் 'தா' முதல் வாரமே 'அசத்தல்'. 'கார் லோஸ்' கெட்டவனா நல்லவனா? என்று நாம் சொல்வது இருக்கட்டும் என் அபிமான 'ரசிகன்' இப்படி 'ஒளிந்திருப்பது' நியாயமா? சொல் முரசே!

எம்.ரிஷான் ஷெரீப், மாவனல்லை.

எனக்கு ரசிகன் மீது கோபம் கோபமாக வருகிறது! எதற்காக என்று கேட்கிறீர்களா? கார்லோஸ் ஒரு ஆணழகன், காதல் இளவரசன் இவ்வளவு அழகான பெயர்கள் இருக்கும் போது, ஏன்தான் அவனுக்கு ரசிகன் மனிதவெடி குண்டு என்று பெயர் சூட்டினாரோ.

எம்.சீ.எம்.சன்பராபாஹிர், தர்ஹா வீதி, கொட்டராமுல்லை.



⊠ ✂ ⊠

என் இனிய முரசே,

நீ இவ்வளவு காலமும் வெளியிட்ட கார்லோசின் உண்மைக்கதை எங்களை மிகவும் கவர்ந்து விட்டது. அதை வெளியிட்டதற்கு எங்கள் அனைவரினதும் மனமார்ந்த நன்றி.

எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

⊠ ✂ ⊠

"எவ்வளவு அழகாக சிலைவடித்தான் சிற்பி" என்றுதானே சொல்கிறார்கள் அதனால்தான் கார் லோஸ் உன்மீது மதிப்பு வைத்திருக்கிறேன். ஆயுதங்களால் பேசியவரோடு ஆயுதத்தாலும் அன்பால் பேசிய வரோடு அன்பாலும் பேசினாயே அதுதான் சிறப்பு.

சுபா, கண்டி.

⊠ ✂ ⊠

### கார்லோஸ் நல்லவனா?

கார்லோஸ் செய்த சாகசங்களை ரசிகன் விறுவிறுப்பாய் தொகுத்துத்தந்தார். விறுவிறுப்பு மட்டும் கார்லோஸை காப்பாற்ற முடியாது. கார்லோஸ் என்ற சுயநலவாதியின் குண்டுகளால் பலியானவர்கள் எத்தனை? தனது தவறுகளுக்கு கார்லோஸ் கூறிய நியாயங்களை ஏற்க முடியாது.

செல்வி.சி.வாசுகி, கொழும்பு-6.

⊠ ✂ ⊠

கார்லோஸ் பக்கம் நியாயமிருக்கலாம். தன்னை கறிவேப்பிலையாக பயன்படுத்திய கோபமும் இருக்கலாம். அதற்காக அப்பாவிகள் மீதுதானா பழி தீர்க்க வேண்டும்? ரசிகனும் கார்லோஸ் கட்சிபோலத் தெரிந்தது. கார்லோஸ் பக்கம் சாய்ந்து எழுதியதுபோல உணரமுடிந்தது.

ம.சுந்தரேசன், கம்பளை.

⊠ ✂ ⊠

கார்லோஸ் கார்லோஸ்தான். அவனை ஒரு புரட்சியாளனாக வளர்த்தெடுக்க பாலஸ்தீன இயக்கங்கள் தவறிவிட்டன. தவறான வழிநடத்தல் ஒரு போராளியை பயங்கரவாதியாக்குவது எப்படி என்பதை கார்லோஸ் வரலாற்றின் மூலம் கண்டுகொண்டோம்.

எம்.என்.நிசாம், கல்முனை.

⊠ ✂ ⊠

தனி ஒரு மனிதனாக நின்று உலகைக்கலக்கிய துணிச்சலை வியந்தேயாகவேண்டும். எப்படியிருப்பினும் கார்லோஸின் திறமைகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதே.

ஜெ.பாஸ்கர், நுவரெலியா.

*I Feel she is I*
*When She is going*
*And Coming I lose*
*My Heart*

# கண்டதும் காதல் கொள்ளும் இளைஞரா நீங்கள்? முதலில் இந்தக் கதையைப் படியுங்கள்

நான் என்னை
அவளாகவே உணர்கிறேன்,
அவள்
போகும்போதும் வரும்போதும்
என் இதயத்தை
நான் இழக்கின்றேன்.

சுகுமார் தன்னுடைய இதயத்தை ஆங்கில வரிகளால் இறக்கிவைத்தான்.

இன்னும் அவன் அவளின் அவளுடன் பேசவில்லை. ஆனால் அவளில் இருந்து அவளுக்குத் தெரியாமலேயே உதிர்ந்த அந்தக் கொப்பி இன்னும் அவனிடந்தான் இருக்கின்றது.

அந்த கம்பியூட்டர்க்குறிப்புக் கொப்பிதான் அவளின் பெயரையும் விலாசத்தையும் இனங் காட்டியதாக சுகுமார் நினைத்தான்.

சுந்தரி....!

பெயர் மட்டுமா அழகானது?

அவள் தென்றல்....!

அவனின் இரவுகள் இமுபட்டுக் கிடந்தன.

இரண்டு வாரங்களாக அவனை வதைக்கும் காதல் வதைக்குத் தீர்வுகாணும் இன்று பேசவேண்டும்.....பேசித்தான் ஆகவேண்டும்!

ஒன்பது மணிக்கு கம்பியூட்டர் வகுப்பு. ரியூட்டரிக்குச் சென்றான்.

வகுப்பறைக்குச் சென்று அமர்ந்தான். சுந்தரியின் கொப்பி கையில், அவள் தன் கையில் இருப்பது போல அவனுக்குள் உணர்வு. அந்தக் கொப்பிக்குள் அவனின் இதயத்தைப் பிழிந்து எடுத்து வடித்த காதல் கடிதம்.

முறை நைபண்ணினன் இப்பதான்....."

"நானும் உங்களக் கிளாஸ்ல பார்த் திருக்கன்."

அவனின் இதயத்தில் மின்னல் உண்டானது.

"நாளைக்கு கிளாஸ்ல மீற் பண்ணுவம்!"

அவள் சென்றாள்.

"சு....ந்....த....ரி!"

அவன் மீண்டும் அவளை அழைத்தான்.

"யாரக்கூப்பிட்டிங்க... என்னையா?



**-நிந்ததாசன்-**

# ஐலவ் ~~சுந்தரி~~, சந்தியா

அவனின் ஒவ்வொரு செக்கண்ட்களிலும் அவள் வசித்தாள். காதல் கவிதைகள் படித்திருக்கின்றான். காதல் கவிதைகளை எழுதியுமிருக்கின்றான்.

ஒரு காதல் கவிதையாக நடமாடுவதை இப்பொழுது தான் பார்க்கின்றான்.

அவளுடன் பேசவேண்டும் இதயத்தைத் திறந்து அதில் ஒளிரும் அவள் முகத்தை அவளிடமே காட்டவேண்டும். அழகான வார்த்தைகளைக் கோர்த்து அழகாக அவளிடம் பேச வேண்டும். சுந்தரியின் புன்னகை தனக்காக மலரவேண்டும். அவளின் இதயத்தின் சத்தம் தன்னுடைய பெயரையே உச்சரிக்க வேண்டும்....... இப்படி அவனுக்குள் ஏகப்பட்ட ஆசைகள்.

அவசரம்.

"இண்டைக்கு கிளாஸ் இல்ல. நாளை சந்திப்பம்." சுகுமாருக்கு வகுப்பு இல்லாதது இன்னும் இலகுவாக இருந்தது.

"சுந்தரி!"

அவன் பின்னாடி நின்று தன்னுடைய மின்னலை அழைத்தான்.

அவள் பேசவில்லை. நடந்தாள்.

அவனின் இதயம் படபடத்தது.

"ஹலோ!"

அவள் திரும்பினாள்.

"இந்தாங்க உங்கட கொப்பி."

அவள் ஆச்சரியமாக வாங்கினாள்.

"திறி வீக்ஸாகத்தான் கிளாசுக்கு வாறீங்களா?"

"ஆமா."

"உங்களோட கதைக்கிறதுக்கு பல என்ர பேர் சுந்தரி இல்ல..... சந்தியா!"

"அப்ப கொப்பி...."

"ஓ.... அதுவா.... என்ர பிரண்டையது....."

வானம் சரிந்து விழுந்து பூமிக்குள் புதையுண்டுபோனது போலிருந்தது சுகுமாருக்கு.

அவனின் சுந்தரி- இல்லையில்லை- சந்தியா சென்றுவிட்டாள்.

அவளுடன் பேசியதில் அவனுக்கு உலகளவு சந்தோசம். அவள் இயல்பாக இதயம் திறந்து பேசுவதாகவும் தன்னுடைய காதலை ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கலாம் என்றும் கற்பனை செய்தான்.

கொப்பி சந்தரியினுடையது,

என்றாலும்;

சந்தியா அதைப் புரட்டுவாள் என்ற நம்பிக்கை சுகுமாருக்கு இருந்தது.

அழகான பாடலை மீண்டும் மீண்டும் கேட்பது போல அவளுடன் பேசிய அந்த வினாடிகளையும் வார்த்தைகளையும் மீண்டும் மீண்டும் இதயத்தில் ஒலிபரப்பினான்.

'நாளை மீற் பண்ணுவம்.... நாளை மீற் பண்ணுவம்.... நாளை மீற் பண்ணுவம்......'

மீண்டும் மீண்டும்

இன்னும் இன்னுமாக

அவனுக்குள் ஒலித்தது. குதூகலித்தான்.

விழியில் தூண்டில்!

இதயம்- இரையாகக் கிடக்கிறது.

♥♥♥

காதல் அழகான கவிதை என்பதனால் சுகுமாருக்கு அது கவிதை தருகின்றது.

நீண்ட இரவு துண்டிக்கப்பட்டு போல விடிந்தது. அவசரம் அவனை விரட்டியது. இதயம் அவனை அவசரப் படுத்தியது.

அழகாகத் தலைசீவினான்.

பிடித்தமான ட்ரவுசர், புள்ஸ்லிவ் சேட் ஷூஸ் அணிந்து இளமையினை இன்னும் மெருகேற்றினான்.

'சந்தியா! நிச்சயமாகக் கடிதத்தைப் படித்திருப்பாள்.'

அவனுக்கு மலையளவு நம்பிக்கை.

நேரம் 8.30

ரியூட்டரியின் வாசலில் சுகுமார்.

சந்தியா காரில் வந்து இறங்கினாள்.

"குட்மோனிங்!"

"குட்மோனிங்"

அவனுக்கு ஆனந்தமாக இருந்தது.

"அந்தக் கொப்பிய சுந்தரியிடம் நேற்றே கொடுத்திட்டன்."

"நீங்க.....பார்க்கலையா....?"

தன்னைமறந்து கேட்டான் சுகுமார்.

"என்ன.....சொல்றீங்க.....?"

"அ.....து.....சும்மா கேட்டன்....."

அவன் ஏமாற்றத்துடன் சமாளித்தான்.

"என்ன?" என்றாள் அவள் மீண்டும்.

"கா.... கார் இது உங்கள் காரா?" சமாளித்தான்.

"என் கணவரின் கார்!" வெடிகுண்டை வீசினாள். இதயம் வியர்த்தது.

அவனின் இதயம் நரகம் வரை கேட்கக் கூடியவாறு சத்தம் போட்டது.

"சந்தியா! இந்தக் கொப்பிய யார் உங்கிட்ட தந்தது?"

காரிலிருந்து இறங்கிய அவள் கணவன் கேட்டான்.

"இவர்தான்...!"

அவனைச் சுற்றி ஒரு நரகம் உருவாகிக் கொண்டிருந்தது. அவன் அந்த இடத்தை விட்டு நகர முயற்சித்தான்.

"யாருக்குடா ராஸ்கல்.... காதல் கடிதம்....?"

கூட்டம் கூடுவதற்கு முன்பதாக அவன் அந்த இடத்தை விட்டுச் சென்றேயாக வேண்டும். அவனுக்கு அவனின் இதயம் கொடுத்த பரிசு அவமானம்.

அவமானம்....அவமான அனுபவம்.

இனி அவன் அந்த ரியூட்டரிப் பக்கமே செல்ல மாட்டான்.

கண்டதும் காதல் கொள்ளும் இளைஞர்களே! கவனம்.

# சொல்வார்களா யாராவது?

யுத்தம்....
அசுர யுத்தம்...
அறுத்துப் போட்ட
உறவுகளதான
எத்தனை.... எத்தனை?

**ஷர்மிளா இஸ்மாயில் — கண்டி**

பஸ் பிதுங்கி வழிந்தது. 'ஓடிப் பாய்ந்து மினி யுத்தத்தில் வெற்றி பெற்ற உணர்வுடன், இருக்கையொன்றை கைப் பற்றிய மிதப்புடன் அமர்ந்து கொண்டது எத்தனை வசதியாய்ப் போயிற்று!' ரகு நினைத்துக் கொண்டான்.

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேர பயணம். களைப்பு வேறு. இப்படியே நின்று கொண்டு! கால் வைக்கவே இடமற்றுத் தடுமாறி, முட்டி மோதி, வியர்வைகளைச் சகித்து... ஊர்போய்ச் சேர்ந்தால் அதுவே பெரிதென நினைப்பவனுக்கு, இன்று எப்போது செய்த புண்ணியமோ 'சீட்' கிடைத்து விட்டது.

ஜன்னல் பக்கமாய் அமர்ந்து வெளி நோட்டம். ஐஸ் கிறீம் விற்பவர்கள், லொட்டரி விற்பவர்கள், பல முகங்கள், உருவங்கள், மனிதர்களில் தான் எத்தனை ரகங்கள். வியர்த்தது. 'தினமுர'சால் விசிறினான். பின்புறமிருந்து ஒரு தட்டு விழுந்தது. திரும்பினான்.

"பேப்பரைக் கொஞ்சம் தாரீங்களா? ப்ளீஸ்" அவன் வயது இளைஞன் புன்னகைத்து கேட்டான். "ஓ, வித் ப்லெஷர்" கொடுத்தான் ரகு. "இன்னும் கிளம்புகிறானில்லை. நேரம் சரி" வயதான ஒருவரின் 'சலிப்பு. ரகு வாசல் பக்கம் பார்த்தான். வியர்த்து வழிந்தது கூட்டம். எங்கே சாரதி? யோசிக்கையில் சிகரட் மீதியை கீழே போட்டு மிதித்து ஏறினார் சாரதி. "அப்பாடா....." ரகு சற்று சாய்ந்து உட்கார்ந்தான்.

"ஓ....ஹோவ்...ஓஓ..." யாரோ பஸ்ஸின் பின்புறம் தட்டி திடுதிடுப்பென ஓடி வந்தார்கள். ரகு கவனித்தான். வயதான பெரியவர், வெள்ளைச் சேலையில் இரண்டு இளம் பெண்கள். பதினைந்து வயதாகும் தோற்றமுடைய சிறுவன், கடைசியாக ஏறிய மூதாட்டியைக் கண்டு மனம் சற்றுத் தளர்ந்தது. வெள்ளி நரைகளோடு கம்பீர உருவமும், கண்ணியமான முக, உடல் வாகும், சாட்சாத் அவனது பாட்டியே வந்து நின்றது போலுணர்வு.



பாட்டி அப்படித்தான். அப்படியே பாட்டிதான். இறந்து போன பாட்டியின் நினைப்பு மனதைக் கௌவியது. பஸ்ஸில் லேறிய மூதாட்டி வியர்த்திருந்தார். களைப்பு, ஓடி வந்திருக்கவேண்டும். அடுத்த பஸ் இன்னும் ஒன்றிரண்டு மணித்தியாலம் கழிந்தே வரும். அதுதான் பஸ்ஸைப் பிடிக்க வயது, பால், இனம் வேறுபாடின்றிய ஓட்டம். வழமையாயிற்று. பாட்டி தடுமாறினார். கம்பியைப் பிடித்த கைகளில் வியர்வையின் பிசுபிசுப்பு. யாரும் இடம் கொடுப்பதாயில்லை. ரகு எழுந்து கொண்டான். பாட்டியின் முகத்தில் பிரகாசம். "பொஹோம ஸ்துதி" என நன்றியோடு அமர்ந்து சேலைத் தலைப்பால் முகம் துடைத்துக்கொண்டார்.

பஸ் ஓடிக்கொண்டிருந்தது. பக்கத்து சீட் ஆசாமி இறங்கி விட ரகு பாட்டியின் பக்கமாய் அமர்ந்துகொண்டான். "உன் உதவிக்கு நன்றி தம்பி...."மீண்டும் நன்றி. ரகு பரவாயில்லை என்ற தோரணையில் சிரித்து வைத்தான். "தம்பிக்கு எந்த ஊரோ?" சகோதர மொழியில் பாட்டியின் வினா. ஊரைச் சொன்னான்.

"ஊரிலே கொஞ்ச நாளைக்கு முன் ஒரு ராணுவ வீரனின் சடலம் வந்ததே தம்பி. பெட்டியில் வைத்து "சீல்"பண்ணி தெரியுமா?" பாட்டி தன் பாட்டில் கதைக்க ஆரம்பித்தார். ஆமாம் என்ற ரீதியில் பார்த்தான் ரகு. "அ....அது என்னோட ஒரே மகன் தம்பி. என் கனவுகளை, லட்சியங்களை எல்லாமே கொண்டுபோய் சிதைச்சு மண்ணாக்கிட்டாங்க தம்பி. ஒரே மகன்" பாட்டியின் குரலில் பிசிறு தட்டியது. கண்கள் பனித்தன. உதடுகள் துடித்தன.

"அ...அவனுக்கு கிட்டத்தட்ட உன் வயசு. உருவமும் உன்போல் பாரு தம்பி....இந்த யுத்தம் செய்யும் நாசத்தை எதுக்காக தம்பி இந்த பாழாப் போன சண்டை? இன்னைக்கு என் போல எத்தனை தாய்மார் கண்ணீர்ல தெரியுமா? எனக்கு மட்டுமல்ல அந்த போராளிகளின் தாய்மார். அவங்க மனசு படும் பாடு...ஏன் தம்பி யாராவது யுத்தத்தை நிறுத்திடவே மாட்டாங்களா?" பாட்டி புலம்பினாள்.

ரகுவுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. "தலதா மாளிகைக்கு போய் என்னோட மகனின் பிறந்த நாளைக்கு பிரார்த்தனை பண்ணிட்டு வர்றோம் தம்பி.....அது தான் என் மகனோட அப்பா. அது என் அக்காவின் பிள்ளைகள்...." பாட்டி தொடர்ந்தார் புலம்பினார்.

இறங்கும் போது பெரியவர் ரகுவின் தோள் தொட்டார். "ஒண்ணும் நெனக் காதீங்க தம்பி. மகன பறிகொடுத்ததிலிருந்து ஆச்சிக்கு கொஞ்சம் ஒரு மாதிரி...." ரகு மௌனமாய் மனப்பாரம் சுமந்து இறங்கினான்.



www.padippakam.com

# இரண்டு கட்டமாக முல்லைச் சமர்

## புலிகளின் முதல் படையணி தளம் திரும்பியது!

அரசாங்கத்துக்கும், புலிகளுக்கும் இடையிலான அரசியல், இராணுவ கௌரவப் பிரச்சனையாக முல்லைச் சமர் மாறியுள்ளது.

முல்லைச் சமரில் புலிகளின் நோக்கம் என்ன?

'ஓயாத அலைகள்' தாக்குதல் நடவடிக்கையின் முக்கிய இலக்கு முல்லைத்தீவு இராணுவ முகாம்.

முல்லைத்தீவு இராணுவமுகாம் கூட்டுப் படைத் தளமல்ல. இராணுவத்தினரை மட்டும் கொண்ட இராணுவ முகாமாகும்.

ஆயினும்-முல்லை இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

முல்லை இராணுவ முகாம் பகுதி படையினரின் கையைவிட்டுப் போனால், வடபகுதிக்கான கடற் போக்குவரத்தில் பாதிப்புக்கள் ஏற்படும்.

வன்னிப் பகுதியில் புலிகளின் இராணுவ மேலாதிக்கமும் வலுவாகிவிடும்.

வன்னியில் புலிகளுக்கு எதிராக பாரிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் முல்லை இராணுவ முகாம் ஒரு முக்கிய தளமாகும்.

முல்லை இராணுவ முகாம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு வந்தது.

அதன் காரணமாக முல்லைத்தீவு நகரில் குடியிருந்தவர்கள் இடம்பெயர்ந்தனர். 1991ம் ஆண்டின் பின்னர் முல்லைத்தீவு நகரப் பகுதி முழுவதும் இராணுவ முகாம் பகுதியாகிவிட்டது.

### முகாமில் கவனம்

யாழ்குடாநாட்டு யுத்தத்தின் பின்னர் புலிகளின் தளப்பிரதேசமாக வன்னி மாறிய பின்னர் எப்போதும் அங்கு ஒரு பாரிய நடவடிக்கையில் படையினர் ஈடுபடக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

அவ்வாறான சூழ்நிலையில் முல்லை முகாம்மீது புலிகளின் கவனம் திரும்பியது.

முல்லை முகாம் பகுதியை தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் படைபலத்தை எதிர்த்து நிற்கக்கூடிய ஆட்பலம் புலிகளுக்கு தேவை. அதைவிட முக்கியமாக கனரக ஆயுதங்கள், நீண்டதூர பீரங்கிகள் என்பவை தேவை.

ஆயினும் குறிப்பிட்ட நாட்களுக்குள் படையினர் போதிய தயாரிப்புக்களோடு களத்தில் இறங்க முடியாது என்பதால், ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை புலிகளால் தாக்குப்பிடிக்க முடியும்.

ஒரு முகாமில் இருந்து போதிய தயாரிப்புக்களோடு முன்னேறும்போது படையினருக்கு உள்ள சாதகங்கள்,

ஒரு முகாம் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் முன்னேறும்போது இருக்காது.

புதிதாக கொண்டு சென்று தரையிறக்கப்படும் படையினர் சூழலுக்கு பழக்கப்பட்டாக வேண்டும். முன் கூட்டியே தயார் நிலையில் உள்ள புலிகளோடு அவர்களது பதுங்கு நிலைகளை கண்டறிந்து போர்புரிவதிலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி எற்படும்.

### இரண்டாம் கட்டம்

எனவே- முல்லை முகாம் தாக்குதலுக்கு அடுத்த கட்டமாக புலிகளால் தொடரப்படும் மரபுச் சமர் வெற்றி-தோல்விக்கு அப்பால் ஒரு பரீட்சார்த்த மரபுப் போராக மாறியுள்ளது.

புலிகளின் பிரதான நோக்கம் முல்லை முகாமை தாக்குவதும். அங்குள்ள ஆயுதங்களை கைப்பற்றி மரபுச் சமருக்கான படைக்கலங்கள் சேகரிப் பதும்தான்.

அவ்வாறான தாக்குதல் மூலமாக படைத் தரப்புக்கு உளவியல் ரீதியான அதிர்ச்சி ஏற்படுத்துவதும், இராணுவரீதியில் தமது பலத்தை மீண்டும் பிரகடனம் செய்வதும்தான் புலிகளின் நோக்கம்.

எனவே-முல்லை முகாம் தாக்குதல் என்பது மூன்று நாட்களுக்கான திட்டமாகும்.

நான்கு நாட்களுக்குள் முகாம் தாக்குதல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் முடித்துக் கொள்வது என்பதுதான் முதல் கட்டம்.

அதற்கேற்ப முதல் கட்ட நடவடிக்கையை பூர்த்திசெய்துவிட்டு புலிகளின் முதலாவது படையணி வன்னித் தளத்துக்கு நாலாவது நாள் திரும்பிவிட்டது.

தமது காயமடைந்த உறுப்பினர்கள், மற்றும் முக்கிய உபகரணங்களுடன் முதலாவது படையணி தளம் திரும்பியது.

அவர்கள்தான் பலியான படையினரின் உடல்களையும் கையளித்தனர்.

முல்லையில் சமர் நடக்கும்போது வேறு திசைகளில் இருந்து ஏதாவது நகர்வுகள் ஏற்பட்டால் போரிடும் தேவைக்காகவே முதலாவது படையணியை பிரபாகரன் திரும்பி அழைத்துக் கொண்டார்.

நான்கு நாட்களுக்குப் பின்னர் புலிகளது முதலாவது படையணி திரும்பியபோதும், முல்லைச் சமரின் இரண்டாம் கட்டம் தொடர்ந்தது.

### புதிய படையணிகள்

இரண்டாம் கட்ட சமரில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவும், புதிதாக பயிற்சி பெற்ற படையணிகளும் போரில் ஈடுபடுத்தப் பட்டனர்.

கடற்புலிகள் அணியும் நான்காவது நாளுக்குப் பின்னர் கடற் சண்டையிலிருந்து விலக்கிக் கொள்ளப் பட்டதாக தெரிகிறது.



முல்லைச் சமரின் இரண்டாம் கட்டம் என்பது ஒரு பலப்பரீட்சைதான்.

இரண்டாம் கட்ட நடவடிக்கையில் புலிகளின் நோக்கங்கள் பின்வருமாறு.

1. மரபுச் சமரில் தமது திறனை வளர்த்துக் கொள்வது.

2. வன்னியில் எதிர்காலத்தில் படை நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் பரீட்சார்த்த களமாக பாவிப்பது.

3. படைத்தரப்பினர் வன்னியில் தமக்கெதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்துவிடாமல் தமது பலத்தை காட்டுவது.

4. யாழ் குடாநாட்டில் பாரிய மோதல் இன்றி தாம் பின்வாங்கியது தமது தந்திரோபாயமே தவிர, இராணுவ ரீதியான பலவீனமல்ல என்று நிரூபிப்பது.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை புலிகள் நிறைவு செய்துள்ளனர் என்றே கருதலாம்.

### தக்கவைக்க முடியுமா?

ஆயினும் முல்லைத்தீவு முகாம் பகுதியை புலிகள் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியுமா?

முல்லை முகாமை அண்டியுள்ள பகுதிகளில் படையினர் தரையிறங்குவதை புலிகளால் தடைசெய்ய இயலவில்லை.

அந்தப் பகுதிகளில் படையினர் மீண்டும் தமது நிலைகளை பலப்படுத்தி முன்னேற முடிந்துள்ளது.

கடற்பாதை வழியாக துருப்புக்கள் செல்வதை புலிகளால் தொடர்ந்தும் தடுக்க முடியவில்லை.

காரணம் கடற்புலிகளது படகுகள், படைக்கலங்கள் என்பவற்றைவிட, கடற்படையினரின் போர்க் கப்பல்களும், கருவிகளும் நேரடி கடற்சண்டைக்கு வாய்ப்பானவை.

மரபுப் போரில் அரச படைகளின் பிரதான பலம் கனரக ஆயுதங்கள். அவற்றையும் முல்லையில் கொண்டு சென்று இறக்க முடிந்திருக்கிறது.

படையினரை தரையிறங்க முடியாமல் புலிகளால் தடுக்க முடியாமையால், முல்லைத்தீவு முகாம் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் படையினர் வசம் செல்வதையும் புலிகளால் தடுக்க முடியவில்லை.

விமான எதிர்ப்பு ஆயுதங்கள், கனரக ஆயுதங்கள் என்பதை போதியளவு இருந்தால் மட்டுமே பரீட்சார்த்த சமரில் அவற்றை இழக்க துணியமுடியும்.

தற்போது உள்ள, கிடைத்த ஆயுதங்கள் எதுவானாலும் அவற்றை பாதுகாத்து மற்றொரு பாரிய சமருக்கு பயன் படுத்தவே புலிகள் நினைப்பர்.

படையினரின் பலம் மேலோங்கி சமர் கடுமையானால் தந்திரோபாயமாக பின்வாங்கக்கூடிய நிலையில்தான் புலிகள் சண்டையில் ஈடுபடுகின்றனர்.

எனவே-சுலபமாக கொண்டு செல்லக் கூடிய மோட்டார்கள் மற்றும் ஆயுதங்கள்தான் இவ்வாறான சண்டைகளில் புலிகளால் பாவிக்கப்படும்.

### மோட்டார் தாக்குதல்

பெரும்பாலும் மோட்டார் தாக்குதல்களையே புலிகள் நடத்துகின்றனர்.

தூக்கிச் செல்ல முடியாத கனரக ஆயுதங்களை வைத்துக்கொண்டிருந்தால் பின் வாங்கிச் செல்லும்போது கொண்டு செல்வது கடினம்.

எனவே முல்லைச் சமரைப் பொறுத்த வரை முகாம் தாக்குதல் நடந்து முடிந்து விட்டது. இப்போது தொடரும் இரண்டாம் கட்டம் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பதுதான் கேள்வி.

முல்லை முகாம் பகுதியை தொடர்ந்து புலிகள் தக்கவைத்து கொள்ளாவிட்டாலும், படையினர் முகாம் பகுதியை நோக்கிச் செல்ல எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்கிறார்கள். எவ்வளவு இழப்புக்களை சந்திக்கிறார்கள் என்பதை வைத்து தமது மரபுச் சமர் ஆற்றலை புலிகள் வெளிப்படுத்த நினைக்கிறார்கள்.

அதே சமயம் தமது தரப்பில் இழப்புக்களை குறைக்கும்வகையில் தான் புலிகளது போர்முறை அமைந்துள்ளதையும் கவனிக்க முடிகிறது.

### கௌரவப் பிரச்சனை

1991இல் ஆனையிறவு முற்றுகை ஒரு மாதம் நீடித்தது.

1991இல் சிலாவத்துறை முகாம் மீதான தாக்குதல் நான்கு நாட்கள் நடந்தது.

1993இல் புநகரி கூட்டுப்படை தளம் மீதான தாக்குதல் நான்கு நாட்கள் நீடித்தது.

இத்தாக்குதல்கள் அனைத்திலும் குறிப்பிட்ட முகாம்கள்தான் பிரதான இலக்காக இருந்தன. கள நிலவரத்தை பொறுத்து சண்டை நீடித்தது.

முல்லைச்சமர் அரசாங்கத்திற்கு ஒரு கௌரவப் பிரச்சனையாகிவிட்டது. எனவே என்ன விலை கொடுத்தும் முல்லை முகாம் பகுதிக்கு படைத்தரப்பு சென்றேயாகும். மீண்டும் அங்கு முகாமும் நிறுவப்படும்.

எனவே-முல்லைச் சமரில் முல்லை முகாம் பகுதிக்கு சென்றுவிடுவதே சமரில் அரசாங்கத்திற்கு கிடைக்கும் ஒரு ஆறுதல்.

முல்லை முகாம் பகுதிக்கு படையினர் சென்றடைய முடியும் என்பதில் சந்தேகமில்லை. எப்போது என்பது கள நிலவரத்தைப் பொறுத்தது.

ஆயினும், முல்லைச் சமரின் ஒட்டு மொத்தமான விளைவு என்று பார்த்தால் புலிகள் தமது நிரந்தர இராணுவத்தை மீண்டும் ஒழுங்கமைத்துள்ளனர். தமது பலநிலவரத்தில் ஏற்பட்டவிழ்ச்சியை தூக்கி நிறுத்தியுள்ளனர்.

வடபுலப் போர் நிலவரம் யாழ்ப்பாண குடாநாட்டு களத்தை மட்டும் வைத்து தீர்மானிக்கப்படக்கூடியதல்ல என்பதும் வெளிப் படையாகியுள்ளது.

**இரு தரப்புக்கும் கௌரவப் போர். முல்லை முகாமை படைகள் சென்றடையலாம். சமர் நீடித்த காலகட்டம் புலிகளின் 'இராணுவ இமேஜை' பலப்படுத்துவதாகவும். முல்லை முகாம் பகுதி படைகள் வசமாவது-அரசாங்கத்திற்கு கிடைக்கும் ஒரு ஆறுதலாகவும் சமரின் முடிவு அமையும்!**



## லேட்டஸ்ட் ரிப்போர்ட்

## பதட்டத்தை தூண்டும் முயற்சி

நாடெங்கும் பதட்ட நிலையை ஏற்படுத்தவே புலிகள் திட்டமிடுவதாகத் தெரிகிறது.

புதன்கிழமை கொழும்பில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு அவ்வாறான ஒரு நோக்கத்தின் வெளிப்பாடே என்று கருதப்படுகிறது.

முல்லையில் பெரும் சமர் மூண்டு, அங்குள்ள நிலவரம் தொடர்பாக தென் பகுதியில் பலவாறான கருத்துக்களும், ஊகங்களும், வதந்திகளும் பரவியிருந்தன. இந்நிலையில் கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பு பதட்டத்தை தூண்டும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் படையினர் நிலை கொண்டுள்ள போது நாட்டில் எங்குமே அமைதி நிலவ முடியாது என்று புலிகள் கூறி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

முல்லைச் சமர் நடைபெறும் நேரத்தில் கொழும்பு குண்டுவெடிப்பும் இடம் பெற்றமையால் தலைநகரில் உள்ள தமிழ் மக்களும் பதட்டம் கொண்டனர்.

1983 ஜூலை இனக்கலவரம் ஆரம்பித்த 13வது ஆண்டும் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இதுவரை பாரிய சமர்கள்

**1991** ஜூலை மாதம் ஆனையிரவு சமரில் புலிகளின் தரப்பில் ஆயிரம்பேர் வரை பலியானதாக அரசாங்கம் அறிவித்தது.

தமது தரப்பில் 526 பேர் பலியானதாகவும், 1500 பேர் காயமடைந்தனர் என்றும் புலிகள் தெரிவித்தனர். படைத்தரப்பில் 600 பேர்வரை பலியானதாகவும் புலிகளின் தரப்பு கூறியது.

1993 பூநகரி கூட்டுப்படை தளத் தாக்குதலில் படையினர் தரப்பில் 800 பேர் பலியானதாகவும், தமது தரப்பில் 456 பேர் பலியானதாகவும் புலிகள் அறிவித்தனர்.

தற்போது முல்லை முகாம் தாக்குதலில் இதுவரை தமது தரப்பில் பலியான 260 பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர். படையினருக்கு எதிரான தமது தாக்குதல்களில் மிகப்பாரியது என்று முல்லைத் தாக்குதல் தொடர்பாக புலிகளும், புலிகள் தவறான தகவல்களை வெளியிடுவதாக அரசாங்கமும் கூறிவருகின்றனர்.

முல்லைத் தாக்குதல் உயிரிழப்புக்கள் அதிகமான களமாக இருப்பதாக அஞ்சப்படுகிறது. கொடிய யுத்தத்தின்பின் அசுர வளர்ச்சி மனித உள்ளங்களை உலுக்குகிறது.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் ஒரு தவறு

எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் (பக்கம் 5) ஒரு தவறு. புலிகளது முதலாவது படையணி வன்னிக்கு திரும்பிய தகவலை வைத்து, முல்லையில் தமது நடவடிக்கைகளை புலிகள் முடித்துவிட்டதாக கருதி எழுதப்பட்டது. எனவே அதையொட்டியே விமர்சனம் அமைந்துள்ளது. உடனுக்குடன் கிடைக்கும் தகவல்களை வைத்து அவசரமாக எழுதும்போது ஏற்படும் தவறு இது.

பின்னர் வந்த தகவல்கள் புலிகள் 'ஓயாத அலைகள்' இரண்டாம் கட்ட நடவடிக்கையிலும் தொடர்ந்து ஈடுபடுவதாக தெரிவித்தன.

எக்ஸ்ரே ரிப்போர்ட் எழுதப்பட்ட பின்னர் வந்த தகவல்கள் இங்கு வெளியாகியுள்ளன.

-நாரதர்-



www.padippakam.com

www.padippakam.com

# முல்லைப் போர் முனையில் மூவாயிரம் புலிகள்!

## வன்னியில் மரபுச் சமருக்கான ஒத்திகை

முல்லைத்தீவு இராணுவ முகாமை கடல், தரை மூலமாக மும்முனைகளில் முற்றுகையிட்டு நடத்தப்பட்ட தாக்குதலுக்கு 'ஓயாத அலைகள்' என்று புலிகள் பெயரிட்டுள்ளனர்.

முகாம் தாக்குதலுக்குப் பின்னரும், முகாமை நோக்கிச் சென்ற படையினருக்கும் புலிகளுக்கும் இடையேயான பலத்த மோதல், வன்னியில் மரபுரீதியான போரில் ஈடுபடுவதற்கு புலிகளின் ஒத்திகையாகும் என்று நம்பப்படுகிறது.

### நேரடி மோதல்

முல்லைத்தீவு முகாம் உள்ள பகுதி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். எனினும் அதனை ஒரு குறிப்பிட்ட நாட்களின் பின்னர் புலிகளினால் தக்கவைத்துக்கொள்ள முடியாது. மரபுப் போரில் படையினரின் பலம் மேலோங்கியிருப்பதே அதற்குக் காரணம்.

ஆயினும் வன்னியில் எதிர்காலத்தில் படையினர் பாரிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அச்சுறுத்தும் வகையில் நேரடி மோதலிலும் புலிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலிலும், அதனைத் தொடர்ந்து நடந்த சமரிலும் மூவாயிரம் புலிகள்வரை பங்குகொண்டிருக்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

500க்கு மேற்பட்ட பெண்புலிகளின் அணியும், பத்துக்கு மேற்பட்ட கரும்புலிகள் அணி ஒன்றும் சமரில் ஈடுபடுத்தப்பட்டதாக மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லை தாக்குதலுக்கும், சமருக்கும் 'ஓயாத அலைகள்' என்று பிரபாகரன் பெயர் சூட்டியுள்ளார்.

24.7.96 புதன்கிழமைவரை தமது தரப்பில் பலியான 260 பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர். அதில் 90 பேர் பெண் புலிகளாகும்.

முகாம் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், முகாம் நோக்கி முன்னேறும் படையினர் மரபுரீதியான போர் முறையில் தமக்குள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டது.

### பாரிய சமர்

வடக்கு-கிழக்கில் கடந்த பதின்மூன்று வருடங்களில் நடைபெற்ற சமர்களில் மிகப் பாரியதும், உயிர் அழிவுகள் அதிகமாக ஏற்பட்டிருப்பதும் முல்லைச் சமரில்தான் என்று அஞ்சப்படுகிறது.

பிரபாகரனின் நெறிப்படுத்தலின்கீழ், புலிகளின் மூத்த தளபதிகளான பால்ராஜ், சொர்ணம், சூசை ஆகியோர் தலைமையில் மூன்று முனைகளில் முல்லை முகாம் நோக்கி புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

புலிகளின் தரப்பிலும் தாக்குதல் பிரிவுத் தலைவர்களான லெப்டினன்ட் கேணல், கப்டன், லெப்டினன்ட் தரத்திலானவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். எனினும் இதுவரை தமது தரப்பில் பலியானவர்களது தரநிலை குறித்து புலிகள் விபரம் தெரிவிக்கவில்லை.

கடந்தவருடம் வெலிஓயா முகாம் தாக்குதலில் 180 புலிகள் பலியானார்கள். வெலிஓயா முகாமுக்கும் முல்லைத்தீவு முகாமுக்கும் இடையே உள்ள தூரம் முப்பத்தைந்து கிலோ மீட்டர்.

முல்லைச் சமரில் பலியான புலிகளின் உடல்களும், படையினரின் உடல்களும் கிளிநொச்சியில் வைக்கப்பட்டிருந்தன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியும் பார்வையிட்டார்.

### இடம்பெயர்வு

இதேவேளை முல்லைத்தீவில் உள்ள மூவாங்கேணி, முள்ளியவளைப் பகுதிகளில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஷெல் வீச்சு காரணமாகவே அவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சர்வதேச செய்தி நிறுவனங்கள் முல்லைச் சமர் தொடர்பாக முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

கெரில்லாத் தாக்குதலிலும், மரபுப் போர் முறையிலும் புலிகள் தமது திறனை வெளிப்படுத்திய சமர் என்று பி.பி.சி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணதிலக கருத்துக்கூறும் போது அரசுக்கும், படைகளுக்கும் உளவியல் ரீதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த அதனை மறுத்துள்ளார். 'அவ்வாறு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. படையினர் தொடர்ந்தும் உற்சாகமாகப் போரிட்டு வருகின்றனர்' என்று அவர் கூறியிருக்கிறார்.

### உறுதிப்படுத்தாத தகவல்

முல்லை சமருக்கு மூன்று அல்லது நான்கு நாட்களே திட்டமிடப்பட்டிருந்தது. போர்முனை நிலவரத்தைப் பொறுத்தே புலிகளால் சமர் மேலும் தொடரப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைச் சமரில் பிரபாகரன் காயமடைந்ததாக வெளியான செய்தியிலும் உண்மை இல்லை எனத் தகவல்கள் கூறுகின்றன. புலிகள் இயக்க முக்கிய தளபதிகளில் ஒருவரான, லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ளவர் ஒருவரும் பலியாகியிருக்கலாம், அல்லது காயமடைந்திருக்கலாம் என்று சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இச் செய்தி எழுதப்படும்வரை அதனை உறுதி செய்ய இயலவில்லை.

### இறுதித் தகவல்

முல்லை முகாமில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பற்றிய பூரண விபரங்களை படைத்தரப்பு தெரிவிக்கவில்லை. மரபுப் போருக்கு ஏற்ற கனரக ஆயுதங்கள் புலிகளிடம் சென்றிருந்தால் வன்னி போர் நிலவரம் கடுமையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மரபுப் போருக்கு ஏற்ற டாங்கிகளும், ஆட்டிலறிப் பீரங்கிகளும் புலிகளின் தேவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னர் வெலிஓயா முகாம் தாக்கப்பட்ட போது அங்கே ஆட்டிலறி பீரங்கிகள் இருந்தன. டாங்கிகளும் இருந்தன. படையினர் அவற்றை பாதுகாத்துக் கொண்டனர்.

பாரிய முகாம்களில் ஆட்டிலறிப் பீரங்கிகள், டாங்கிகள் என்பன இருப்பது வழக்கமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் படைத்தரப்பினர் இதுவரை அது பற்றி எதுவும் தெரிவிக்காமையால் விபரம் வெளியிடமுடியவில்லை.

# பட்டமும்-பெயரும்

முல்லைத் தாக்குதலுக்கு புலிகள் சூட்டியுள்ள பெயர் 'ஓயாத அலைகள்'.

1985-86 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயக்கங்களுக்கு ஒவ்வொரு பட்டப் பெயர் சூட்டியிருந்தனர் பொதுமக்கள். திரைப்படப் பெயர்களில் பட்டங்கள் சூட்டப்பட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கு 'பயணங்கள் முடிவதில்லை.'

ஈரோசுக்கு 'தூரத்து இடி முழக்கம்' (கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தியதால் அந்தப் பட்டம்.)

புளொட்டுக்கு, 'விடியும் வரை காத்திரு.'

ரெலோவுக்கு, 'துறல் நின்னு போச்சு.'

புலிகள் இயக்கத்துக்கு சூட்டப்பட்ட பட்டப்பெயர் 'அலைகள் ஓய்வதில்லை.'

தாக்குதல்களை விடாமல் தொடர்ந்து நடத்திக்கொண்டிருப்பவர்கள் என்பது அதன் அர்த்தம்.

அதனை நினைவில் வைத்துத்தான் முல்லைச் சமருக்கு 'ஓயாத அலைகள்' என்று பிரபாகரன் பெயர் வைத்தாரோ தெரியவில்லை.

'அலைகள் ஓய்வதில்லை' என்று பெயர் வைப்பது ஒப்பரேசனுக்கு ஏற்ற பெயர் அமைப்பல்ல என்பதால் 'ஓயாத அலைகள்' என்று பெயர் இட்டிருக்கலாம்.

# வெறிச்சோடியுள்ள வாகரை

மட்டக்களப்பு- வாகரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 'அலைவேக' தேடியழிப்பு நடிவடிக்கைகளின் போது அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று குடியமரவில்லை. ஆனால் தமது இருப்பிடங்களைச் சென்று பார்த்து விட்டுத் திரும்பி வருகிறார்கள். தற்சமயம் பொதுவாக மக்களோ, புலிகளோ, படையினரோ இல்லாத இடமாக வாகரைப் பகுதி காணப்படுகிறது. நடவடிக்கை மேற்கொண்டு அப்பகுதிக்குச் சென்ற படையினர் அங்கு புலிகள் வைதிருந்த கரியாலயத்தில் தொங்கிய பதாகைகளையும், பலகைகளையும் தீயிட்டுக் கொளுத்தியிருந்தனர். புலிகளின் காரியாலயத்தையோ, மாவீரர் துயிலும் இல்லத்தையோ படையினர் எதுவும் செய்யவில்லை.

# "தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கமாட்டேன்"

## தேரோவிடம் அநுரா உறுதி தெரிவிப்பு

பொதுஜன முன்னணி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட தீர்வுத்திட்ட ஆலோசனைகளை எக்காரணங்கொண்டும் தான் ஆதரிக்கப்போவதில்லை என அநுரா பண்டாரநாயக்கா உறுதி கூறியிருக்கிறார்.

கண்டியிலுள்ள மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெல சிறி தர்மரக்ஷித விபஸ்ஸி தேரோவிடமே திரு. பண்டாரநாயக்கா இவ்வாறு கூறினார்.

கடந்த 18ம் திகதி வியாழக்கிழமை கண்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கூட்டத்தில் கலந்துவிட்டு மகாநாயக்க தேரோவை திரு. பண்டாரநாயக்கா சந்தித்தார்.

சங்கைக்குரிய பிக்குமாரில் பெரும்பான்மையானோர் தீர்வுத்திட்ட ஆலோசனைகளை முற்று முழுதாக எதிர்ப்பதாகவும் அத்தகைய திட்டம் அமுல்படுத்தப்பட்டால் அதுவே சிங்கள-பௌத்த இனத்தின் அழிவுக்குக் காரணமாகிவிடும் என்றும் அத்தகைய ஆலோசனைகளை ஆதரிக்கலாகாது என்றும் மகாநாயக்கதேரோ வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

அநுரா பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், எந்நிலையிலும் தான் மகா சங்கத்தினரின் கருத்துக்கு மாறாக நடக்கப்போவதில்லை என்று வாக்களித்தார்.

தனது தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, திரு.செல்வநாயகத்துடன் செய்துகொண்ட 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தை பௌத்த சங்கம் எதிர்த்தமையினால் கிழித்தெறிந்ததை எடுத்துக்கூறி, அத்தகைய மரபில் உதித்த தான் மகாசங்கத்தினரின் கருத்துக்கு முரணாக எக்காலத்திலும் நடக்கப் போவதில்லை என்று உறுதி கூறினார்.

# தமிழ், முஸ்லிம் கட்சிகளை சமாளிக்கும் முயற்சி!

## ஐ.தே.கட்சி விவாதத்துக்கு அழைப்பு விடுப்பு!

(அரசியல் நிருபர்)

ஐக்கிய தேசியக்கட்சி தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா 22.7.96 அன்று தமிழ், முஸ்லிம் கட்சிகளை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளே சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தன.

சில வாரங்களுக்கு முன்னர் ஐந்து தமிழ் கட்சிகளை சந்தித்தும் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தூதுக்குழு பேச்சு நடத்தியிருந்தது. அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ரணிலைத் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தது.

சகல சந்திப்புக்களிலும் ஒற்றையாட்சி முறையை மாற்ற முடியாது என்பதே ஐ.தே.கட்சியின் நிலைப்பாடாகும் என்று வலியுறுத்தப்பட்டது.

ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது என்பதை சகல தமிழ் கட்சிகளும் தமது நிலைப்பாடாக முன்வைத்திருந்தன.

முஸ்லிம் காங்கிரசும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறது.

இந்நிலையில் ஐ.தே.கட்சிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையே விரிசல்கள் தோன்றுவதை தடுக்கவும், ஐக்கிய தேசியக் கட்சிமீது தமிழ், முஸ்லிம் மக்களின் அதிருப்தி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும் ரணில் முயற்சியில் இறங்கியுள்ளார்.

அதன் ஒரு கட்டமாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளையும், முஸ்லிம் காங்கிரசையும் அழைத்து ரணில் பேச்சு நடத்தியுள்ளார். ரணிலோடு ஐ.தே.க.வின் முக்கிய தலைவர்களும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தனது கட்சியில் உள்ள தீவிர இனவாதப் போக்குடையோரையும் திருப்திசெய்ய வேண்டும். தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் சமாளிக்க வேண்டும் என்பதுதான் ரணிலின் நோக்கம்.

### புதிய யோசனை

ஒற்றையாட்சி தொடர்பாக பின்னர் விவாதிக்கலாம் என்று ஒத்திவைத்துவிட்டு, அதிகாரப் பரவலாக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை முதலில் விவாதிக்கலாம் என்று ஒரு யோசனை ஐ.தே.கட்சி தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய சந்திப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டபோது நீலன் திருச்செல்வம் அதனை ஆமோதித்தார். கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் அதற்கு உடன்படவில்லை.

ஒற்றையாட்சி முறை தொடர்பாக ஒரு முடிவுக்கு வராமல் அதிகாரங்களை எப்படி பகிர்வது என்று விவாதிப்பதில் அர்த்தமில்லை என்று கூறினர் மு.சிவசிதம்பரம். தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளும், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியும் அதனை ஆமோதித்தனர்.

மீண்டும் சந்திப்பதற்கான முடிவோடு சந்திப்பு முடிவடைந்தது.

### சமாளிப்பு

தீர்வுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை கோருமாறு ஜனாதிபதி தமிழ் கட்சிகளிடம் கூறியிருக்கிறார். பொது ஜன முன்னணியின் ஆட்சியில் தீர்வொன்று காணப்படுவதை ஐ.தே.கட்சிக்குள் பலர் விரும்பவில்லை. அதேவேளை அடுத்த தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் வாக்காளர்களது தேவையும் ஐ.தே.கட்சிக்கு அவசியப்படுகிறது.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி தீர்வு முயற்சிகளுக்கு எதிராக இருப்பதாக கருதப்பட்டு விடக்கூடாது என்பதால், தமிழ், முஸ்லிம் கட்சிகளோடு உறவை முறியாமல் வைத்துக்கொள்ள ரணில் விரும்புகிறார்.

ஆனால், ஒற்றையாட்சி தேவையா, இல்லையா என்ற விவாதத்துக்கு அவர் தயாராக இல்லை. அப்படியான ஒரு விவாதம் நடத்தினால் ஒற்றையாட்சி முறையை விட்டுக்கொடுக்காத கட்சி என்ற பிரசாரத்தை தெற்கில் முன்னெடுக்க முடியாமல் போய்விடும்.

பொது ஜன முன்னணியின் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பதற்காக சொல்லப்படும் பிரதான காரணமும் அடிபட்டுப் போய் விடும். அது தவிர கட்சிக்குள்ளும் ரணிலின் தலைமைக்கு ஆபத்து ஏற்படும்.

### நாடகம்

அடுத்த தேர்தல்வரை ஒருவாறு சமாளித்துக்கொண்டு செல்லத்தக்கவகையில் தமிழ் கட்சிகளுடனும், முஸ்லிம் காங்கிரசுடனும் விவாதம், பேச்சுவார்த்தை என்று காலத்தை இழுக்கவே ஐ.தே.கட்சி விரும்புகிறது.

இந்த நாடகத்தில் தமிழ் கட்சிகளும், முஸ்லிம் காங்கிரசும் பங்கேற்கப் போகின்றனவா அல்லது தீர்க்கமாக தமது நிலைப்பாட்டை முன்வைக்கப்போகின்றனவா என்பதுதான் முக்கியமான கேள்வியாகும்.

ஒற்றையாட்சி உள்ளவரை நியாயமான அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்று கூறும் கட்சிகள், அந்த விடயத்தில் ஐ.தே.கட்சி ஒரு முடிவுக்கு வராதவரை அதிகாரப் பரவலாக்கல் குறித்து விவாதிப்பது சரியாக இருக்காது என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

# சுவிஸில் வீரமக்கள் தினம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சுவிஸ் கிளையினரால் வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. சுவிஸில் உள்ள சூரிச் நகரில் நடைபெற்ற வீரமக்கள் தினக் கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர்.

நினைவுதினக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

புளொட் உப தலைவர் மாணிக்கதாசன், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. ஆகியோர் அனுப்பி வைத்த செய்திகளும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டதுடன், துண்டுப்பிரசுரங்களாகவும் விநியோகிக்கப்பட்டன.

கூட்டத்தில் உரையாற்றியவர்கள் இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள்.

கூட்டம் நடைபெற்ற மண்டபத்தில் கடந்த கால ஆவணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) சுவிஸ் கிளையினரால் தமிழ் தேசிய வீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

83 ஜூலை 25-27 திகதிகளில் வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட போராளிகளின் நினைவாகவே தமிழ் தேசிய வீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்தினத்தை முன்னிட்டு துண்டுப்பிரசுரம் ஒன்றை சுவிஸ் கிளையினர் வெளியிட்டிருந்தனர்.

# இளம் பெண்களை ஏமாற்றும் போலி முகவர்கள்!

## விடுதிகளில் வைத்து பாலியல் வதை!

இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் பெண்களை ஏமாற்றும் மோசடிக் கும்பல் ஒன்று தொடர்பான திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள திருமணமாகாத பெண்கள், மற்றும் திருமணமான இளம்பெண்களிடம் ஒரு கும்பல் தமது மோசடி வித்தைகளை அரங்கேற்றி வருகிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன. உங்களையும் அனுப்பி வைக்கிறோம். கை நிறையச் சம்பளம் கிடைக்கும் என்று அந்தக் கும்பல் ஆசைகாட்டுகிறது.

சிலரிடம் 7 ஆயிரம் ரூபாமுதல் 10 ஆயிரம் ரூபாவரை கட்டணமாக அறவிட்டுக் கொள்கின்றனர்.

அதன்பின்னர் குறிப்பிட்ட பெண்கள் கொழும்புக்கு அழைத்து வரப்படுகின்றனர். கொழும்பில் உள்ள சில விடுதிகளில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அதன்பின்னர்தான் அந்தக் கும்பலின் சுயரூபம் தெரியவருகின்றது.

மேலும் மேலும் பணம் கேட்டு தொல்லைப் படுத்துவார்கள். பணம் இல்லையென்றதும் பாலியல் வதைகளுக்கு உள்ளாக்குவது, ஆசை வார்த்தைகளுக்கு இரையாகும் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடச் செய்வது போன்ற கொடுமைகள் நடைபெற்று வருகின்றன.

சில பெண்களுக்கு போதை மருந்து கொடுத்து தமது விபச்சார தொழிலுக்கு அக் கும்பல் பயன்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது.

இது தவிர, மற்றொரு கொடுமையும் நடக்கிறது. வெளிநாடு செல்ல இரத்த பரிசோதனை செய்யவேண்டும் என்று கூறி அடிக்கடி இரத்தம் பெற்றுக்கொள்ளுகின்றனர். அந்த இரத்தம் நகரில் உள்ள சில தனியார் மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பல பெண்கள் மன நோயாளிகளாக மாறியிருக்கின்றனர்.

இத்தனை கொடுமை நடந்தும் பாதிக்கப்பட்ட பெண்கள் துணிந்து முறையீடு செய்யத் தயங்குவதால் அக் கும்பல் தனது தொழிலை தொடர்ந்தும் நடத்திவருகின்றது.

இத்தகைய போலி முகவர்கள் குறித்து முறையீடு செய்யப்பட்டால் மேலும் பல உண்மைகள் வெளிவருவதோடு, மேலும் அப்பாவிப் பெண்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் வழி பிறக்கும்.

# பிரதியமைச்சரின் மட்டக்களப்பு விஜயம்!

## சரித்திரம் காணாத சல்லடைச் சோதனை!

மட்டக்களப்பு, ஏறாவூர் போன்ற இடங்களில் பல வைபவங்கள் கடந்த 21.07.96 அன்று தபால் தந்தி தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சரின் ஏற்பாட்டில் நடந்தேறின. பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்டப் பா.உ.வுமான M.L.A.M.ஹிஸ்புல்லாஹ் அவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதை யிட்டு என்றுமில்லாதவாறு மிகப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததை மக்கள் கண்டு அனுபவிக்கக்கூடியதாகவிருந்தது. சில இடங்களில் பொதுப் போக்குவரத்துத் தடைப்படுத்தப்பட்டு வாகனங்களும், பயணிகளும் பாதசாரிகளும் சல்லடைச் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

தபால் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றோருக்கான சான்றிதழ் வழங்குவதற்காக பிரதம தபால் கந்தோரில் நடந்த வைபவத்திற்கு பிரதி அமைச்சர் வந்ததால் பிரதம தபாற்கந்தோர் வீதி பொதுப் போக்குவரத்திற்கு முற்றாக மூடப்பட்டது. இதேபோல் ஏறாவூரில் ரெலிகொம் உப நிலையமொன்றைத் திறக்கும் வைபவத்தில் பிரதி அமைச்சர் கலந்து கொண்டதால் மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதி ஏறாவூரில் தடைப்படுத்தப்பட்டது. இதனால் பயணிகளுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது.

மேற்படி வைபவங்களில் கலந்து கொள்வதற்கு அழைக்கப்பட்டிருந்த திணைக்களத் தலைவர்கள், உயரதிகாரிகள், செய்தி நிருபர்கள் எனப் பல்வேறு தரத்தினரும் வைபவம் நடைபெற்ற நுழைவாயிலில் கைகளை உயர்த்தியபடி குனிந்த நிலையில் நிற்குமாறு பணிக்கப்பட்டு அவர்கள் உடல் முழுக்க "சோதனைத்" தேடுதல் நடத்தப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

மஹாபொல வைபவம் நடந்த தேவநாயகம் மண்டபத்தின் முன்னாலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் கண்டிப்பாகப் பூட்டி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

சல்வார் அணிந்த யுவதிகள் பக்கம் பாதுகாப்புக்கவனம் திரும்பியிருக்கிறது. அன்றைய தினம் இத்தகைய உடை அணிந்த யுவதி ஒருவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

பிரதி அமைச்சருக்காக அன்று மேற்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு இறுக்கங்களை மீண்டுமொருமுறை நினைவூட்டிப் பார்க்க மக்கள் விரும்பவில்லை. இது சரித்திரம் காணாத சல்லடைச் சோதனை என்று வருணிக்கப்பட்டு விசனம் தெரிவிக்கப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# "தொலைக்காட்சிப் பெட்டிக்குள் குடும்பம்"
# தமிழர் நிலை குறித்து கவிஞர் வைரமுத்து

"குடும்பத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இருந்த நிலை போய், தொலைக் காட்சிப்பெட்டிக்குள் குடும்பம் நடத்தப் பழகிவிட்டான் தமிழன்." இவ்வாறு தமிழக கவிஞர் வைரமுத்து கூறியுள்ளார். கடந்த ஜூலை 13ம் திகதி தனது பிறந்தநாளை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே அவ்வாறு கூறியிருக்கிறார்.

தனது பிறந்தநாளை முன்னிட்டு நா.காமராசன், கே.சி.எஸ். அருணாசலம் ஆகிய மூத்த கவிஞர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கி கௌரவித்தார் வைரமுத்து.

கவிஞர் வைரமுத்து தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

இருபத்தோராம் நூற்றாண்டு ரயிலைப் பிடிக்க தமிழர்கள் தயாராகிவிட்ட சத்தம் திட்டுத் திட்டாய்க் கேட்கிறது.

அவர்கள் பெட்டிகளைத் திறந்து தங்கள் சரக்குகளைக் கொஞ்சம் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

எண்ணிப்பாருங்கள். என்னென்ன எடுத்து வைத்திருக்கிறீர்கள்?

ஆடைகள், ஆபரணங்கள், வங்கி கணக்குப் புத்தகம், சேமிப்பு பத்திரங்கள், மருந்துப் புட்டிகள், கணிப்பொறி, தூய்நீர் (மினரல் வோட்டர்), தொலைச் செய்தி (பேஜர்) கைத்தொலைபேசி (செல்லுலர் ஃபோன்) எல்லாவற்றையும் மறக்காமல் எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

ஆனால் தலையாய ஒன்றை மட்டும் எடுத்து வைக்கத் தவறிக்கொண்டு இருக்கிறீர்கள்.

அதாவது தமிழை எடுத்துவைக்கத் தவறிவிட்டீர்கள். மொழியை மறந்து செய்யப்படுகிற அறிவியல் மாற்றம் என்பது முகத்துக்கு வெளியே வைக்கப்படும் பொட்டைப் போன்றதாகும்.

வயிற்றுக்குப் பயன்படும் மொழிகளையே நேசிக்கும் தமிழர்களே! வாழ்வுக்குப் பயன்படும் தாய் மொழியை மறந்துவிடாதீர்கள்.

ஆங்கிலம் கற்ற புதிய தலைமுறையின் கையில் தமிழ் என்பது, குழந்தைகளின் கையில் இருக்கும் முட்டைபோல் எப்போதும் உடைந்துவிடும் அபாயத்தில் உள்ளது.

கலைஞரின் அரசு தமிழுக்கு வேலியாக இருக்கும் என்பது திண்ணம். ஆனால் முத்தமிடுவதற்கும், முதலிரவுக்கும்கூட அரசாங்க ஆணையை எதிர்பார்க்கவேண்டும் என்ற அவசியமில்லை.

தமிழ் உணர்வு அரசாங்கத்தில் தொடங்கி மக்களை அடையவேண்டும்.

எல்லாப் பேதங்களையும் கடந்து நாம் தமிழ் என்ற வானத்தின் கீழே ஒன்றுபடுவோம். உலக குடிமக்களாய் உயர்வோம்.

குடும்பத்துக்குள் தொலைக்காட்சிப்பெட்டி இருந்ததுபோக, தொலைக்காட்சிப் பெட்டிக்குள் குடும்பம் நடத்தப் பழகிவிட்டான் தமிழன். இன்று தமிழை சொல்லித்தர வேண்டிய பொறுப்பு தொலைக்காட்சிகளுக்கும் உண்டு.

இவ்வாறு கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

# "கண்டி பெரியாஸ்பத்திரியில் பிரேத அறை"
# முஸ்லிம்களின் கோரிக்கை நிராகரிப்பு

(கண்டி நிருபர்)

கண்டி பெரியாஸ்பத்திரியில் கடந்த பல்லாண்டுகாலமாக இயங்கி வந்த முஸ்லிம் மக்களுக்கான பிரேதச் சாலை தரைமட்டமாக்கப்பட்டதையடுத்து, அதற்குப் பதிலாக புதிய பிரேதச் சாலை ஒன்றை நிறுவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவ்வேண்டுகோளை சுகாதார அமைச்சின் கட்டிடப் பிரிவுப் பணிப்பாளர் நிராகரித்துள்ளார்.

கண்டி பெரியாஸ்பத்திரி சவச்சாலைக்கு அருகில் முஸ்லிம்களுக்கான பிரேத அறையும் இயங்கிவந்தது. அங்கு புதிய கட்டிட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவென முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சவச்சாலை தகர்க்கப்பட்டது.


இதனையடுத்து ஒரே பிரேதச் சாலையில் முஸ்லிம்களின் பிரேதங்களும் போடப்பட்டு வருகின்றன. இந்த நிலைமையைச் சுட்டிக்காட்டி மத்தியமாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் இலாஹி ஆப்தீன் சுகாதார அமைச்சின் கட்டிடப் பிரிவுக்கு இதுபற்றி எழுதி இருந்தார். அத்துடன் முஸ்லிம்களுக்கென முன்பிருந்ததுபோல் சிறிய அளவில் ஒரு அறையை நிர்மாணிக்குமாறும் கேட்டிருந்தார். இவரது இந்த வேண்டுகோள் இப்போது நிராகரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பிரஸ்தாப விடயம் இப்பொழுது கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தின் முன்னிலையில் பிரஸ்தாபிக்கப்பட்ட பொழுது, பணிப்பாளரின் கண்டிப்பான உத்தரவு பற்றி சங்கம் பெரும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# 'காலக்கீறல்கள்' வெளியீட்டுவிழா

தினமுரசால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இளம் எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சத்தின் 'காலக்கீறல்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா 30.06.96 ஞாயிறன்று நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

உவர்மலை கிராமோதய சபையாரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விழாவுக்கு பதிப்பகத் திணைக்களப் பணிப்பாளர் து.குலவீரசிங்கம் தலைமை தாங்கினார்.



நூல் வெளியீடு கல்வி பண்பாடு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் சுந்தரம் திவகலாலாவால் நிகழ்த்தி வைக்கப்பட்டது.

திரு.ஜி.பி.வேதநாயகம், திருமதி. ப.வன்னியகுலம் ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்தினர்.

இருபத்தைந்து சிறுகதைகளைக் கொண்ட இத் தொகுப்பின் பெரும்பாலான சிறுகதைகள் தினமுரசில் வெளியானவை. நூலாசிரியர் தனது நூலிலும், உரையிலும் தன்னை அறிமுகப்படுத்தியதோடு தனது ஆக்கங்களைத் தொடர்ந்து வெளியிட்ட தினமுரசுக்கு தன் நன்றியறிதலைத் தெரிவித்துள்ளார்.

இந்நூலினால் கிடைக்கும் நிதி பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டுக்காகச் செலவழிக்கப்படும் என்று வெளியீட்டாளர் செ.பிரபாகரன் (நிருவாக சேவை அதிகாரி) பார்வையற்றோர் சார்பில் தெரிவித்தார். பல ஆண்டுகளுக்குப்பின் நூல் வெளியீட்டு விழாவொன்றுக்கு மண்டபம் நிறைந்து பார்வையாளர்கள் வெளியேயும் திரண்டிருந்த செழுமையை காலக்கீறல்கள் வெளியீட்டு விழா பெற்றுள்ளது. (திருமலை நிருபர்)

# கவனிக்குமா பிரதேச சபை?

பொத்துவில் பிரதேச சபைக்குட்பட்ட களப்புக்கட்டு, பாக்கியவத்தை கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மக்கள் தினந்தோறும் பல இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். காரணம் இப்பகுதியில் இருக்கும் வீதிகள் சட்ட விரோதமாக மரம் கடத்தும் மாட்டு வண்டிச் சொந்தக்காரர்களினால் முறைகேடான பாவனைக்குட்பட்டு வருவதாகும். இவ்வீதிகளில் செல்லும் டிரக்டர் ஓட்டுநர்கள், டிரக்டர்களின் வேகத்தை கூட்டி புழுதியைக்கிளறி மக்களை வெறுப்படையச் செய்கின்றார்கள். மழைகாலத்தில் வெள்ளம் கரை புரண்டோடும் இவ்வீதிகள் வெய்யில் காலங்களில் நன்கு உலர்ந்து மணல்மேடாகக் காட்சி தருகின்றன. துவிச்சக்கரவண்டிகளில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் தங்கள் துவிச்சக்கரவண்டிகளை (500) ஐநூறு மீட்டர் தூரம் தள்ளிக் கொண்டே செல்ல வேண்டும்.

அத்தோடு இப்பகுதியில் பல கல் வீடுகள் இருந்தும் கூட மின் கம்பங்களோ அல்லது மின்சாரமோ இல்லாத நிலையில் பயங்கரமான சூழலில்– துர்ப்பாக்கிய நிலையோடு மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதனோடு இணைந்தாற்போல் சிறிய குட்டை ஒன்றும் உள்ளது. இதில் தினந்தோறும் பொதுச் சந்தையில் வீசப்படும் கழிவுப் பொருட்களும், இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் மீதக் கழிவுகளும், மரக்கறிக் கழிவுகளும் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் துர் நாற்றமும், சுகாதார சீர்கேடுகளும், நுளம்பின் தொல்லைகளும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

இக்குட்டைகளில் இருந்து வெளியாகும் அசுத்தத்தன்மைகள் பக்கத்து வீடுகளில் உள்ள கிணறுகளுக்கும் பரவிச் செல்வதால் கிணற்று நீரும் அசுத்தமான நிலையில் மக்கள் திணறிக் கொண்டிருக்கின்றனர். கிணற்று நீரும் அசுத்தமானபோது குடிநீருக்கு இப்பகுதி வாழ்மக்கள் என்ன செய்வதென்றே முழிக்கின்றார்கள்.

கே.எம்.எம்.இப்றாகீம், பொத்துவில்.


## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் க்கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


# 2000 மாணவர்கள் ஆசிரியர்கள் 41

(காரைதீவு நிருபர்)

கல்முனை வலயத்திலுள்ள தமிழ் தேசிய பாடசாலையில் 30 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுகிறதாம். எப்படி? நம்புகிறீர்களா? ஆம் உண்மை. அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா தேசியகல்லூரி அதிபர் கே.இரத்தினவேல் கூறுகிறார்.

அங்கு சுமார் 2000 மாணவர்கள் இருப்பதோ 41 ஆசிரியர்கள்.

சாதாரண பாடசாலையா? இல்லை தேசியபாடசாலை! ஏன் தமிழ்ப்பாடசாலை என்றா இந்நிலை? யாரிடம் போய் அழுவார்!

தனக்குத் தெரிந்த படித்த இளைஞர்களை தொண்டரடிப்படையில் வேலை வாங்கி சமாளிக்கிறார். இத்தனைக்கும் இவ்வாண்டு "பொன் விழா"வைக் காண உள்ளது இப்பாடசாலை.

தேசியபாடசாலை அந்தஸ்து தேவைதானா? சிந்தியுங்கள்.

# கவனிப்பாரற்ற பாதை

கல்கமுவ அனுராதபுர பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் வரா வெவ, சோலேவெவ பிரதான வீதி வருடக்கணக்கில் கவனிப்பாரற்ற நிலையில் சீர்குலைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

இப்பாதையில் சேவையில் ஈடுபடும் அரச பஸ் ஊழியர்கள்கூட "பாதை சீரமைக்கபட வேண்டும்: இல்லையானால் சேவையில் ஈடுபட மாட்டோம்" என சுமார் ஒரு வாரம் பகிஷ்கரிப்பு நடாத்தியும் எவ்வித பலனையும் இதுவரை காணவில்லை.

அன்சீர் ஏ.மஜீட், கல்கமுவ.


## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜூலை 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST..) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax:436439
ஒகஸ்ட் 4,5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஒகஸ்ட் 11, 12, 13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOA விலும் சந்திக்கலாம்.


## செல்வன். ஜெயபிரவீன்

பிறந்தநாள் வாழ்த்து



1 வது பிறந்த நாள் 29 7 96

இல.71/1 அல்விஸ்டவுன் வத்தளையைச் சேர்ந்த ஜெயரட்ணம்–மலர்மதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜெயபிரவீன் தனது முதலாவது பிறந்த தினத்தை 29-07-1996 வத்தளையில் தனது அத்தை வீட்டில் கொண்டாடு கின்றார். பிரவீனை காவத்தை, வத்தளை, ரக்குவானை, கொழும்பு, முந்தல், மட்டக்குளி, ஆராச்சிகட்டுவ ஆகிய இடங்களிலுள்ள தாத்தா, பாட்டி, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், மாமாமார்கள், அத்தைமார்கள், மச்சான்மார்கள், மதினிமார்கள், அண்ணன்மார்கள், அக்காமார்கள், தங்கை மற்றும் உற்றார் உறவினர்கள் இயேசுவின் கிருபையால் நற்சுகம் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:–ஜெயரட்ணம்-கொழும்பு-11


## Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும்
விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்............................
விலாசம்............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S. மணி
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030







படிப்பகம்

www.padippakam.com




# மூன்றாவது பெரும் சமர்

**நாரதர்**

எப்பாடுபட்டாவது வன்னியில் தமது தளப்பிரதேசத்தை பாதுகாத்தே தீர வேண்டும். புலிகளுக்குள்ள நிர்ப்பந்தம் அதுதான்.

யாழ் தளப்பிரதேசத்தை பாதுகாப்பதற்கு புலிகள் முயற்சித்தபோது பிரபாகரன் பயன்படுத்திய தந்திரம், "எதிரி நம்மை தேடி வருவதற்கு முன், நாம் எதிரியைத் தேடிச் சென்று தாக்குவது" என்பதுதான்.

அதன் ஒரு கட்டமாகவே பலாலி கூட்டுப் படை தளத்தில் இறங்கிய விமானங்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

பாலாலி கூட்டுப்படைத் தளத்தை தாக்கும் அளவுக்கு பலம் இல்லாத நிலையில், பலாலி தளத்தில் உள்ள படையினர் மத்தியில் உளவியல்ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதே புலிகளின் நோக்கமாக இருந்தது.

அதனையடுத்து மண்டைதீவு இராணுவ முகாம்மீது ஊடுருவித்தாக்கும் நடவடிக்கையிலும் புலிகள் ஈடுபட்டனர். அத்தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

அந்த நடவடிக்கைகள் புலிகள் தமது யாழ் தளப்பிரதேசத்தை தக்கவைத்துக் கொள்ளும் தற்காப்புகான தாக்குதல்களாகவே இருந்தன.

எனினும் யாழ் குடாநாட்டில் பாரிய முகாம்கள் இருக்கக்கூடியதாக, மண்டைதீவு முகாமை புலிகள் தேர்ந்தெடுத்து தாக்கியமை படைத்தரப்புக்கு புலிகளின் பலத்தை கணிப் பிடும் வாய்ப்பாகவும் அமைந்தது.

அதேசமயம், புலிகள் மண்டைதீவுத் தாக்குதலில் பெற்றுக்கொண்ட உற்சாகத்தோடு மற்றொரு பாரிய தாக்குதலிலும் ஈடுபடக்கூடும் என்றும் படைத்தரப்பு நினைத்தது.

எனவே-புலிகள் தம்மைத் தேடிவருவதற்கு முன்பாக தாம் முந்திக்கொள்வது என்று படைத்தரப்பு திட்டமிட்டது.

ஆட்பலமும், கனரக ஆயுதபலமும் படைத்தரப்புக்கு கைகொடுத்தது.

யாழ்-குடாநாட்டை தமது பிடியில் கொண்டுவந்தபின்னர் அரசாங்க தரப்பு உண்மை நிலவரத்திற்கு மாறான கணிப்பீடு களுக்கு சென்றது.

யுத்தம் எப்போது முடியும் என்ற கால வரையறைகள்கூட சொல்லப்பட்டன.

தமது ஆட்பலத்தில் பாரிய இழப்பின்றி தமது தளப்பிரதேசத்தை புலிகள் மாற்றிக் கொண்டுள்ளார்கள் என்பது ஒரு முக்கிய விடயம்.

முன்னணித் தளபதிகளும், முக்கிய படையணிகளும் புலிகளிடம் அப்படியேதான் இருக்கின்றன. எனவே யுத்தம் எப்போது முடியும், யுத்தத்தின் போக்கு எப்படி இருக்கும் என்பதையெல்லாம் அரச தரப்பு மட்டும் தீர்மானிக்க முடியாது.

வெற்றிபெற்ற மிதப்பில் அரசாங்கம் புலிகள் தோல்வியின் கடைசி எல்லைக்குப் போய்விட்டதாக கணிப்பிட்டுவிட்டது.

வன்னியில் நடந்த கரும்புலி அணி வகுப்புக்கள். கிழக்கில் இறக்கப்பட்ட புலிகளின் புதிய படையணிகள் அனைத்துமே பிரபாகரன் தனது அணிகளுக்கு புது இரத்தம் பாய்ச்ச தயாராகிவிட்டதையே முன்னறிவித்தன.

யாழ் தளப்பிரதேச இழப்பு, வெலிஓயா முகாம் தாக்குதலில் ஏற்பட்ட பாரிய இழப்பு, யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பின் வியூகத்தில் சிக்கிய ஊடுவும் நடவடிக்கையின் தோல்வி போன்றவற்றால் புலிகளது அணிகள் மத்தியிலும் ஒரு உளச் சோர்வு ஏற்பட்டிருந்தது.

அதே சமயம் படைத்தரப்பின் மனோபலம் வளர்ச்சியடைந்திருந்தது.

புலிகளிடம் ஏற்பட்டிருந்த சோர்வு என்பது போராட்டத்தை கைவிட்டு ஓடும் சோர்வல்ல. "படைபலம் கூடுதலாக இருக்கிறது. வெல்ல முடியாவிட்டாலும் அடிபட்டுச் சாவோம் என்றுதான் புலிகளின் அணிகள் மத்தியில் மனப்போக்கு இருந்தது.

வெற்றிகுறித்த நம்பிக்கையில்லையே தவிர, சண்டையில் ஈடுபடவேண்டும் என்ற உக்கிரம் குறையாத நிலையில்தான் புலிகளின் அணிகள் காணப்பட்டன.

அதனால்தான் யாழ் குடாநாட்டுக்குள் கூட புலிகளின் நடமாடும் கெரில்லாக் குழுக்கள் செயற்பட முடிகிறது.

அவற்றின் நோக்கம் வெற்றியல்ல. தொல்லை கொடுப்பது. முடிந்தவரை இழப்புக்களை ஏற்படுத்துவது என்பதுதான்.

யாழ் குடாநாட்டு யுத்தத்தில் ஒரு விடயத்தை கவனிக்க முடியும். யுத்தத்தில் புலிகளின் மனோநிலையைக் கணிப்பிட அந்த விடயம் உதவும்.

யாழ் குடாநாட்டில் இறுதிவரை மோதி பலியாவதற்கு புலிகள் இயக்க உறுப்பினர்கள் தயாராகவே இருந்தனர். தலைமைப்பீட உத்தரவு காரணமாக மட்டுமே அவர்கள் பின்வாங்கி சென்றனர். அதாவது சாவு குறித்து எவ்வித அச்சமும் இல்லாத உறுப்பினர் பலம் புலிகளிடம் இருக்கிறது.

அவ்வாறான படையணிகள் அல்லது உறுப்பினர்கள் விரக்தியடைந்து, வெற்றி குறித்த நம்பிக்கையிழக்கும்போது எதிர்தரப்போடு முரட்டுத் தனமாக மோதி அழிந்து விடலாம்.

சரியான நெறிப் படுத்தல், தலைமையின் உறுதி காரணமாக உக்கிரமான தாக்குதல் அணிகளாகவும் மாறலாம்.

புலிகள் விடயத்தில் பின்னதுதான் நடக்கும். காரணம், புலிகளின் தலைமை யுத்தத்தை தொடர்வதில் நம்பிக்கையோடு இருக்கிறது.

யாழ் தளப்பிரதேசத்தில் ஏற்பட்ட பின்னடைவை எப்படிச் சரிக்கட்டுவது என்பது தான் பிரபாகரனின் 24 மணிநேரச் சிந்தனை.

யாழ்-குடாநாடு படையினர் வசம் சென்ற பின்னர், படையினரின் அடுத்த நகர்வு வன்னியை நோக்கித்தான் என்பது பரமரகசியமல்ல.

யாழ்-குடாநாட்டில் மேலும் ஆட் பலத்தை அதிகரித்துவிட்டு, அங்குள்ள முக்கியமான தாக்குதல் பிரிவுகளை வன்னிக்கு நகர்த்த படைத்தரப்பு திட்டமிடுவதாக புலிகள் கூறிக்கொண்டிருந்தனர்.

அதனை மெய்ப்பிப்பதுபோல படைத்தரப்பும் துரித ஆட்திரட்டலில் ஈடுபட்டது.

கிழக்கில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் புலிகளது இராணுவ பலத்தை வெளிப்படுத்தலாம். ஆனால் வன்னித் தளப் பிரதேசத்தை நோக்கிய படை நகர்வை தடுக்கப்போவதில்லை என்பதும் புலிகளுக்கு தெரியாமலில்லை.

அதேநேரம் கிழக்கில் உள்ள படைகள் மேலும் வடக்குக்கு அனுப்பப்பட்டு பலம் அதிகரிக்கப்படுமானால் வன்னியை நோக்கி விரைவான நடவடிக்கை ஆரம்பமாகலாம். அதனால் தனது முக்கிய தளபதிகளை கிழக்கில் இறக்கி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்தார் பிரபாகரன்.

ஒன்று, கிழக்கில் குறிப்பிட்ட எண்ணிக்கையான படையினர் இருந்தேயாக வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துவது.

இரண்டு: கிழக்கில் தமது கவனம் முழுவதும் இருப்பதாக நம்பவைத்துக்கொண்டு, வன்னியில் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்வது.

**ஏற்கெணவே முரசில் ஒரு செய்தி வெளிவந்தது நினைவிருக்கலாம். புலிகள் இயக்க தளபதிகள் சிறு சிறு தாக்குதல்களை நடத்தலாம் என்றுதான் அபிப்பிராயப் பட்டனர். பிரபாகரன் அதனை ஏற்கவில்லை. பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியாக வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார் என்று செய்தி வெளியிட்டிருந்தது முரசு.**

வன்னித் தளப்பிரதேசத்தை நோக்கிய படை நகர்வுக்கு முக்கியமான தளங்களில் முதன்மையானது முல்லைத்தீவு இராணுவத் தளம்.

வேறு முகாம்களில் தொட்டுக்கொண்டு இருக்காமல், நேரடியாக அடி மடியிலேயே கைவைப்பது என்பதுதான் பிரபாவின் நோக்கம்.

முல்லைத்தாக்குதலுக்கு சில நாட்களுக்கு முன்னர்தான் திருமலையில் இருந்து சொர்ணமும் அவரது படைப்பிரிவும் வன்னிக்கு அழைக்கப்பட்டது.

ஏற்கெனவே வெலிஓயா முகாம் தாக்குதலில் ஏற்பட்ட அனுபவம் காரணமாக சகல நடவடிக்கைகளையும் தனது நேரடிக் கவனிப்பில் வைத்துக்கொண்டார் பிரபாகரன். புலிகளின் துணைத்தளபதி பால்ராஜ் தலைமையில்தான் தாக்குதல். சொர்ணம், கடற்புலித் தளபதி சூசை போன்றோரின் தலைமையில் சிறப்புப் படையணிகள் தயாராகின. கரும்புலிகள் அணிதான் ஊடுருவும் முதல் அணியாகச் சென்றது.

18.7.96 வியாழக்கிழமை அதிகாலை ஒன்று முப்பது மணியளவில்தான் தாக்குதல் ஆரம்பமானது. அமாவாசைக் காலம் என்பதால் 1.30 மணிக்கும் இருள் சூழ்ந் திருந்ததும் புலிகளுக்கு வாய்ப்பாகிப் போனது.

93 இல் புலிகள் பூநகரியில் மேற்கொண்ட தவளைப்பாய்சல் போன்றே முல்லைத் தாக்குதலும் ஆரம்பமானது. தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையைவிட முல்லைத்தீவு தாக்குதலில் உக்கிரம் அதிகம்

தவளைப் பாய்ச்சல் ஒரு தாக்குதல் யுத்தம். தாக்குதல் யுத்தத்தில் அழிவுகளும் இருக்கும். அதேவேளை ஒரு தளத்தில் உள்ள எதிர்த்தரப்பை முற்று முழுதாக அழிக்க முடியாமலும் போகலாம்.

யாழ் தளப்பிரதேசத்தில் படையினர் மேற்கொண்டது தாக்குதல் யுத்தம்தான். ஆனால் தமது எதிர்தரப்பை அழித்தொழிப்பு செய்வது சாத்தியமாகவில்லை.

முல்லைச்சமரைத் திட்டமிடும்போது அதனை ஒரு அழித்தொழிப்பு யுத்தம் என்ற ரீதியில்தான் பிரபாகரன் திட்டமிட்டுள்ளார்.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து அலம்பில் இராணுவ முகாம் ஒன்பது மைல் தூரத்தில் இருக்கிறது. அப்படியிருந்தும் அலம்பிலில் இருந்து படையினர் முல்லை முகாம் இருந்த பகுதிக்குச் செல்ல நான்கு நாட்கள் சமரிடவேண்டி ஏற்பட்டது.

கடல்வழியாகவும் எதிர்தாக்குதலுக்கு தயாரான நிலையில்தான் கடற்புலிகள் அணியும் இறக்கப்பட்டது. முகாம் தாக்குதல் முடியும்வரை முல்லைத்தீவு முகாமுக்கு செல்லக்கூடிய கடற்பாதையை கடற்புலிகளும், கடற் கரும்புலிகளும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

உதவிக்கு விரைந்த கடற்படை பீரங்கிப் படகு கடற் கரும்புலிகளால் தாக்கப்பட்டது.

ஒரு முகாமைத் தாக்கும்போது அதற்கு ஏனைய முகாம்களில் இருந்து வரும் உதவியைத் தடுக்கச் செய்யப்படும் நடவடிக்கைகளை கட் அவுட் என்று கூறுவதுண்டு.

புலிகள் முல்லைத்தீவு முகாமின் தரைப் பாதைகளிலும், கடற்பாதைகளிலும் கட் அவுட் போட்டுவிட்டுத்தான் முகாமைத் தாக்கத் தொடங்கினார்கள்.

பாரிய தாக்குதல் மேற்கொள்ளும்போது ஒரு கால வரம்பு தீர்மானிக்கப்படுவதும் வழக்கம்.

தவளைப் பாய்ச்சலை எடுத்துக் கொண்டால் மூன்று நாள் சமர் என்று புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

படையினரை தேடுதல், ஆயுதங்களை சேகரித்து அப்புறப்படுத்துதல், காயமடைந்த தமது உறுப்பினர்களை கண்டுபிடித்து கொண்டுசெல்லல் போன்றவற்றுக்கு தேவைப்படும் அவகாசத்தை உள்ளடக்கியே கால வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

முல்லைத்தாக்குதலும் அப்படித்தான். குறைந்தது மூன்று நாட்கள் தாக்குப்பிடிக்கும் பலத்தோடுதான் புலிகளின் அணிகள் களத்தில் இறக்கப்பட்டன.

மரபுரீதியான போரில் பலம் வாய்ந்த இராணுவத்துடன் நீண்டநாட்கள் நேரடியாக மோத முல்லைத்தீவு முகாம் சார்ந்த தரையமைப்பு ஏற்றதல்ல.

அதேசமயம் முல்லைத்தீவை புலிகள் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் படையினரின் வடபுல விநியோகப்பாதையில் பெரும் சீர்குலைவு ஏற்படும்.

ஆனால் அவ்வாறு வைத்திருப்பதானால் புலிகள் தரப்பு பலத்த இழப்பை சந்தித்தாக வேண்டும்.

அதனால்தான் நான்கு நாள் சமரின் பின்னர் புலிகள் திரும்பிவிட்டனர்.

மீண்டும் அதே இடத்தில் படையினர் தமது முகாமை நிறுவி பலப்படுத்தவே செய்வர். முகாம் தாக்கப்பட்டாலும், முகாம் இருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி மீண்டும் படையினர் வசமே சென்றுள்ளது.

தாக்கிவிட்டு திரும்புவதுதான் புலிகளின் நோக்கம் என்றாலும், முடிந்தால் கடும் எதிர்ப்பு மூலம் மீண்டும் முல்லைக்கு படையினரை வராமல் தடுக்கலாமா என்றும் புலிகள் முயற்சித்து பார்க்கத் தவறவில்லை.

அதனால்தான் முகாம் இருந்த இடத்துக்கு படையினர் செல்லும்வரை புலிகள் நின்று எதிர்ப்பைக் காட்டினார்கள்.

அது தவிர, வன்னியில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நேரடி மோதலுக்கான புலிகளின் ஒத்திகையாகவும் அது அமைந்திருந்தது.

படையினர் தரப்புக்கு புலிகளைவிட சாதகங்கள் அதிகம். கடற்படை போர்க் கப்பல்களில் துருப்புக்கள் அனுப்பப்பட்டன. விமானப் படையினர் உதவினார்கள். முல்லைத்தீவு முகாமின் வடபுறமும், தென் புறமும் விசேட அதிரடிப்படையினர் தரை இறக்கப்பட்டனர்.

கடல், ஆகாய தாக்குதல்களை எதிர் கொள்ள புலிகளின் பலம் போதாது. அதனால் முல்லை முகாம் பகுதியில் ஒரு கட்டத்தின்பின்னர் தாக்குப்பிடித்து நிற்பது இயலாத விடயம்.

ஆக, பாரிய முகாம் ஒன்றை புலிகளிடம் இழந்தது படைத்தரப்புக்கு ஏற்பட்ட பலத்த தோல்வி. அதேநேரம் தம்மிடம் வீழ்ந்த முகாம் பகுதியை தொடர்ந்து தக்கவைக்க முடியாமல் போனது புலிகளின் பலவீனம். அதனால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி மீண்டும் தம்வசமானது படையினருக்கு ஆறுதல்.

91ம் ஆண்டு ஜூலை மாதம் 10ம் திகதி புதன்கிழமை அதிகாலையில்தான் ஆனையிறவு இராணுமுகாம் தாக்குதல் புலிகளால் நடத்தப்பட்டது.

புலிகளுக்கு இது மூன்றாவது பெரும் சமர்.

31 நாட்கள் ஆனையிறவுச் சமர் நடந்தது. அதற்கு ஆகாய, கடல், வெளிச் சமர் என்று பிரபாகரன் பெயரிட்டிருந்தார்.

அச்சமர் தோல்வியில் முடிந்தது. ஆயினும் இலங்கையில் இரண்டு இராணுவம் இருக்கிறது என்று சொல்லத்தக்க அளவில் சமர் நடைபெற்று முடிந்தது.

வெற்றிலைக்கேணியில் டென்சில் கொப்பகெடுவ தலைமையில் தரையிறங்கிய படைகள் கடும் சமர் மத்தியில் ஆனையிறவு முகாமை சென்றடைந்தன. அதன்மூலம் புலிகளின் முற்றுகையை முறியடித்தன.

புலிகள் தரப்பில் 573 பேர் பலியானார்கள். 1500 பேர் காயமடைந்தனர். இதுவரை காலத்தில் புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு அதுதான்.

11.11.93 வியாழக்கிழமை அதிகாலை பூநகரியில் உள்ள இராணுவ முகாமும், நாகதேவன் கடற்படைமுகாமும் புலிகளால் தாக்கப்பட்டது. 'தவளைப் பாய்ச்சல்' என்ற பெயரில் புலிகளால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட பாரிய தாக்குதலாக அது அமைந்தது. புலிகள் 250 பேர் பலியானார்கள். 800 க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும், 304 படையினரின் உடல்கள் கைப்பற்றப்பட்டதாகவும் வெளிநாட்டு, உள்நாட்டு செய்திகள் தெரிவித்தன.

புலிகள் இயக்க வரலாற்றிலும், வடக்கு- கிழக்கு போர் முனையிலும் மூன்றாவது பெரிய சமர் முல்லைத்தீவு முகாம் தாக்குதலாகும்.

புலிகளைப் பொறுத்தவரை தமது முன்னைய தவளைப் பாய்சல் நடவடிக்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

கைக்கு சகல வகையிலும் ஈடான ஒரு சமராகவும் இது அமைந்துள்ளது. கடல், தரை, ஆகாயவழிச்சமராகவும் இது நடைபெற்றிருக்கிறது.

புதன்கிழமை, வியாழக்கிழமை என்பவைதான் பிரபாகரனுக்கு ராசியான நாட்கள். தவளைப் பாய்சலும் வியாழக்கிழமைதான் ஆரம்பித்தது. முல்லைத் தாக்குதலும் வியாழக்கிழமைதான் ஆரம்பமானது.

**'ஓயாத அலைகள்' என்று தாக்குதலுக்கு பெயர் சூட்டியிருக்கிறார் பிரபாகரன்.**

அலைகள் மட்டுமல்ல, யுத்தமும் நீண்டகாலத்திற்கு ஓயப்போவதில்லை. முல்லைத்தாக்குதல் புலிகளின் அதிரடித் தாக்குதலின் அசுர பலத்திற்கு சான்று. அதே நேரம் மரபுப் போர் முனைக்கு புலிகள் இன்னமும் முழு அளவில் தயாராக இல்லை என்பதையும் வெளிப் படுத்தியுள்ளது.

படையினரைப் பொறுத்தவரை புலிகளின் தாக்குதல்களில் இருந்து தமது முகாம்களை பாதுகாப்பதும் சுலபமான காரியமல்ல.

எனவே-முடிவு-இழுபட்டுச் செல்லும் நீண்டகால யுத்தம் என்றாகி விட்டது.

# அதிரடி அய்யாத்துரை



மறைந்த தலைவருக்கு சிரார்த்த தினம் வைக்கத்தான் நேரமில்லை. கட்சிச் செலவில் ஒரு அஞ்சலி விளம்பரம் கொடுக்கக்கூட மனம் வரவில்லைப் பார்த்தியளோ. உறவினர்கள், மனைவி, பிள்ளைகள் பெயரில்தான் அஞ்சலி விளம்பரம் பத்திரிகையில் வந்தது. எண்டாலும் கூட்டான கட்சிக்கு உந்தளவு சிக்கனம் கூடாதுங்கோ. அமுதத் தலைவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ரெண்டு எழுத்து தலைவருக்கு காயம் எண்டு செய்தி நிறுவனம் ஒண்டு சூப்பர் புலுடா விட்டதல்லோ. பாய்ந்து விழுந்து பச்சை உடை தரப்பார் மறுத்துப் போட்டினம். மறுத்ததுக்கும் ஒரு காரணம் இல்லாமல் இல்லை. காயம் பட்டதெண்டு சொன்னா அவருக்கு வீரமரியாதை கிடைச்சிடும் எண்ட கவலைதான் காரணமாக இருக்கும். பொய் சொன்னாலும், மெய்சொன்னாலும் எதிரிக்கு புகழ் சேரக்கூடாது என்பதுதானே பாருங்கோ பிரசார தந்திரம்.

சில செய்திகளைக் கேட்டால் இரண்டு விஷயம் பற்றிக்கொண்டு வரும். ஒண்டு எரிச்சல். இன்னொண்டு சிரிப்பு. ரெண்டு எழுத்தார் வெளியிட்ட ஸ்கோரில் ஒரு தரப்பு ஸ்கோரை மட்டும்தான் வானொலி தொலைக்காட்சிகள் அறிவிச்சது. அத்தோடு விட்டிருந்தாலும் பரவாயில்லை, ரெண்டு எழுத்தார் உண்மையை மறைக்கினம் எண்டும், ஸ்கோர் கூடவாக இருக்கலாம் எண்டமாதிரியும் சொன்னதுதான் ஒரு மாதிரிப் போச்சு. தங்கள் ஸ்கோர் பற்றி சொல்லாமல் இருந்துகொண்டு, பத்திரிகைகளையும் சொல்லவிடாமல் தடுத்துக்கொண்டு அப்படிச் சொல்லலாமோ? கண்ணாடி வீட்டில் இருந்து கல்லெறிஞ்ச கதைதான்.

சூரியக்கதிரின் பின்னர் இலண்டன் தமிழ் சேவையில் ஆனந்தமான சோதரியின் குரல் சோர்ந்துகாணப்பட்டது அநேகமாக யாவரும் கவனித்த விஷயம்தான். முல்லைக்கு பின் மீண்டும் ஆனந்தக் குரல் செவியில் பாயத்தொடங்கியிருக்கு. என்ன ஒரு விபரிப்பு. என்ன ஒரு பூரிப்பு. முல்லை மலர் மேலே மொய்க்கும் வண்டுபோலே அவர் மனமும் முல்லையில் மொய்த்துவிட்டது முற்றிலும் உண்மை.

கட்டுப்பாட்டுக்கு வந்ததாகக் கூறப்படும் பகுதியிலும் இரவில் ரெண்டு எழுத்தாரின் ராஜாங்கம்தான். மறுதரப்பு இரவானால் தற்காப்போடு சரி. எப்பவும் எதுவும் நடக்கலாம் எண்ட திக் திக் நிலையில்தான் சனம் இருக்குதாம். அதுவும் அரண்களுக்கு அருகில் உள்ள வீடுகளில் இரவுத்தூக்கம்கூட பாதித்தூக்கம் தான். ரெண்டு எழுத்தார் வந்து அதை இதை வீச, பதிலுக்கு டுமீல் கிளம்ப இரவிலை திக்குத் திசை தெரியாமல் தங்கள்மீதும் படக்கூடாததுகள் பட்டுவிட்டால் என்ன செய்யிறது? அதுதான் பயம்.

பெண் பிள்ளைகள் எண்டாலே கரும் ரெண்டு ஏழுத்தோ எண்டு சந்தேகப்படுவதால் யாழில் சீருடைத்தரப்பார் தங்களைப் பார்த்து புன்னகைப்போர் விடயத்திலும் சற்றுக் கவனமாகத்தான் இருக்க வேண்டிக் கிடக்காம். அப்படியிருந்தாலும் ஆங்காங்கே சிரித்துப் பேசிக்கொண்டு நிற்பதையும் கவனிக்க கூடியதாக இருக்குதாம்.

தெற்கில் பச்சை அணிக் கூட்டங்கள் களை கட்டத்தொடங்கியிருக்குதாம். முல்லை தாக்குதலும் பச்சை அணிக்கு பயங்கர சந்தோசம். காலையில் கிடைத்த செய்தியை மாலையில் நடந்த கூட்டத்தில் எதிரணித்தலைவரே அறிவிச்சப்போட்டு. இப்ப எப்படி? எண்டஸ்டைலில் கேள்வி எழுப்பினாராம். உதுதானுங்கோ அரசியல்.

தமிழ் கட்சிகள் கூடக் கேட்கினம். கூட்டான கட்சி மட்டும் கொஞ்சம் தர்ம நியாயப்படி கேட்குது எண்டு பாராட்டியிருக்கிறார் எதிரணித்தலைவர். கூட்டான கட்சி தனியான சந்திப்புக்களுக்கு விரும்பும் இரகசியம் இப்ப விளங்குதோ? மற்ற தமிழ்கட்சிகள் கடுமையாக நிற்பதால் நாங்கள் ஒன்றும் செய்யமுடியாமல் கிடக்கு. மற்றப்படி எங்களுக்கு உங்கள் பெருந்தன்மை விளங்குது எண்ட பாணியில் பந்து வீசிப்போட்டு வருகினமாம் கூட்டான கட்சியின் சாணக்கியர்கள். இரகசியமாக உடன்பாடு தெரிவிப்பது ஒரு முகம். ரெண்டு எழுத்தாரும் பேச்சுக்கு அழைக்கப்படவேண்டும் என்டு வெளியில் வந்து பேசுவது இன்னொரு முகம். அந்த சாணக்கியம் வந்தாலும் சத்தியமாக பிச்சை கேட்க வேணும். ரெண்டு எழுத்தார் மட்டும் இல்லையெண்டா ஐயாமார் துள்ளி விளையாடுவினம்.

பொன்னான தலைவரின் குமாரர் சமீபத்தில் வெளியான ஒரு புத்தகம் தொடர்பாக கடுப்பில் இருக்கிறாராம். தனது தந்தையாரின் வண்டவாளம் பற்றி புட்டுக்காட்டியதை பொறுக்க முடியேல்லையாம். நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டால் சி.ஐ.டி. உங்களை சும்மாவிடாது எண்டு சில பிரமுகர்களை போனில் செல்லக்குரலில் எச்சரித்தாராம். அடி சக்கை. குமாரரும் தேவைப்பட்டா காட்டிக் கொடுக்க தயங்கமாட்டார். இந்த இலட்சணத்தில் தமிழ் கட்சிகள் பற்றி அவர் பேசலாமோ? குணம் தெரிஞ்சுதானே ரெண்டு எழுத்தார் இரகசியப் பதவி கொடுக்கவில்லையாக்கும்.

இந்தவாரமும் ஒரு தமாசு. எங்கோ படித்தது.

**சாந்தாசிங்:- நண்பரே! இரவில் சூரியன் எங்கே போகிறான்?**

**பண்டாசிங்:- அது எங்கேயும் போவதில்லை. இரவாகிவிட்டால் நம்மால் பார்க்க முடிவதில்லை அவ்வளவுதான்.**



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### துறைமுக மோதல்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை அப்போது இயங்கிக்கொண்டிருந்தது.

சீமெந்து மூட்டைகளை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு செல்லும் லொறிகள் காங்கேசன் துறை கீரிமலை வீதியில் கியூ வரிசையில் காத்திருக்கவேண்டும்.

ஒவ்வொரு லொறியாக இராணுவத்தினர் உள்ளே அனுமதிப்பார்கள். உள்ளே சென்ற லொறி பொதிகளை இறக்கிவிட்டு திரும்பிவரும்வரை அடுத்த லொறி உள்ளே செல்லக் காத்திருக்க வேண்டும்.

பாதுகாப்புக்கருதியே அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதிலும் ஒரு ஓட்டையைக் கண்டு பிடித்து தமது தாக்குதலுக்கு திட்டம் வகுத்தனர் புலிகள்.

ஏப்ரல் 22ம் திகதி 1987.

காங்கேசன்துறை துறைமுகத்தில் வழக்கம்போல லொறிகள் கியூ வரிசையில் காத்திருந்தன.

அவ்வாறு நின்ற லொறி ஒன்றுக்குள் சீமெந்து மூட்டைகளுக்குள் புலிகள் இயக்கத்தினர் பதுங்கி இருந்தனர்.

குறிப்பிட்ட லொறி உள்ளே செல்ல வேண்டிய முறை வந்தது.

லொறிக்குள் குண்டு இருக்கலாம்




என்று கருதித்தான் சோதனை நடைபெறும்.

லொறிக்குள் தாக்குதல் பிரிவொன்றே பதுங்கியிருக்கும் என்று இராணுவத்தினர் நினைத்திருக்கவில்லை.

லொறியை உள்ளே விடும் முன்னர் பரிசோதனைக்காக நிறுத்தினார்கள்.

லொறி நிறுத்தப்பட்டதும் லொறிக்குள் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் கீழே குதித்து இராணுவத்தினரை நோக்கிச் சுடத்தொடங்கினார்கள்.

எதிர்பாராத திடீர் தாக்குதல். வாயிலில் நின்ற இராணுவத்தினர் சூடுபட்டு வீழ்ந்தனர்.

புலிகளின் அணிகள் உள்ளே ஊடுருவிச் சென்றன.

உள்ளேயிருந்த இராணுவத்தினரும் உஷாராகி பதில் தாக்குதலில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

காபர் வியூ ஹோட்டலில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர்.

காபர் வியூ முகாம் நோக்கி புலிகள் முன்னேற முடியாதளவுக்கு இராணுவத்தினர் சரமாரியாக சுட்டுக்கொண்டிருந்தனர்.

இராணுவத்தினர் உஷாராகிவிட்டதால் தொடர்ந்து மோதலில் ஈடுபடாமல் புலிகள் தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பினார்கள்.

புலிகள் நடத்திய தாக்குதலால் 18 இராணுவத்தினர் பலியானார்கள். யாழ்ப்பாண மாவட்ட புலிகளின் தளபதி ராதா தலைமையில் தாக்குதல் நடைபெற்றது.

### ஊழியர்கள்மீது கோபம்

புலிகள் திரும்பிச் சென்றதும் ஆத்திரம் கொண்ட இராணுவத்தினர் சீமெந்து தொழிற்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய தமிழர்களை கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஐந்துபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சார்ஜன்ட் மயில்வாகனம். அவருக்கு 55 வயது.

சீமெந்து கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த தமிழர்களை இராணுவத்தினர் தேடிப்பிடித்துச் சுட்டுத்தள்ளிக்கொண்டிருந்தபோது:

## துறைமுகத்தில் திடீர் தாக்குதல்

துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலில் பொதிகளை ஏற்றிக்கொண்டிருந்தனர் 70 தொழிலாளர்கள். அதில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

தம்மைத் தேடியும் இராணுவத்தினர் வந்துகொண்டிருக்கிறார்கள்: தப்பவே முடியாது என்று நடுங்கத் தொடங்கிவிட்டனர் தொழிலாளர்கள்.

கப்பல் கப்டனுக்கு நிலமை ஆபத்தானது என்று விளங்கிவிட்டது.

தொழிலாளர்கள் பாவம். ஏதுமறியாதவர்கள். ஆத்திரம் கொண்ட இராணுவத்தினர் அவர்களையும் விட்டுவைக்கப்போவதில்லை என்று விளங்கிவிட்டது.

70 தொழிலாளர்களையும் கப்பலில் ஏறுமாறு கட்டளையிட்டார் கப்டன்.

தொழிலாளர்கள் ஏறியதும் கப்பல் துறைமுகத்தை விட்டு புறப்பட்டு சென்றுவிட்டது.

அதன்பின்னர்தான் துறைமுகத்துக்குள் இராணுவத்தினர் வந்து தேடிவிட்டுச் சென்றனர்.

இராணுவத்தினரின் ஆத்திரம் எல்லாம் தீர்ந்து, பதட்டம் நீங்கியபின்னர் கப்பலை மீண்டும் துறைமுகத்துக்கு கொண்டுவந்து தொழிலாளர்களை இறக்கிவிட்டார் கப்டன்.

அந்தக் கப்பல் கப்டன் மட்டும் இல்லையென்றால் தொழிலாளர்களில் பலர் உயிர்பிழைத்திருக்கவே முடியாது.

கண்ணீரோடு அந்தக் கப்டனுக்கு நன்றி சொன்னார்கள் தொழிலாளர்கள்.

அந்தக் கப்பல் கப்டன் ஒரு சிங்களவர்.

### பயங்கரவாதிகள்

சீமெந்து நிறுவன பாதுகாப்பு ஊழியர்களின் குண்டுகள் துளைத்த சடலங்கள் ரூபவாகினித் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டன.

அந்தச் சடலங்களைப் பற்றி பின்வருமாறு சொன்னது செய்தி. "பயங்கரவாதிகளை எதிர்த்து இராணுவதினர் நடத்திய துணிகர தாக்குதலில் பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் சடலங்களை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்."

இராணுவத்தினர் தமது கோபத்தை சீமெந்து நிறுவன ஊழியர்களோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை.

காங்கேசன் பகுதியில் குண்டுவீச்சுகள் குடியிருப்புக்களை நோக்கி நடத்தப்பட்டன.

ஷெல் மழை குடியிருப்புக்களை நோக்கி சரமாரியாகப் பொழிந்தது.

மயிலிட்டி, மாவிட்டபுரம் போன்ற ஊர்களில் இருந்து ஷெல் வீச்சுக்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர்.

ஏப்ரல் 22ம் திகதியே சீமெந்து தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டது.

ஏப்ரல் 25ம் திகதி யாழ்ப்பாணம் மருத்துவ மனையில் தனது கடமையை முடித்துவிட்டு வீடுதிரும்பினார் டாக்டர் விஸ்வரஞ்சன். ஆனால் அவர் வீடுபோய் சேரவில்லை.

அவரது வீடு காங்கேசன்துறையில்தான் இருந்தது. அவரை மறித்த இராணுவத்தினர் தீர விசாரித்து அவர் ஒரு டாக்டர் என்று உறுதி செய்த பின்னர் சுட்டுக்கொன்றுவிட்டனர்.

### கண்காட்சி

இதற்கு முன்னர் மார்ச் 87 ல் நடைபெற்ற ஒரு சம்பவம்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினரில் ஒருவர் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி காலை இழந்துவிட்டார். இது நடந்தது மார்ச் மாதம் 25ம் திகதி.

பாதணியுடன் ஒட்டியிருந்த துண்டிக்கப்பட்ட காலை புலிகள் எடுத்து வந்துவிட்டனர்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலிலும் அந்தக் காலைக் காட்சிப்பொருளாக வைத்திருந்தனர்.

கோவில் முன்பாக அவ்வாறு வைத்திருந்ததை மக்கள் விரும்பவில்லை. எனினும் புலிகளிடம் நேரில் சொல்லப் பயந்து பேசாமல் இருந்துவிட்டனர்.

தெல்லிப்பளையிலும் அந்தக் காலை வைத்து கண்காட்சி நடத்தினார்கள் புலிகள்.

அப்போது கிட்டுதான் யாழ் மாவட்ட தளபதியாக இருந்தார்.

எப்படியோ தகவல் அறிந்த இராணுவத்தினர் மாவிட்டபுரம் கோயில் நோக்கியும் ஷெல்களை ஏவினார்கள்.

வேணுகோபால் என்னும் பொதுமகன் ஒருவர் ஷெல் வீச்சால் பலியானார்.

மார்ச் 31 இல்தான் கிட்டு கிரனேட் தாக்குதலால் தனது ஒரு காலை இழந்தார். இது தொடர்பாக முன்னரே விபரித்திருந்தேன்.

### வான் தாக்குதல்

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளிலுள்ள புலிகளின் முகாம்கள் குறித்த தகவல்களை இராணுவத்தினர் திரட்டினார்கள்.

இராணுவத்தினருக்கு தகவல் கொடுக்கவும் ஆட்கள் இருந்தார்கள்.

புலிகளின் முகாம் எங்கே இருக்கிறது என்பதை துல்லியமாக படம் வரைந்தே கொடுத்துவிடுவார்கள்.

கொழும்புக்கு வேறு வேலைகளுக்குச் செல்வதுபோலச் சென்று, உளவுப்பிரிவுக்கு தகவல் கொடுப்பதுதான் அவர்களது வேலை.

கணிசமான பணம் கிடைப்பதால் அவர்கள் தொடர்ந்து தகவல்களை திரட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

என்னதான் துல்லியமாக தகவல் கிடைத்தாலும்கூட விமானத் தாக்குதல்களின் போது புலிகளது முகாமை குடியிருப்புக்கள் மத்தியில் அடையாளம் காண்பது கடினம்.

வானிலிருந்து தம்மிடமுள்ள வரைபடத்தைப் பார்த்து குண்டைப் போட்டுவிட்டு விமானப்படையினர் திரும்பிவிடுவார்கள்.

இலக்குக்கு வீசப்பட்டுவிட்டது என்றும் அறிவித்துவிடுவார்கள்.

தரையில் நிலவரம் வேறுவிதமாக இருக்கும். புலிகளின் முகாம் அப்படியே இருக்கும். அதன் அருகில் உள்ள வீடுகள் குண்டுவீச்சால் பாதிக்கப்பட்டிருக்கும்.

வானொலியும், தொலைக்காட்சியும் பின்வருமாறு செய்தி தெரிவிக்கும்: "இன்று பயங்கரவாதிகளின் முகாம் ஒன்று குண்டு வீச்சால் தகர்க்கப்பட்டது. பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்."

இவ்வாறான நடவடிக்கைகளால் வீடுகளில் இருப்பதைவிட புலிகளின் முகாமுக்குள் சென்று இருப்பதுதான் பாதுகாப்பு என்று கேலி கலந்த விமர்சனங்களும் யாழில் பரவலாகியிருந்தன.

புலிகளும் சரி, ஏனைய இயக்கங்களும் சரி தமது முகாம்களையும், அலுவலகங்களையும் குடியிருப்புக்கள் உள்ள பகுதிகளுக்குள்தான் வைத்திருந்தனர்.

### வல்லையில் தாக்குதல்

பருத்தித்துறையில் சனநடமாட்டம் அதிக முள்ள சந்தைப்பகுதியில்தான் புலிகளின்முகாம் ஒன்று இருந்தது.

அந்த முகாம் தொடர்பான தகவல் அறிந்த விமானப்படையினர் நான்கு தடவைகள் தாக்குதல் நடத்திப் பார்த்தார்கள்.

நான்கு தடவையும் குறி தப்பியது.

வல்வெட்டித்துறையில் புலிகளின் முகாம் ஒன்றின்மீது நடைபெற்ற தாக்குதலில் புலிகள் தரப்பில் ஐந்துபேர் பலியானார்கள். எனினும் தாக்குதலை முறியடித்து தமது முகாமை புலிகள் பாதுகாத்தனர்.

கடும் ஷெல்வீச்சு காரணமாக ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த ஐந்துபேரும் ஆம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுக்கொண்டிருந்தனர்.

வல்லை வெளியூடாக ஆம்புலன்ஸ் செல்லும்போது ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆம்புலன்சில் இருந்த ஐந்து பேரும் கொல்லப்பட்டனர். ஆம்புலன்ஸ் சாரதியும் பலியானார்.

1987 ஏப்ரல்-மே மாதங்களில் யாழ்ப்பாணம் குண்டுவீச்சுக்களாலும், ஷெல் வீச்சுக்களாலும் அதிர்ந்து கொண்டிருந்தது.

கடும் நடவடிக்கை ஒன்று அவசியம் என்று கருதிய ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலியும் படையினருக்கு சர்வ சுதந்திரம் வழங்கியிருந்தனர்.


1987 மே மாதம் முதலாம் திகதி மேதினத்தைப் பெரியளவில் நடத்துவதற்கு திட்டமிட்டனர் புலிகள் இயக்கத்தினர்.

அதுவரை புலிகள் இயக்கத்தினர் மேதினக் கூட்டங்கள் எதனையும் நடத்தவில்லை.

மாபெரும் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

விமானக் குண்டுவீச்சுக்கள் மத்தியில் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்துவது சாத்தியம்தானா என்று சந்தேகிக்கப்பட்டது. (தொடர்ந்து வரும்)

## கூட்டாக அஞ்சலி





1983 ஜூலை 25–27 ஆகிய தினங்களில் வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்ட போராளிகளுக்கு புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப்.,ரெலோ, ஈரோஸ் ஆகிய நான்கு இயக்க கூட்டமைப்பான ஈ.என்.எல்.எஃப். வெளியிட்ட அஞ்சலி சுவரொட்டி இது.

1985 ஜூலை மாதம் சென்னையில் வைத்து தயாரிக்கப்பட்டு, அச்சாகி படகுமூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது.

கூட்டமைப்பில் இருந்த புலிகள் இதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. உயிரோடு கைதாவது தமது இயக்கக் கொள்கையல்ல என்பதால் தனியான அஞ்சலி எதனையும் தெரிவிப்பதில்லை. கூட்டமைப்பு விரும்பினால் வெளியிட்டுக் கொள்ளலாம் என்றனர்.

கீழே நான்கு இயக்கங்களின் சின்னங்களோடு யாழ் நகர் சுவர் ஒன்றில் சுவரொட்டி காணப்பட்ட காட்சி.

## பயங்கரவாதிகளான அப்பாவிகள்!



# கொழும்பில் புலிகளின் மறைவிடங்கள்

கொழும்பில் தமது நடவடிக்கைகளை புலிகள் சிலகாலம் தள்ளிப்போட்டிருந்தனர்.

மின்சார சபை வேலை நிறுத்தத்தின் போது புலிகள் கொழும்பில் ஏதாவது செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அப்படி எதுவுமே நடக்கவில்லை. அரச தரப்புக்கும், பாதுகாப்புத் தரப்புக்கும் அதனால் ஆச்சரியம்தான்.

அந்த ஆச்சரியம் காரணமாகத்தான் வேலை நிறுத்தக் காரருக்கும், புலிகளுக்கும் இரகசிய உடன்பாடு என்று ஒரு பிரசாரமும் தெற்கில் பரவியிருந்தது.

யானையும், புலியும் சேர்ந்து செய்த சதி. யானையின் முதுகுக்குப் பின்னால் புலி நிற்கிறது என்றெல்லாம் சுவரொட்டிகள் தோன்றியிருந்தன.

மறுபுறம், கொழும்பில் புலிகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறதோ என்று பாதுகாப்புத்தரப்பு நினைத்திருக்கலாம்.

கடும்பாதுகாப்பு ஏற்பாடுகளால் புலிகள் தமது நகர்வுகளை மேற்கொள்ளமுடியவில்லை என்று தப்புக் கணக்கும் போடப்பட்டிருக்கலாம்.

ஆனால் புலிகளின் திட்டம் வேறாக இருந்தது. கொழும்பு மத்திய வங்கி கட்டிடத் தாக்குதல் மிகப் பாரியதாக இருந்தது.

எனவே- அடுத்த தாக்குதலும் மிகப் பாரியதாக இருக்க வேண்டும் என்று புலிகள் திட்டமிட்டனர்.

அதுதவிர, தாக்குதல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் தருணங்களில் தாக்குவது புத்திசாலித்தனமல்ல என்பதும் புலிகள் தமது நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாமல் இருந்ததுக்கு ஒரு காரணம்.

தாக்குதல் ஒன்றில் புலிகள் ஈடுபடக்கூடும் என்று எதிர்பார்த்து, தாக்குதல் எதுவும் நடக்கவில்லையென்றதும் இயல்பாகவே பாதுகாப்புத் தரப்பிடம் ஒரு அலட்சியம் தோன்றும்.

பெரும் தாக்குதலை எதிர்பார்க்கும் உஷார் நிலை மெல்ல, மெல்ல தளர்ந்து, கொழும்பில் புலிகளே இல்லையோ என்று நினைக்கக்கூடிய ஒரு கட்டத்தில், பாரிய இலக்கொன்றை தாக்குவதுதான் புலிகளின் திட்டமாக இருந்தது.

அதனால்தான் சூழலைக் குழப்பாமல் இலக்குகள் தொடர்பான தகவல்களை மட்டும் திரட்டுவதோடு புலிகளின் நடவடிக்கை மட்டுப் படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு தகவல்களை திரட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு புலி உறுப்பினர்தான் ஓட்டோவில் செல்லும்போது சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

நெல்சன் என்று சுருக்கமாக அழைக்கப்படும் அந்த உறுப்பினர் நீண்டகாலமாக கொழும்பில் தங்கியிருந்து உளவு வேலைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

தெகிவளைப் பகுதியில் ஒரு வீட்டில் தங்கியிருந்தபோது, பொலிஸ் நிலையத்திற்கு நேரில் செல்லாமலேயே தனது பெயரை பதிவு செய்து கொண்டிருக்கிறார். ஒரு நண்பர் மூலமாகவே கொடுக்க வேண்டியதைக் கொடுத்து காரியம் சாதித்திருக்கிறார்.

எப்போதும் செல்டல் போன் ஒன்று வைத்திருப்பார். பிஸியான தொழிலில் ஈடுபடுபவர் போலவே நடந்துகொள்வார் நெல்சன்.

தெகிவளையிலும், வெள்ளவத்தையிலும் மாறிமாறித் தங்கியிருந்தார். ஆரம்பத்தில் விழிப்பாகத்தான் செயற்பட்டார். கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் கொழும்பில் காரியம் சாதிக்கலாம் என்று தெரிந்தபின்னர்தான் விழிப்புத் தளரத் தொடங்கியது.

வழக்கமாக தம்மை தனியாக அடையாளப் படுத்தக்கூடிய வகையில் உளவுப்பிரிவினர் நடமாடுவதில்லை. ஓட்டோர்க்கள் போன்றவற்றில் பயணம் செய்வதையும் தவிர்த்துவிடுவார்கள்.

நெல்சனுக்கு ஒரு நம்பிக்கை. செக் பொயின்ரில் மறிக்கப்பட்டால் பணம் கொடுத்துவிட்டு சென்றுகொண்டே இருக்கலாம். அந்தக் கணிப்புத்தான் அவரை மாட்டவைத்துவிட்டது.

ஓட்டோ தடுக்கப்பட்டு, இறக்கி சாதாரணமாக விசாரித்தபோதே வழக்கம்போல நோட்டுக்களை எடுத்து நீட்டியிருக்கிறார். விசாரித்தவர் புத்திசாலி. நோட்டை நீட்டுவதால் அவரது நோக்கம் என்ன என்று யோசித்து, மடக்கிப் பிடித்துவிட்டார்.

பின்னர் பொலிஸ் நிலையத்தில் விசாரணையில் தனக்கு தெரிந்த அனைத்தையும் நெல்சன் சொல்லி முடித்துவிட்டார்.

உளவுப்புரிவைச் சேர்ந்தவர் என்பதால் சயனைட் கொண்டு திரிவதில்லை. சாதாரண நபராக நடமாடி, தடயம் எதுவும் இல்லாமல் சிக்கினால் மீண்டுவந்துவிடலாம் என்பதால் சயனைட் எதுவும் கொண்டு திரிவதில்லை.

நெல்சன் ஒரு கரும்புலி என்கிறது பொலிஸ் தரப்பு.

ஆனால் கரும்புலிகளுக்கு உளவு பார்க்கும் வேலை கிடையாது. குறித்த இலக்கு தீர்மானிக்கப்பட்டு, திட்டம் தயாரானதும் இலக்கு எதுவென்று காட்டப்படும். அதுவரை வேறு பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். காட்டப்படும் இலக்கை தாக்குவதோடு அவர்களது வேலை முடிந்துவிடும்.

கரும்புலியைவிட உளவுப்பிரிவுப் புலி ஒருவருக்கு அதிக தகவல் தெரியும். எந்தெந்த இலக்குகள் தாக்கப்பட தகவல்கள் திரட்டப்படுகின்றன என்று தெரியும்.

ஒரு கரும்புலி மாட்டிக்கொண்டால் குறிப்பிட்ட தாக்குதலை மட்டும் தடுக்கலாம். ஒரு உளவுப்பிரிவுப் புலி கைது செய்யப்பட்டால் பல தாக்குதல்கள் தொடர்பான திட்டங்களை அறிந்து கொள்ளலாம். அது தவிர கொழும்பில் புலிகளுக்குள்ள மறைவிடங்கள், தொடர்புகள் பற்றியும் விபரங்கள் கிடைத்துவிடும்.

நெல்சனிடம்இருந்து பெறப்பட்ட தகவல்கள் அவர் ஒரு உளவுப்பிரிவு ஆள் என்பதையே உறுதி செய்கின்றன. அந்த வகையில் பொலிசாருக்கு கிடைத்த ஒரு புதையல்தான் நெல்சன்.

புலிகளின் உளவுப்பிரிவைப் பொறுத்தவரை நெல்சனை கொழும்பு வேலைக்கு அனுப்பி வைத்தது ஒரு தவறான தெரிவுதான்.

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட வேறு புலி உறுப்பினர்கள் எவருமே கொடுக்காத தகவல்களை நெல்சன் மளமளவென்று ஒப்புவித்து விட்டார்.

கொழும்பில் புலிகள் திட்டமிட்டிருந்த பாரிய தாக்குதல் ஒன்று அம்பலமாகியிருக்கிறது. ஆயினும் சகல தயாரிப்புக்களையும் ஒரு குறிப்பிட்ட வீட்டில்வைத்து மட்டுமே புலிகள் செய்திருக்க முடியாது.

கொழும்பில் புலிகளுக்குள்ள பல இரகசிய தளங்களில் ஒன்றுதான் வெள்ளவத்தையில் மாட்டியிருக்கிறது.

வேறு இரகசிய தளங்களும் கொழும்பில் இருக்கலாம். ஒன்று மாட்டுப்பட்டால் மாற்று ஏற்பாடாக வேறு மறைவிடங்களும் இல்லாமல் போகாது.

ஒரே கூடைக்குள் சகல முட்டைகளையும் போடுவது என்பது இரகசிய நடவடிக்கைகளின் விதியல்ல.

அதனால் வேறுபல கூடைகளும் கொழும்பில் இருக்கின்றன என்று நம்பலாம்.

ஆனால் ஒன்று, வீதிச் சோதனைகள், வவுனியாவில் கடும் தடைபோட்டு பயணிகளை அலசி எடுத்து உள்ளே வரவிடுதல் போன்ற நடவடிக்கைகளால் கொழும்பிற்குள் புலிகள் தமக்கு தேவையானதை கொண்டு வரும் செயற்பாட்டில் பெரிய தடங்கல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# தளத்தில் புலிகள் திறந்த களம்

அலசுவது- இராஜதந்திரி

## மரணப் பொறியாக மாறியுள்ள வன்னியின் வனாந்தரங்கள்

யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பிலிருந்து வெளியேறி வன்னிக்காட்டினுள் குடியமர்ந்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முதலாவது தாக்குதலாகவே முல்லைத்தீவு இராணுவ முகாம்மீதான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது ஒரு மாபெரும் தாக்குதலாகவே அமைந்துள்ளது. அத்துடன் பொது ஜனஐக்கிய முன்னணி ஆட்சியாளருக்கு எல்.ரி.ரி.ஈ.யினரது பலத்தை நன்கு நிரூபித்த ஒரு தாக்குதலாகவும் முல்லைத் தாக்குதல் அமைந்திருந்தது.

கடந்த ஆண்டு முல்லைப்பிரதேசத்தில் மணலாறு இராணுவ முகாம் மீது பெருமளவிலான எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் பெருந்தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

ஆயினும் இராணுவத்தினர் அத்தாக்குதலை எச்சரிக்கையாகவிருந்து முறியடித்தனர். நூறுக்குமதிகமான எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் மணலாறுத்தாக்குதலின்போது கொல்லப்பட்டனர்.

இராணுவத்தினருக்கு எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிரான கடந்த 17 வருடகால யுத்தத்தில் கிடைத்த ஒரு பிரதான வெற்றிகளில் ஒன்றாகவும் மணலாறு முகாம் மீதான தாக்குதல் முறியடிப்பு விளங்கியிருந்தது.

மணலாற்றில் கிடைத்த வெற்றியையடுத்தே யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தன்வசப்படுத்தும் எண்ணம் இராணுவத்துக்குத் தோன்றியிருந்தது.

தாமதங்களுக்கு இடந்தராது, உரிய திட்டங்களை வகுத்து, 'சூரியக்கதிர்' என்ற பெயரில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இராணுவம் இறங்கியது; அம் முயற்சியில் வெற்றியும் கண்டது.

யுத்த டாங்கிகள், நவீன ஆட்டிலறிப்பீரங்கிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள், இராட்சத ஹெலிகப்டர்கள் சகிதம் ஆயிரக்கணக்கான துருப்பினர் யாழ்ப்பாண முற்றுகையில் குதித்தனர்.

அத்துடன் வடக்கு-கிழக்கில் உள்ள முக்கிய முகாம்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் சூரியக்கதிர் படையெடுப்பிற்குத் தலைமைதாங்கினர்.

மணலாறு பிரதேசத்தில்

புலிகளுக்கெதிராகச் சமரிட்ட படையினரை நெறிப்படுத்திய மேஜர் ஜெனரல் ஜனக பெரேராவும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் முன்னணி வகித்தார்.

இராணுவத்தைப் பொறுத்தவரை கடந்த 17 வருடகாலத்தில் தகுந்த தலைமைத்துவமின்மை, உட்பூசல்கள், அதிகாரப்போட்டி, அரசியல் தலையீடுகள் போன்று பல்வேறு பிரச்சினைகளும் மலிந்திருந்தன.

இருந்தபோதிலும் சூரியக்கதிர் வெற்றி இராணுவத்தின் ஒருங்கிணைப்புக்கு அடிகோலிவிட்டதுடன், எல்.ரி.ரி.ஈ. யினர் மீதான மேலாதிக்கம் குறித்து அதீத நம்பிக்கையையும் ஏற்படுத்திவிட்டிருந்தது.

இதன் காரணமாகவே எல்.ரி.ரி.ஈ.யினரது முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் பலவீனப்பட்டுவிட்டார்கள். தமது முடிவின் இறுதி நாட்களை அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் இராணுவத்தரப்பும், அரசாங்கமும் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினர் பல மோசமான இழப்புகளுக்கு முகங்கொடுத்திருக்கலாம்; யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பிலிருந்து கூட பின்வாங்கியிருக்கலாம்.

ஆயினும் அவர்களது முதுகெலும்பு முறிக்கப்படவில்லை. தொடர்ந்து நல்ல



பலத்துடனேயே அவர்கள் இருந்து வருகிறார்கள் என்பதனையே கடந்தவாரம் முல்லைத்தீவு முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் புலப்படுத்தியுள்ளது.

இராணுவரீதியான வளர்ச்சியைப் பொறுத்தவரை இலங்கையில் எல்.ரி.ரி.ஈ.யினரும், அரசபடையினரும் ஏறத்தாழ ஒரே வகையான வளர்ச்சிப்பாதையில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

பிரிட்டிஷ் இராணுவத்துடனிருந்து பின்னர் சுயமாக இலங்கை இராணுவம் இயங்க ஆரம்பித்தது.

ஆயினும் இலங்கைப்படையினரின் பெருக்கம், ஆளணிகளின் பயன்பாடு என்பன கடந்த 17 வருடகாலத்திலேயே குறிப்பிடத்தக்களவு விரிவடைந்துள்ளன.

இப்பதினேழு வருடகாலத்தில் எல்.ரி.ரி.ஈ.யினர்கூட படையினர் வைத்திருக்கும் அதே படைக்கலங்கள், கருவிகள், உபகரணங்கள் என்பவற்றையே தாமும் பெற்று ஏறத்தாழ ஒரு சமாந்தர நிலையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளது தொகை-ஒப்பீட்டளவில் இலங்கைப் படையினரைவிடக் குறைவாக இருக்கலாம்.

ஆனால் கைக்குண்டு முதல், கனரக ஆயுதங்கள் வரை இரு சாராரும் ஏறத்தாழ ஒரே விதமானவற்றையே கொண்டுள்ளனர்.

எனவே இலங்கையில் இரு வேறு பலம் பொருந்திய இராணுவ ரீதியான அமைப்புகள் இருக்கின்றன என்றே கூறமுடியும்.

இந்த இரு தரப்பும் காலத்துக்குக்காலம் ஒன்றன்மீது மற்றொன்றாக அவ்வப்போது ஆதிக்கஞ்செலுத்தலாம். ஆயினும் அவற்றின் பலம் குறைந்து விட்டதாகவோ அல்லது முறியடிக்கப்பட்டுவிட்டதாகவோ அனுமானிப்பது தப்புக்கணக்காகவே இருக்கும்.

எல்.ரி.ரி.ஈ.யினர் 1990ம் ஆண்டு-இந்திய அமைதிப்படையினர் இலங்கையிலிருந்து வெளியேறியதையடுத்து-யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பில் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

அப்போது இராணுவத்தினருக்கு வடக்கே பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

இருந்தபோதிலும் இராணுவத்தினர் தமது பிரதான தளமான பலாலியை வடக்கே தக்கவைத்துக்கொண்டனர். பாலாலியுடன் இணைந்த சுற்றுப் புறப்பகுதிகளையும் நாளடைவில் படிப்படியாக விஸ்தரித்துக்கொண்டனர்.

ஆனால் கடந்த ஆண்டு இடம்பெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது வடக்கே தம்மை மீண்டும் கட்டி எழுப்பி, யாழ்ப்பாணத்திலிருந்தும் எல்.ரி.ரி.ஈ.யினரை ஆயுதப்படையினர் பின்வாங்கச் செய்தனர்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்தும் அகன்ற எல்.ரி.ரி.ஈ.யினர் வன்னிப்பகுதிக்குள் நுழைந்து அதனை தமது பிரதான தளமாக்கிக் கொண்டனர்.

வன்னிப் பிரதேசம் புலிகளுக்கு ஒரு பலம்மிக்க தளமாகவே இருந்து வருகின்றது. இத்தளத்திலிருந்து தம்மைச் சுதாகரித்துக் கொண்டு அவர்கள் நடத்திய முல்லைத்தாக்குதலே ஆயுதப்படையினரையும், அரசாங்கத்தையும் திணறடிக்கச் செய்துள்ளது.

இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்த போதும் எல்.ரி.ரி.ஈ.யினர் யாழ் தளப் பிரதேசத்தில் இருந்து பின்வாங்கி, வன்னியை தளமாகக் கொண்டிருந்தனர். இந்தியப் படையின் வெளியேற்றத்தோடு மீண்டும் யாழ் பிரதேசம் எல்.ரி.ரி.ஈ.யின் தளமானது.

தாம் எதிர்பார்க்கின்ற நிர்வாக முறை, ஏனைய பிரதேசங்களுக்கான தமது இராணுவ விநியோகம் என்பவற்றை யாழ் தளப் பிரதேசத்தில் இருந்தே எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்டுவந்தனர்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் மீண்டும் எல்.ரி.ரி.ஈ.யினர் தமது தளப்பிரதேசமாக வன்னியை மாற்றிக்கொண்டனர். ஆக, தளப் பிரதேசங்கள் அடிக்கடி மாறினவே தவிர, எல்.ரி.ரி.ஈ.யின் அடிப்படையான இராணுவ பலம் வீழ்ச்சியடையவில்லை.

தற்போது வன்னித் தளத்தை பலமாக்குவதற்காக எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்ட தாக்குதலே முல்லைத்தீவு தாக்குதலாகும். அத்துடன் சூரியக்கதிரின் பின்னர் தமது வன்னித் தளத்தில் எல்.ரி.ரி.ஈ. திறந்துள்ள முதலாவது களமாகவும் இது அமைந்துள்ளது.

சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் வடக்கே பூநகரிப் பிரதேசத்திலும் எல்.ரி.ரி.ஈ.யினரது பெருந்தாக்குதலொன்று இடம் பெற்றது. இதில் சுமார் 500க்குமதிகமான படையினர் கொல்லப்பட்டனர். யுத்த டாங்கிகள் அழிக்கப்பட்டன. பெருந்தொகையான ஆயுதங்களும் எல்.ரி.ரி.ஈ.யினரால் கொண்டு செல்லப்பட்டன. கடற்படைக் கப்பல்களும் கைப்பற்றப்பட்டன.

பூநகரியில் 'தவளைப் பாய்ச்சல்' என்று பெயரிடப்பட்டு எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட பெருந்தாக்குதலாகவே முல்லைத்தீவுத் தாக்குதல் விளங்குகின்றது.

முல்லைத்தாக்குதல் பல்வேறு விடயங்களையும் தீரச்சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக இருக்கின்றது.

வனாந்தரப் பிரதேசமான வன்னி எல்.ரி.ரி.ஈ.யினரது ஒரு பலம்மிக்க தளமாக இருப்பதையே இத்தாக்குதல் உணர்த்தியுள்ளது.

எனவே எல்.ரி.ரி.ஈ.யினரை முழுமையாகக் களையெடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தீர்மானித்தால் வன்னிக்காடுகளுக்குள் காலடி எடுத்து வைப்பதைத்தவிர வேறுவழி எதுவுமே இருக்கமுடியாது.

வன்னியின் மத்தியில் கொக்காவில், மாங்குளம், ஒட்டுசுட்டான் போன்ற இராணுவ நிலைகள் மீது எல்.ரி.ரி.ஈ.யினர் கடந்த காலங்களில் நடத்திய தாக்குதல்கள் படையினரைச் சிதறடித்திருந்தன.

அத்துடன் வன்னியில் படையினர் நிலைகொள்வது, எவ்வகையினும் சாத்தியப்படாது என்ற உண்மையைப் புலப்படுத்துவதாகவும் அத்தாக்குதல்கள் அமைந்திருந்தன.

இந்நிலையில் வன்னியின் வனாந்தரங்கள் பெரும் மரணப் பொறியாக மாறியிருப்பதே உண்மையாகும்.

வன்னியில் தமது தளத்தைப் பலமாக வைத்திருக்கும் அதேசமயம், யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பிலும் கிழக்குமாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் எல்.ரி.ரி.ஈ.யினர் தமது கெரில்லாத்தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வரவே செய்வர்.

நாட்டின் அமைதிக்கும், அபிவிருத்திக்கும் வடக்கு-கிழக்குப் பிரதேச தாக்குதல்கள் குந்தகமாக இருந்து வரப்போவது மட்டும் முல்லைத்தாக்குதல்மூலம் திண்ணமாகியுள்ளது.

இத்தகைய பாரதூரமான-அபாயகரமான நிலையை எதிர்கொள்ள இராணுவ நட்வடிக்கைகள் தவிர்ந்த மாற்றுவழிகளையே கையாளவேண்டியது இன்றியமையாததாகின்றது.

அம்மாற்றுவழி-அரசியல் அணுகுமுறையைத் தவிர வேறெதுவுமாக இருந்துவிட முடியாது.

# “வெளிநாட்டுத் தமிழர்கள் அரசியல் தலைமைத்துவம் கொடுக்க முடியுமா என்று ஆராய வந்திருக்கிறேன்!”

தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருந்தார். அங்கு எஸ்.பி.எஸ் வானொலிக்காக அவரைப் பேட்டி கண்டார் வசந்தராஜா. (முன்னாள் ருபவாகினித் தலைவர்) அப் பேட்டியில் இருந்து ஒரு பகுதி:

வசந்:- தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் உங்களுக்கும் உள்ள உறவு எப்படியானது?

குமார்:-எங்களுடைய உறவு நன்றாக வந்து கொண்டிருந்தது. இருந்தாலும் கடந்த தேர்தலின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு, தலைகீழாக நின்று, நேர்மையற்ற ரீதியில் அரசாங்கத்தை ஆதரிக்கத் தொடங்கிய பின்னர் கசப்பு ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, தமிழர் விடுதலைக்



கூட்டணிக்கு இன்று ஒரு தலைவர் இருக்கிறாராம். அவருக்கு வேறு விசயங்கள் ஒன்றும் தெரியாது. முற்கோபம்தான் வருகின்றது. அப்படியான ஒரு நிலையில், நேர்மையாக அரசியல் நடத்த விரும்பும் ஆட்கள் கூட்டணியுடன் செயற்பட முடியாமல் இருக்கிறது.

வசந்- ஆகையினால் நீங்களும், அவர்களும் பேசுவதுகூட இல்லைப்போல் தோன்றுகிறது. அப்படித்தானே?

குமார்:- இல்லை. சில அங்கத்தவர்களுடன் கடந்தகாலங்கள் போல் அரசியல் ரீதியில் நான் பேசுவது உண்டு. ஆனாலும் உத்தியோகபூர்வ ரீதியில் எமக்கும் அவர்களுக்கும் உறவு கிடையாது.

வசந்:- நீங்களும் அவர்களும் போட்டியாளர்கள் என்று கூறலாமா?

குமார்:- அப்படிச்சொல்ல முடியாது. ஏனென்றால் தமிழர் விடுதலைக் கூட்டணி நேர்மையற்ற கட்சி. தமிழ் காங்கிரஸ் நேர்மையாக இயங்கப் பார்க்கின்றது.

வசந்:- தமிழர் உரிமைப் போராட்டம் பற்றி தற்போது உங்கள் கருத்து என்ன?

குமார்:- என்னுடைய தற்போதைய அரசியல் கருத்து என்னவென்றால், இலங்கையில் பாராளுமன்றத்தில் உள்ள தமிழர்களின் பிரதிநிதிகள், தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் அருகதை இல்லாமல் போயிற்று. ஆகவே, அரசியல் ரீதியில் இனிமேல் தமிழர்களது நிலைப்பாட்டைச் சொல்வதென்றால், இலங்கைக்கு அப்பாற்பட்ட நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் அரசியல் ரீதியல் தலைமைத்துவம் கொடுக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்ப்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன்.

வசந்:- நல்லது குமார் பொன்னம்பலம், நீங்கள் மேலே ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

குமார்:- இல்லை. வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தங்களுடைய தனிப்பட்ட குரோதங்களை மறந்து, தங்களுடைய அரசியல் யோசனைகளை திடகாத்திரமாக முன்வைக்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

## பூலான்தேவி பேசுகிறேன்

தருவது—ரசிகன்

# கொள்ளை ராணி

# பூலான்தேவி

# 2

***நா**ன் பிறந்ததே என் பெற்றோர்களின் விருப்பத்தையும் மீறித்தான் என்றால் நம்புவீர்களா?*

ஆனால் அதுதான் உண்மை. என் அப்பா தேவிதீனுக்கும், அம்மா மூலாவுக்கும் ஆண் குழந்தை மீதுதான் ஆசை.

பாரதமாதா என்பார்கள். பெண்தான் தெய்வம் என்பார்கள். பெண்மை மதிக்கப்படுவதே பாரத பூமியில்தான் என்றும்



பூலான்

கூறுவார்கள். தமக்குப் பிறக்கும் குழந்தை மட்டும் பெண்ணாகப் பிறந்துவிடக்கூடாது என்று நேர்த்திக்கடன் வைருப்பார்கள்.

என் தாய், தந்தையும் அப்படித்தான் இருந்தார்கள். 1954 இல் முதற் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை. அதற்கு ருக்குமணி என்று பெயரிட்டார்கள்.

முதற் குழந்தை பெண் குழந்தையாகி விட்டதே, இரண்டாவது குழந்தையாகவேனும் ஒரு ஆண் குழந்தை பிறக்காதா? என்ற ஆசையில் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அம்மா ஒரு சாமியாரிடம் போனாள்.

"என்ன வரம் வேண்டும் மகளே?"

"பிள்ளை வரம் வேண்டும்!"

"என்ன..?"

"சாமி; எனக்குப் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாக பிறக்கவேண்டும் சாமி!"

சாமியார் பூசை நடத்தினார். ஒரு முத்தை எடுத்து அரைத்துத் தூளாக்கினார். அதனைப் பாலுடன் கலந்து பருகினால் பிறக்கும் குழந்தை ஆணாகப் பிறக்கும் என்றார் சாமியார்.

சாமியாருக்கு காணிக்கை செலுத்தினார் அப்பா. "கலங்காதே மகனே! உனக்கொரு ஆண் குழந்தை மூக்கும் முழியுமாக பிறக்கப் போகிறான் பார்!"

1957 இல் அம்மாவுக்கு பிரசவம்.

பிறந்தது மூக்கும் முழியுமாக ஒரு அழகான ஆண்குழந்தையல்ல, பெண் குழந்தை!

அதுதான் நான்!

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் கவலைதான். அப்பா சாமியாரைத் தேடிப் போனார். அவர் தலைமறைவாகியிருந்தார்.

நான் ரொம்ப அழகாக இருந்தே



ஜமுனாநதி

னாம். அதனால் பூலான்தேவி என்று பெயர் வைத்தார்கள்.

பூலான்தேவி என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? மலர்களின் தேவதை!

என் தாயும், தந்தையும் சற்றும் மனம்தளராமல் தொடர்ந்தும் ஆண்குழந்தைக்காக முயன்றதில், எனக்குப் பின்னரும் மேலும் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். ஐந்தாவதாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு சிவ நாராயணன் என்று பெயர் வைத்தார்கள்.

மூன்று பெண் குழந்தைகளாச்சே. இன்னொரு ஆண்குழந்தையும் பிறந்தால் இரண்டு ஆண் குழந்தைகளாக இருக்குமே. அவை ஆளாகினால் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ளுமே என்று அப்பா சொன்ன யோசனையை அம்மாவும் ஏற்றுக்கொண்டாள்.

மீண்டும் முயற்சி. ஆனால் ஏமாற்றம். ஆறாவதாகப் பிறந்தது பெண் குழந்தை.

அத்தோடு என் பெற்றோர் புதிய உற்பத்தி எதிலும் ஈடுபடாமல் நிறுத்திக் கொண்டதுதான் ஆறுதலான விஷயம்.

ஆறு குழந்தைகளையும் நிறைவாக வளர்க்கும் அளவுக்கு எங்கள் குடும்பம் ஒன்றும் வசதியான குடும்பம் அல்ல.

என் தாத்தாவுக்கு இரண்டு பிள்ளைகள். அதில் இளைய பிள்ளையின் பெயர் தேவிதீன். அவர்தான் என் அப்பா.

மூத்த பிள்ளை பிஹாரிலால். பிசாசு என்று பெயர் வைத்திருக்கலாம். பேராசை பிடித்த மனுசன்.


என் தாத்தா என் அப்பாவை பள்ளிக்கூடப் பக்கமே அனுப்பவில்லை. காணியில் வேலைக்கு வைத்துக்கொண்டார். அந்தப் பிசாசை மட்டுமே பள்ளிக்கு அனுப்பினார்.

தன் அண்ணன்மீது என் அப்பாவுக்கு கொள்ளை ஆசை. அந்த அண்ணன் என்ன செய்தான் தெரியுமா?

தாத்தா செத்துப் போனதும் என் அப்பாவுக்கு என்று இருந்த காணியையும் வளைத்துப் போட்டுக்கொண்டான்.

என் அப்பாவுக்கு மிஞ்சியது அரை ஏக்கர் காணிதான். அக் காணியில் ஒரு குடிசை போட்டுத்தான் நாங்கள் எல்லோரும் குடியிருந்தோம்.

நான் சின்னவயதில் துருதுருவென்று இருந்தேன். குறும்புகள் செய்வேன். சில வேளைகளில் அம்மா விழுந்து விழுந்து சிரிப்பாள். மற்றும் சில வேளைகளில் என் முதுகில் நாலு சாத்துச் சாத்துவாள். என்



பூலான்தேவியின் பூர்வீகக் கிராமம்

அக்கா ருக்குமணி இருக்கிறாளே, அவள் ஒரு பயந்தாங்கொள்ளி. சோம்பேறி.

எனக்கு பத்து வயதான போது ஓரளவு விபரம் தெரியத் தொடங்கியது.

அப்பா தினமும் கொஞ்சப் பணத்தை அம்மாவிடம் கொடுத்துவைப்பார். நாங்கள் பட்டினி கிடந்தாலும்கூட அம்மா அந்தப் பணத்தை தொடமாட்டாள்.

எப்போதாவது ஒருநாள் அந்தப் பணம் முழுவதையும் அப்பா வாங்கி எண்ணிப்பார்ப்பார். பின்னர் அந்தப் பணத்தோடு அதிகாலையில் எங்கோ புறப்பட்டுச் செல்லுவார்.

"அப்பா எங்கே போகிறார் அக்கா?" ருக்குமணியிடம் கேட்பேன்.

"போய்விட்டாரா? இங்கேதானே இருந்தார்" என்பாள் அப்பாவியாக. அவளுக்கு எதைப் பற்றியும் அக்கறையில்லை. தானுண்டு, தன் பாடுண்டு என்று இருந்துவிடுவாள். பரம சாது.

அதிகாலையில் செல்லும் அப்பா இருளத் தொடங்கிய பின்னர்தான் வீடு திரும்புவார். முகம் இருளடைந்திருக்கும்.

ஒரு நாள் அம்மாவிடமே கேட்டு விட்டேன். அம்மாதான் சொன்னாள்.

"எங்களுக்குச் சேர வேண்டிய காணியை உன் பெரியப்பா பிடித்துவைத்திருக்கிறார். அதற்குத்தான் வழக்கு நடக்கிறது. அதற்காகத்தான் அப்பா அலைந்து திரிகிறார்."

"எங்கள் காணியை பெரியப்பா ஏன் பிடித்துவைத்திருக்கிறார்?"

"ஆசைதான், வேறென்ன?"

"திருப்பித்தரச் சொல்லி பெரியப்பாவிடமே கேட்கலாம்தானே!"

"கேட்கப்போனால் ஆட்களை வைத்து அடித்துத் துரத்திவிடுவார் அம்மா. உன் பெரியப்பா ரொம்பப் பொல்லாதவர்."

"அநியாயம்தானே." என்று கேட்டேன். அம்மா என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். வயதுக்கு மீறின பேச்சாகப் பட்டிருக்கலாம். "அநியாயம்தான்.. போ..போய் விளையாடு" என்றுவிட்டுப் போய்விட்டாள்.

எனக்கு விளையாடப்போகப் பிடிக்கவில்லை. பெரியப்பாவின் உருவத்தை மனதில் கற்பனை பண்ணிக்கொண்டு, நான் கல்லால் எறிந்து துரத்துவது போலவும், பெரியப்பா தலைதெறிக்க ஓடுவதுபோலவும் நினைத்துப் பார்க்கவே சந்தோஷமாக இருந்தது.

காணியையும் பறிகொடுத்துவிட்டு பணத்தையும் செலவு செய்துகொண்டு அப்பா ஏன் கஷ்டப்படவேண்டும். பெரியப்பாவை பிடித்து நாலு உதை கொடுக்க வேண்டியதுதானே. பாவம் அப்பா. நோஞ்சானாக இருக்கிறார். அந்தப் பெரியப்பா தொந்தியும், தாட்டியான உடம்புமாய் குட்டியானை மாதிரி இருப்பார்.

எங்களை பள்ளிக்கு அனுப்ப அப்பாவிடம் வசதியில்லை. அரை ஏக்கர் காணியில் நானும், ருக்குமணியும் அப்பாவுக்கு ஒத்தாசையாக வேலை செய்து கொடுப்போம்.

நானும் ருக்குமணியும் ஒன்றாகத்தான் சுற்றித்திரிவோம்.

ஜமுனா ஆற்றில் நீச்சலடிப்பதென்றால் எனக்கு நேரம் போவதே தெரியாது. ருக்குமணி கரையில் நின்று குளிப்பாள்.

நான் மட்டும்தான் ஒரு மீன்குஞ்சுமாதிரி நீச்சலடித்துத்திரிவேன்.

என் சிறுவயதில் நான் அனுபவித்த சந்தோசம் என்ற ஒன்று இருக்குமானால், ஜமுனா ஆற்றில் நான் நீச்சலடித்த பொழுதுகள்தான் அவை.

அப்படித்தான் ஒருநாள் என் அக்கா ருக்குமணியையும் இழுத்துக்கொண்டு அக்கரைக்குச் சென்றுவிட்டேன்.

"எங்கே போகிறாய்?" என்று கேட்டாள் அக்கா.

"எங்கள் காணிக்கு!"

"எங்கள் காணியா? அய்யய்யோ பெரியப்பா கண்டால் நொறுக்கிப் போட்டுவிடுவார். வேண்டாம் வாடி!" என்றாள். நான் விடவில்லை.

அவளையும் இழுத்துக்கொண்டு ஓடினேன். எங்கள் காணியில் கால்வைத்தபோது எனக்கு சந்தோசமாக இருந்தது. மறுபுறம் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இது எங்கள் பூமி. அப்பாவை ஏமாற்றி பெரியப்பா பிடுங்கிக்கொண்டிருக்காவிட்டால் எவ்வளவு சந்தோசமாக இருந்திருப்போம்.

கடலைச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. அறுவடைக்குத் தயாராக காய்த்துக் குலுங்கிக்கொண்டிருந்தன.

நான் சில கடலைக் காய்களைப் பறித்துக் கொண்டேன். "வேண்டாம். எனக்கு பயமாக இருக்கிறது. ஓடிவிடலாம் வாடி" என்றாள் ருக்குமணி.

"பயப்பிடாதே வா. எங்கள் காணிதானே!" அப்போதுதான் காணிக்கு காவலாக இருந்தவர்கள் எங்களைக் கண்டனர்.

"ஏய்.. என்ன செய்கிறீர்கள்? யார் உங்களை உள்ளே வரச்சொன்னது?" என்று ஓடிவந்தார்கள். எங்களை அடையாளம் தெரிந்ததும் தயங்கினார்கள். அக்கா ருக்குமணி பயந்துகொண்டு என் முதுகின் பின்னால் ஒளிந்துகொண்டாள்.

"உங்கள் வீட்டுக்கு ஒழுங்காகப் போய்ச் சேருங்கள்" என்றான் ஒருத்தன். எனக்கு அவன் கழுத்தை நெரித்துவிடலாம் போலிருந்தது.

"ஏன், இதுவும் எங்கள் வீடுபோலத் தானே!" என்று காட்டமாகச் சொல்லிவிட்டு, அவன் கண்முன்பாகவே கடலைக் காய்களைக் கொத்தாகப் பறித்து நீட்டினேன். "நீயும் தின்று பார். சுவையாக இருக்கிறது!" என்றுவிட்டு பலமாகச் சிரித்தேன்.

காவலர்களில் ஒருவன் ஓடிப்போய் பெரியப்பாவின் மகன் மையாதீனிடம் சொல்லி அவனை அழைத்து வந்தான். அவனுக்கு 20 வயதிருக்கும். எனக்கு அண்ணன் முறை.

வெள்ளை மேல்சட்டையும், வெள்ளை தார்பாச்சி, தலைப்பாகை சகிதம் மையாதீனைப் பார்க்க எனக்கு சிரிப்பாக இருந்தது.

என் அக்கா நடுங்கிக்கொண்டிருந்தாள். "வாடி ஓடிப்போகலாம்" என்றாள் என் காதுக்குள். நான் அசையவில்லை.

நான்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று நான் நின்ற தோரணையைப் பார்த்தே தெரிந்திருக்கவேண்டும். என்னை முறைத்துக் கொண்டு, "ஓடிவிடுங்கள். என் காணிப்பக்கம் வந்தால் காலை ஒடித்து விறகாக்கிவிடுவேன்" என்றான் மையாதீன்.

கடலைப் பயிரின் பூவைப் பறித்து வீசியபடியே நான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். "எது உங்கள் காணி? யார் சொன்னது? இது முழுக்க எங்களுக்கும் சொந்தமாக்கும்!"

மையாதீனுக்கு முகம் சிவந்துபோனது. உதடுகள் துடிக்க, "இந்த நாய்களை வெளியே தூக்கி வீசுங்கள்" என்றான்.

காவலர் ஒருவன் என்னைப் பிடிக்க வந்தான். நான் சுற்றி சுற்றி ஓடினேன். அக்கா பயத்தில் கூச்சலிடுவது கேட்டது. நான் ஓடிப்போய் அக்காவைப் பிடித்திருந்தவனின் கையை பலமாகக் கடித்தேன். "அய்யோ.." என்று அலறியபடியே அவன் தன் பிடியை விட்டான்.

அதைப்பார்த்ததும் அந்தப் பிசாசு என்னை நோக்கிப் பாய்ந்தது. (தொடர்ந்து வரும்)

# உறவு மலர்ந்தது வரவு குவிந்தது!

# ஜெயா-சசி சாம்ராச்சியம்

***கா**லம் மாறினால் கௌரவம் மாறுமா?'* மாறும். விதைத்ததை அறுவடை செய்து தானே ஆகவேண்டும்.

நேற்றைய சக்கரவர்த்தினி ஜெயலலிதாவின் உயிர்த்தோழி இப்போது சிறையில் இருப்பதும் அப்படித்தான்.

பெரியம்மா, சின்னம்மா. பெரியம்மா முதல்வராக இருந்தாலும் சின்னம்மாதான் நிழல் முதல்வராக இருந்து ஆள், அம்பு, அடியாள் பட்டாளம் வைத்து ஆட்சி நடத்தினார்.

ஒரு கட்டத்தின் பின்னர் ஜெயலலிதா விரும்பியும், விரும்பாமலும் சசிகலாவின் சொற்படிதான் ஆட்சி நடத்தினார்.

ஜெயலலிதா புத்திசாலி. சசிகலாவை கேடயமாக வைத்து காரியம் சாதித்தார் என்கிறார் கலைஞர். ஜெயலலிதாதான் அவரது அரசியலுக்கு தடை என்பதால் கலைஞர் அப்படிப் பேசலாம்.

ஆனால், ஜெயலலிதாவைவிட புத்திசாலி சசிகலாதான். மெல்ல, மெல்ல ஜெயலலிதாவை தனது பிடிக்குள் கொண்டுவந்து தான் மட்டுமல்ல, தன் உற்றார், உறவினரையும் கோடீஸ்வரர்களாக்கியது சாதாரண காரியமா?

இது எப்படி சாத்தியமானது? சசிகலா பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகம்.

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவர் சசிகலா. அவரது குடும்பம் ஒரு கட்டத்தில் வறுமையில் வாடியது.

சசிகலாவுக்கு நடராஜனை திருமணம் செய்துவைத்தார்கள். தி.மு.க.வின் மாணவர் அணியில் தீவிரமான தொண்டர்களில் ஒருவராக இருந்தவர் நடராஜன். இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் கலந்துகொண்டவர்.

அதனால் தி.மு.க.ஆட்சியல் நடராஜனுக்கு வேலை கிடைத்தது. நடராஜன்-சசிகலா திருமணம் கலைஞர் தலைமையில்தான் நடைபெற்றது.

எம்.ஜி.ஆர்.ஆட்சிக்காலத்தில் நடராஜனுக்கு வேலை பறிபோனது. அதனால் சசிகலா நடராஜன் இருவரும் தங்கள் அன்றாட சீவியத்துக்கே கஷ்டப்பட்டனர். சசிகலாவின் நகைகளை விற்று காலம் தள்ளினார்கள். பின்னர் நடராஜனுக்கு வேலை கிடைத்தது.

அக்காலத்தில்தான் சென்னையில் ஒரு வீடியோ கடை ஆரம்பித்தார் சசிகலா.

ஜெயலலிதாவின் வீட்டுக்கு அருகேதான் அந்த வீடியோ கடை இருந்தது.

தனிமையில் இருந்த ஜெயலலிதாவுக்கு புத்தகங்களும், வீடியோக்களும்தான் பொழுது போக்கு.

சசிகலாவின் வீடியோ கடைகளில் இருந்தும் வீடியோ கொப்பிகள் தருவித்துக்கொண்டார். ஜெயலலிதாவின் வேலையாள் ஒருவர்தான் கடைக்கு வந்து எடுத்துச் செல்வார்.

ஜெயலலிதாவுக்குத்தான் வீடியோ கொப்பிகள் செல்கிறது என்று அறிந்ததும் சசிகலாவுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது.

நானே நேரில் அவரைச் சந்தித்து தேவையான வீடியோக் கொப்பிகளை கொடுத்தால் என்ன? ஒருநாள் நேராகவே சென்றுவிட்டார். நீண்டநேரம் வரவேற்பறையில் காத்திருந்தார். ஜெயலலிதா வந்ததும் எழுந்து வணங்கினார்.

சசிகலாவின் பேச்சு லாவகம் யாரையும் கவர்ந்து இழுத்துவிடும். ஜெயலலிதாவுக்கு சசிகலாவைப் பிடித்துவிட்டது.

தனக்குத் தேவையான வீடியோப் படங்களின் பெயர்களைச் சொல்லுவார் ஜெயலலிதா. தனது கடையில் இல்லாவிட்டாலும் வேறு எங்காவது தேடிப்பிடித்து தந்துவிடுவார் சசிகலா.

எம்.ஜி.ஆரின் நேரடிக் கவனிப்பில் இருந்தவர் ஜெயலலிதா. அவரது வீட்டிற்கு யார் வருகிறார்கள், போகிறார்கள் என்ற தகவல்கள்கூட எம்.ஜி.ஆருக்கு சென்றுவிடும்.

அப்படியிருந்தும் திருநாவுக்கரசு, சேலம் கண்ணன் போன்றவர்கள் ஜெயலலிதாவுடன் நெருக்கமாக இருந்தனர்.

அவர்களைத்தவிர வேறு நல்ல நண்பர்களோ, நண்பிகளோ ஜெயலலிதாவுக்கு கிடையாது.

ஜெயலலிதாவின் அண்ணன் குடும்பம் மட்டுமே அவருடன் தங்கியிருந்தது.

அந்த நிலையில் சசிகலாவின் நட்பு ஜெயலலிதாவுக்கு ஆறுதலாக அமைந்தது. ஜெயலலிதாவின் தனிமையை பயன்படுத்திக் கொண்டு மேலும் மேலும் நெருக்கமானார் சசிகலா.

ஜெயலலிதா கேட்காத வீடியோப்படங்களையும் கொண்டுவந்து கொடுத்தார். இருவரும் தனிமையில் இருந்து பார்த்தனர்.

மெல்ல மெல்ல ஜெயலிதா சசிகலாவின் பிடிக்குள் சென்றுகொண்டிருந்தார். இந்த விடயம் எம்.ஜி.ஆருக்கும் தெரிய வந்தது. சசிகலா பற்றி விசாரித்தார். பிரச்சனை எதுவும் ஏற்படாது என்பதால் எம்.ஜி.ஆர் தலையிடாமல் இருந்துவிட்டார்.

எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா இடையே அடிக்கடி பிணக்குகள் ஏற்படும். அப்போது ஜெயலலிதாவுக்காக எம்.ஜி.ஆரிடம் தூதுசென்று சமரசம் செய்யுமளவுக்கு வளர்ந்திருந்தார் சசிகலா.

நடராஜனுக்கும் செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி பதவி கிடைத்தது.

எம்.ஜி.ஆரின் மறைவின்பின்னர் ஜெயலலிதாவுக்கு சோதனை மேல் சோதனை. தேர்தலிலும் தோல்வி. பணக்கஷ்டம். விரக்தியின் எல்லைக்கே சென்றார். அரசியலை விட்டு ஒதுங்குவதாக கடிதம் எழுதினார்.

அப்போது ஜெயலலிதாவை தடுத்து நிறுத்தி அவரது விரக்தியைப் போக்கியது சசிகலாவும், நடராஜனும்தான். நடராஜன் வெளி நிலமையைக் கவனித்துக் கொண்டார். சசிகலா ஜெயலலிதாவின் மனம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும்படி பார்த்துக் கொண்டார். உணர்வு பூர்வமான, உணர்ச்சி பூர்வமான நட்பு இருவருக்கும் இடையே பிரிக்க முடியாதபடி வளர்ந்தது அப்போதுதான்.

இந்த நட்புக்கு முதலில் பலியானது ஜெயலலிதாவின் அண்ணன் குடும்பம். போயஸ் தோட்டத்தில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஜெயலலிதாவுடன் தன்னைத் தவிர வேறு எவரும் நெருக்கமாக இருப்பதை சசிகலா விரும்பவில்லை.



அடுத்த காயை நகர்த்தினார் சசிகலா. திருநாவுக்கரசு, சேலம் கண்ணன் போன்றோருக்கு கல்தா கொடுக்கப்பட்டது.

சசிகலாவுக்கு முன்னர் ஜெயலலிதாவுடன் நெருக்கமாக இருந்தவர் சந்திரலேகா. அவர் அரசாங்கத்தில் உயர்பதவியில் இருந்தவர்.

ஜெயலலிதா முதல்வரான பின்னர் சந்திரலேகாவுடன் ஒரு பிரச்சனை. பைல் ஒன்றில் கையெழுத்துப் போட மறுத்தார் சந்திரலேகா.

அதுதான் சந்தர்ப்பம் என்று திட்டம் போட்டார் சசிகலா. ஜெயலலிதாவும், சந்திரலேகாவும் எப்போதுமே மீண்டும் தமது நட்பை புதுப்பித்துக்கொள்ளாத வகையில் ஒரு காரியம் செய்தார்.

சந்திரலேகா சசிகலாவைவிட அழகாகவும் இருப்பார். அதுவும் பொறாமை.

சந்திரலேகாவின் முகத்தில் அசிட் வீச உத்தரவிட்டார் சசிகலா. பாவம், சந்திரலேகா முகம் கருகி, பின்னர் சிசிச்சையால் பிழைத்துக் கொண்டார்.

சின்னம்மாவின் ஆட்சி கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியது அப்படித்தான்.

அமைச்சர்களை ஜெயலலிதா சார்பாக அதிகாரம் செலுத்தியது சின்னம்மாதான். அவரது செல்வாக்குக்கு பயந்த அதிகாரிகளும் சின்னம்மா சொல்வதை வேதவாக்காக எடுத்துக்கொண்டனர்.

ஜெயலலிதாவுக்கு நடராஜனைப் பிடிப்பதில்லை. தனது உயிர்த்தோழி அவரது கட்டுப்பாட்டில் இருப்பதும் பிடிக்கவில்லை. அதனால் நடராஜனை போயஸ் தோட்டப் பக்கம் வராமல் தடுத்தார் ஜெயலலிதா.

ஆனால் நடராஜன் மறைமுகமாக அரச விடயங்களில் தலையிடுவதையும் மனம் போல் சம்பாதிப்பதையும் ஜெயலலிதா தடைசெய்யவில்லை.

ஜெயா-சசி உறவு வளர்ந்ததும், வலுப்பட்டதும் இவ்வாறுதான்.

இப்போது குறைந்தது ஆயிரம் கோடியாவது ஜெயாவிடமும், சசியிடமும் இருக்கலாம் என்பது பரவாலான பேச்சு.

சாதாரணப் பெண்ணாக இருந்து சக்கரவர்த்தினியாக மாறியவர் சசிகலா. வழக்குகள், விசாரணைகள் எல்லாம் ஒரு வரம்போடு நின்றுவிடும். அவற்றால் ஜெயலலிதாவோ, சசிகலாவோ தமது சொத்துக்களை இழக்கப்போவதில்லை. சுருட்டிய வரை இலாபம் என்பதுதான் பொருத்தம்.



படிப்பகம்

www.padippakam.com

# மனம் சாயலாமா?



சுண்டுவிரலில் காயம் பட்டாலே கலங்கிப்போகிறோம். சுண்டுவிரல் போனால் அவ் வளவுதான். வாழ்க்கையே போனது போல நத்தையாய் மனம் சுருண்டு போகும்.

ஆனால் மூர்த்தி அப்படியான ரகம் அல்ல. தன்னம்பிக்கை மலைபோல இருக்கிறது.

வீதி விபத்தொன்றில் மூர்த்தியின் இரண்டு கால்களும் பறிபோய்விட்டன. மனைவி, பிள்ளைகள் உறவினர்கள் தேம்பித் தேம்பி அழுதனர். மூர்த்தியும் சேர்ந்து அழவில்லை. ஆச்சரியமாக அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார்.



"கால்தானே போனது, என்ன தலையா போய்விட்டது?" தம்மை தைரியப்படுத்தத்தான் மூர்த்தி அப்படிப் பேசுகிறார் என்றுதான் எல்லோரும் நினைத்தனர்.

ஆனால் மூர்த்தியோ செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு நடை பழகினார். மூன்றாவது மாடியில் ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு, மேலே போதல், கீழே இறங்குதல், தண்ணீர் எடுத்துச் செல்லல் என்று பலத்த முயற்சியில் இறங்கினார்.



முயற்சி திருவினையாகியது. இப்போது மூர்த்தி சைக்கிள் ஓடுகிறார். மோட்டார் சைக்கிள் செலுத்துகிறார். மூர்த்திக்கு வயது 50. மலை சாயலாம், மனம் சாயக்கூடாது என்பது மூர்த்தி சொல்லும் மந்திரம்.

## தகவல் பெட்டி

# பளிங்கினால் ஒரு மாளிகை

கலை நயமான பளிங்குப் பொருட்களை உருவாக்குவதில் சீனர்கள்தான் முன்னோடிகள். மற்றும் கில்லாடிகள். அதனைத்தான் பளிங்குப் பொருட்களை உருவாக்கும் களிமண்ணைக்கூட சீனாவின் களிமண் என்று நம்நாட்டிலும் சிலர் ரீல்விடுவதுண்டு.

சீனத்து வர்ண ஓவியங்கள், பளிங்குப் பொருட்களைப் பார்த்து மெக்ஸிக்கோ நாட்டு ஓவியர்களும் செய்து பார்த்தனர். பளிங்குப் பொருட்களில் வர்ண ஓவியம் வரைவதில் மெக்ஸிக்கோ ஓவியர்கள் சீனர்களையே தூக்கிச் சாப்பிடுமளவுக்கு வளர்ந்தார்கள்.

படத்தில் இருப்பது மெக்ஸிக்கோ நாட்டில் சான் ஏஞ்சல் என்னும் கிராமத்தில் உள்ள பளிங்கு மாளிகையின் முகப்புத் தோற்றம். நிருற்று அமைப்புகளுடன் கலை நயமும் கலந்து பளிங்கு மாளிகையை கோயில் போலாக்கிவிட்டதல்லவா. செய்வதை திருந்தச் செய். கலை நயத்தோடு செய். விளைவு தூளாக இருக்கும் என்பது சரிதானே!



# பெரும் தலை



படத்தில் அளவு சிறியதாகத் தெரிந்தாலும் உண்மையில் இராட்சத அளவுள்ள தலை இது. 11 அடி உயரம். தலைக்கு அருகில் நிற்கும் மனிதர் எத்தனை சிறிதாகத் தெரிகிறார் பாருங்கள். இந்த ராட்சத தலையுடன் உருவாக்கப்பட்டுள்ள சிலை யாருக்கு என்று தெரியுமா? அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பசுக்குத்தான். அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் இதனைக் காணலாம்.

# மறக்க முடியாத ஓட்டப் பந்தயம்

அமெரிக்காவில் அட்லாண்டாவில் நூறாவது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகிவிட்டன. இந்த நேரத்தில் ஒரு மலரும் நினைவு.

1908ம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற நாலாவது ஒலிம்பிக் போட்டியில் நடைபெற்ற மறக்கமுடியாத சம்பவம் இது.

25 மைல் ஓட்டப் பந்தயமான மாரதான் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடும் வெயில் வாட்டிக்கொண்டிருந்தது. போட்டியில் இத்தாலியவீரர் டோரான்டோ பைட்ரி என்பவரும் ஓடிக்கொண்டிருந்தார்.

அவர் வெற்றிபெறுவார் என்று யாரும் கனவில்கூட நினைக்கவில்லை. அவரோ சகல வீரர்களையும் பின் தள்ளிவிட்டு முன்னால் ஓடிக்கொண்டிருந்தார். ஒரே ஆரவாரம்.

அப்போதுதான் அது நடந்தது. வெற்றி இலக்குக்கு இன்னமும் சிறிது தூரம் இருக்கும் போது சட்டென்று துவண்டு விழுந்துவிட்டார்.

ஆரவாரக் கோஷம் போட்டபடியிருந்த ரசிகர்களுக்கு அந்த வீரரின் முயற்சி வீணாவதைக் காண பொறுக்க முடியவில்லை. அவர்களில் சிலர் மைதானத்தில் குதித்து அவரைத் தாங்கியபடி இலக்கைக் கடக்க வைத்தனர். பொலிசாரும் தடுக்கவேயில்லை.


டோராண்டோ மயங்கிவிழுந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் இரண்டரை மணிநேர சிகிச்சையின் பின்னர் உயிர் பிழைத்தார். ஒலிம்பிக்கில் சரித்திரமாகிவிட்ட சம்பவம் இது.

ஆனால் ஒரு வருத்தமான செய்தி, ஆட்ட விதிகளின்படி டோரண்டோவின் வெற்றி இரத்துச் செய்யப்பட்டது. அவருக்கு அடுத்ததாக வந்த அமெரிக்க வீரர் ஹேய்ஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. என்றாலும் டோரண்டோவின் முயற்சியைப் பாராட்டி பிரிட்டிஷ் ராணி தனிப்பட்ட பரிசாக ஒரு தங்கக்கோப்பை வழங்கிக் கௌரவித்தார்.






# எட்டுமாடி ஜீன்ஸ்



நல்ல வாட்டசாட்டமான மனித மலைக்காக சொல்லித் தைக்கப்பட்ட ஜீன்ஸ் என்றா நினைக்கிறீர்கள்? எந்த மனித மலையாலும் ஈடுகொடுக்க முடியாத ஜீன்ஸ் இது.

உலகிலேயே மிகப் பெரிய ஜீன்ஸ் இதுதான். இதன் அளவைப் பற்றித் தெரியவேண்டுமா? ஜீன்ஸ் தொங்கவிடப்பட்டிருப்பது எட்டு மாடிக் கட்டிடம் ஒன்றின் மையத்தில். எட்டாவது மாடியில் இருந்து கீழ்தளத்தின் தரைவரை நீளமாக வந்து தொட்டுக் கொண்டிருக்கிறது.

380 மீட்டர் நீளமான டெனிம் துணியைவைத்து இதனைத் தயாரித்தார்கள். எடை 370 கிலோ. பாரம் தூக்கியினால் தூக்கித்தான் தொங்கவிட்டார்களாம். கின்னஸ் புத்தகத்தில் உலக சாதனையாக இடம் பிடித்துள்ளது.

www.padippakam.com

## ரஜினி மௌனம்

ரஜினிகாந்த் வாயே திறக்கவில்லை. அவரது அடுத்த படம் குரோனா, மேஸ்திரியா? ஆளாளுக்கு ஒரு விதமாகப் பேசுகிறார்கள்.
ரஜினியே வாய் திறந்து சொல்லும்வரை நாம் எதனையும் தீர்க்கமாகச் சொல்லிவிட முடியாது.
ரஜினியின் அடுத்த படம் என்ன? ரசிகர்கள் மனதில் கேள்விக்குறி. தயாரிப்பாளர்களோ சூட்கேஸ்களோடு ரஜினி வீட்டில் தவம் கிடக்கிறார்கள்.
எல்லோரையும் ஓரம்கட்டிவிட்டு தனது ரசிகர் மன்றத் தலைவரையே தயாரிப்பாளராக்கும் திட்டமும் ரஜினியிடம் உண்டாம்.



கார்த்திக்-ரக்ஷனா
படம் பூவரசன்

## உல்லாச நாயகி

'உல்லாசம்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் மகேஸ்வரி உல்லாசமாக இருக்கிறார்.
'இதயமே இதயமே' படத்தில் நடித்தபோது சக்கரவர்த்தியை தீவிரமாக லவ்வியதை மறுக்கிறார் மகேஸ்வரி. ஆனால் தினமும் தவறாமல் சக்கரவர்த்தியைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்.
எந்த நடிகையுடன் நடித்தாலும் அந்த நடிகையுடன் ராசியாகிவிடுபவர்களில் ஒருவர் அஜித்குமார். 'உல்லாசம்' படத்தில் அஜித்குமாருடன் நடிக்கிறார் மகேஸ்வரி. போதாக் குறைக்கு அஜித்தைப் புகழ்ந்தும் தள்ளுகிறார். என்ன ஆகப்போகிறதோ?

# சினிவிசிட்

## சாக்ஷி

'புதையல்' படத்தில் … இருக்கிறது. தமிழிலோ, … ஒருவராகி விடவேண்டும் …

## நான்கு நடிகைகள்

மும்பாயின் புகழ்பெற்ற நான்கு நடிகைகள் தினமும் ஒரு நட்சத்திர ஹோட்டலுக்குச் செல்கிறார்கள். ரேகா, மாதுரி டிக்ஷித், டிம்பிள் கபாடியா, ஸ்ரீதேவி ஆகியோர்தான் அந்த நால்வர்.
அங்கே போகும் காரணம் தேகப்பயிற்சி செய்வதற்குத்தான். அங்குள்ள ஹெல்த் கிளப்பில் வியர்க்க, விறுவிறுக்க பயிற்சி செய்கிறார்கள். ஆனால், ஒரு விஷயம், நால்வரும் ஒரே இடத்தில் பயிற்சி செய்தாலும் தமக்குள் பேசிக்கொள்வதில்லை. 'ஹலோ' சொல்வதோடு சரி.
ரேகா, டிம்பிள் கபாடியா ஆகியோர் இந்த வயதிலும் இளமையாக இருப்பதற்கும், இளம் நடிகர்களை காதலிப்பதற்கும் இந்த தேகப் பயிற்சிதான் காரணம்.

* சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரிப்பில் கமல் நடிக்கும் … சிவனின் சகோதரர் சங்கீத் சிவன் இயக்கவுள்ளார் … 'யோத்தா' (தமிழில் 'அசோகன்') படத்தை இயக்கி …
* தமிழில் பெரு வெற்றி 'ஆசை' படத்தை … மொழிமாற்றி வெளியிடுகிறார்கள். 'ஆசா …
* பிரபல தெலுங்கு இயக்குநர்-நடிகர் … ஆகிய இரு மொழிகளில் தயாராகும் படத் … கதாநாயகி-விஜயசாந்தி.
* தற்போது மம்மூட்டி நடிக்கும் … ஆர்.கே.செல்வமணி அடுத்து அர்ஜுன் … இயக்கவிருக்கிறார். அர்ஜுன் நடிக்கு … வுள்ளார்.
* விஜய்-சங்கீதா நடித்த 'பூவே உ … தயாரிக்கும் ஆர்.பி.சௌத்ரி அடுத்து … திட்டமிட்டுள்ளார்.
* அமிதாப் தமிழில் முதன் … அஜித்குமார் ஜோடியாக நடி … கே.சுபாஷ் இயக்கும் 'நேசம்' பட …
* தமிழில் ஒரு சில படங்க … கன்னடத்திலும், இந்தியிலும் … இந்தியில் அமிதாப்பச்சன் … அடங்கும்.
* ராம்கி-குஷ்பு, ந … பிறப்பான்' படம், மலை … வெற்றி பெற்ற 'ஆதித்ய …
* சிவகுமார்-சுஜாத … பலபடங்களுக்குக் கதை … பாரதிராஜா இயக்கத் … நூறாவது படமாகும்.

கு …
படம்:– என …



சாக்ஷி
படம் புதையல்

பாலு மகேந்திரா 'அப்துல் ராமன்' என்ற பெயரில் ஒரு படம் தயாரித்துக் கொண்டிருக்கிறார்.

## 'ராம் ரஹீம்'

மெட்ராஸ் மூவிஸ் என்றொரு பட நிறுவனம் பாலுமகேந்திராவைப் பின்பற்றி தனது படத்திற்கு பெயர் சூட்டியிருக்கிறது. படத்தின் பெயர், 'ராம் ரஹீம்.'
ராம் என்ற பாத்திரத்தில் ராம்கியும், ரஹீம் என்ற பாத்திரத்தில் அருண்பாண்டியனும் நடிக்கின்றனர். இணைந்த கைகள் படத்தின் பின்னர் இருவரும் இணைந்து நடிக்கும் படம் இது.
காதலையும், நட்பையும் மையமாக வைத்து கதை பண்ணுகிறார்கள். 'கிழக்குவாசல்' படத்திற்கு கதை எழுதிய எம்.எஸ்.மது கதை எழுதுகிறார்.
பாடல்கள் வைரமுத்து. இசை. வித்யாசாகர். இயக்கம், இ.ராமதாஸ்.

## மீண்டும் வருகிறார் மோகன்

'பயணங்கள் முடிவதில்லை' 'உதய கீதம்', 'இதயக் கோவில்' போன்ற சூப்பர் ஹிட் படங்களில் நடித்து உச்சியில் இருந்தவர் மோகன். பின்னர் அந்த உச்சியில் இருந்து விழுந்து காணாமல் போனார். கையில் உள்ள பணத்தைப் போட்டு வியாபாரத்தில் இறங்கி காலத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறார்.
தற்போது சினிமா உலகில் மீண்டும் பிரவேசம் செய்கிறார்.
அவரே கதாநாயகனாக நடிப்பதோடு படத்தையும் இயக்கப்போகிறார். படத்தின் பெயர்:– 'சந்தோஷ்'. படத்திற்கு கதை எழுதிக் கொடுத்திருப்பது யார் தெரியுமா? ஆக்ஷன்கிங் அர்ஜுன். வெளிப்படம் ஒன்றுக்கு அவர் கதை எழுதியிருப்பது இதுவே முதல்முறை.
மோகனின் ஜோடியாக பெங்களூரிலிருந்து ஒரு புதுமுகம் இறக்குமதியாகிறார்.

## பொங்கலோ பொங்கல்

குறைந்த செலவில் குடும்பப் பாங்கான படங்களை எடுத்து, நிறைந்த பணம் சம்பாதிக்க முடியுமா? முடியும் என்று நிரூபித்துக் கொண்டிருப்பவர் வி.சேகர்.
வி.சேகர் இயக்கிய 'காலம் மாறிப்போச்சு' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.
சூட்டோடு சூடாக புதிய படம் ஒன்றுக்கு பூஜைபோட்டுவிட்டார் வி.சேகர். படத்தின் பெயர்; 'பொங்கலோ பொங்கல்'.
கதாநாயகனாக விக்னேஷ் நடிக்கிறார்; அவருக்கு ஜோடி. சங்கீதா.
கிராமத்தில் உள்ள ஒரு விவசாயக் குடும்பத்தைப் பற்றிய கதை.
வடிவேலு, சார்லி, விவேக், வினுச்சக்கரவர்த்தி, குமரி முத்து, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## நாலு கேள்வி …

'பூவே உனக்காக' பட … வெற்றியால் பிஸி நடிகரா … நடிகர் விஜயிடம் கே … கேள்விகளுக்கு அவர் … பதில்கள்.
கே:– உங்களுக்கு முன்னுதா … யார்?
ப:– கமல், ரஜினி, விஜயகா … என்று எல்லோருமே என் … ஏற்படுத்தி இருக்கிறார்கள்.
கே:– உங்களுக்கு போட்டி ய …
ப:– யாரையும் நான் போட்டிய … வில்லை. நானும் யாருக்கும் …
கே:– உங்கள் தந்தை இயக்குநர் … இயக்குநரானார். நீங்கள்?
ப:– நிச்சயம் ஒரு படம் இ … ஆனால் இப்போது பாடம் கற்றுக் … மாணவ நிலையில் இருக்கிறேன் … பத்தாண்டுகள் சென்ற பின் … இயக்குநராவேன்.
கே:– உங்கள் எதிர்காலத்தை திட் … யார்?
ப:– நான்தான். எனினும் என் தந் … ஆலோசனையும் உண்டு.



கவுண்டமணி-இளவரசி
படம்: சிட்டி பஸ்

## உல்லாச வேகம்

கோடம்பாக்கத்தில் திரைப்படத் தொழிலாளர்களின் ஸ்ட்ரைக் முடிவுற்றதும் மும்முரமாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்ப்படம் அமிதாப்பச்சனின் 'உல்லாசம்'. இந்தப்படத்தில் ஒரு ஹீரோவுக்காக சூப்பர் அக்டர் கமலஹாசனையே பின்னணி பாட வைப்பதில் வெற்றி கண்ட டைரக்டர்கள் நடிக நடிகையர் தேர்விலும் படு உஷாராக இருக்கிறார்கள்.
இந்தப்படத்தில் நடிக்க நக்மாவின் தங்கை ரத்திகா, குஷ்புவின் சகோதரர் அப்துல்லா இருவரும் வாய்ப்புக் கேட்டு தங்கள் புகைப்படத்தை அனுப்பி வைத்திருந்தார்களாம். 'இருவருமே வெளி மாநிலத்தினர் போல் இருப்பதால் இந்தப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுக்கவில்லை', என்கிறார்கள் இயக்குநர்கள் ஜோடி.

## மனிதனாக மாறும் பாம்பு

குரங்கில் இருந்து மனிதன் தோன்றியதாக படித்திருப்பீர்கள். எப்படி மாறியிருப்பான் என்று கற்பனை செய்திருக்கிறீர்களா? கவலையை விடுங்கள். 'தேவி' என்னும் படத்தில் குரங்கு மனித உருவில் மாறுவதை கம்பியூட்டர் கிராப்பிக்ஸ் முறையில் காண்பிக்கப்போகிறார்கள். குரங்கு மட்டுமல்ல, பாம்பும் மனித உருவில் மாறுகிறதாம்.
தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் தயாராகி வரும் படம் 'தேவி'.
கதாநாயகனாக சிஜ்ஜூ என்பவரும், அவரது ஜோடியாக பிரேமாவும் நடிக்கின்றனர். பானுசந்தர், வனிதா விஜயகுமார் ஆகிய தெரிந்த முகங்களும் நடிக்கிறார்கள்.
'அம்மன்' படத்தை இயக்கி பக்தர்களை பிரமிக்க வைத்த கோடி ராமகிருஷ்ணா தான் 'தேவி' படத்தையும் இயக்குகிறார்.

## எட்டும்–பதினாறும்

தெலுங்கில் வெளியாகி 100 நாட்களை கலபமாகத் தொட்ட படம் 'ரிக்ஷாவாடு'. தற்போது 'வீரபத்ரன்' என்ற பெயரில் தமிழில் வரப் போகிறது.
சிரஞ்சீவியின் ஜோடிகளாக நக்மாவும், சவுந்தர்யாவும் நடித்துள்ளனர். இருவருக்கும் கவர்ச்சியில் பலத்த போட்டி. சவுந்தர்யா எட்டடி பாய்ந்தால், நக்மா பதினாறடி பாய்ந்தாராம். சிரஞ்சீவி பாடுதான் திண்டாட்டம். திரையில் கண்டுகளிக்கப்போகும் ரசிகப் பெருமக்களுக்கு எப்படியிருக்கப்போகிறதோ?

## இந்தியிலும் நக்மா

பாக்யராஜ் இயக்கி, நடிக்கவிருக்கும் 'வேட்டிய மடிச்சுக் கட்டு' படத்தில் நக்மா கதாநாயகியாக நடிக்கிறார் என்பது தெரிந்த செய்தி. புதிய செய்தி இதோ: இந்தப் படத்தின் இந்திப் பதிப்பிலும் நக்மாவே நாயகியாக நடிக்கவுள்ளார். இந்திப் படத்தில் கதாநாயகனாக கிஷன்குமார் நடிக்கவிருக்கிறார்.


படிப்பகம்

## ...பியின் கனவு

நடித்துவரும் சாக்ஷியிடம் ஒரு பெரிய கனவு ... அல்லது இந்தியிலோ முன்னணி நடிகைகளில் ... என்பதுதான் கனவு.

தமிழில் கமலஹாசனுடன் ஒரு படத்திலாவது ...டித்துவிடவேண்டும். அப்படி ஒரு வாய்ப்புக்கிடைக்க ...காடுத்து வைத்திருக்க வேண்டும் என்றும் கூறியிருக் ...றார் சாக்ஷி. தெலுங்கில் சிரஞ்சீவியுடனும், தமிழில் ...ரபுவுடனும் தலா ஒரு படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார்.

கமல் படம் என்றால் முத்தக் காட்சிக்கும் ரெடியாக ...ருக்க வேண்டியிருக்குமே என்று கேட்டால், ...ன்னகைக்கிறார். புன்னகை சம்மதத்தின் அறிகுறிதானே.

'புதையல்' படத்தின் வெற்றி தோல்விதான் சாக்ஷியின் ...னவு பலிக்குமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

## ...மினி சினி

... படத்தை, பிரபல ஒளிப்பதிவாளர் சந்தோஷ் ... இவர் மலையாளத்தில் மோகன்லால் நடித்த ...ுள்ளார்.

...தலுங்கில் 'ஆசா ஆசா ஆசா' என்ற பெயரில் ...சா ஆசா' அங்கு படுதோல்வி அடைந்துள்ளது.

...சரி நாராயணராவ் இயக்கும் தமிழ்-தெலுங்கு ...தில் ராம்கி கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

'அரசியல்' என்ற படத்தை இயக்கி வரும் ... சரத்குமார் நடிக்கும் இரண்டு படங்களை ...ம் படத்தில் ரம்பா கதாநாயகியாக நடிக்க...

...னக்காக.' படத்தை கன்னடத்திலும், இந்தியிலும் ... மலையாளத்திலும், தெலுங்கிலும் தயாரிக்கத்...

...முறையாகத் தயாரிக்கும் 'உல்லாசம்' படத்தில் ...து வரும் 'கருத்தம்மா' மகேஸ்வரி, அடுத்து ...திலும் அஜித்குமாருக்கு ஜோடியாக நடிக்கிறார்.

...நக்கு மட்டும் இசையமைத்து வரும் இளையராஜா ... பல படங்களுக்கு இசையமைத்து வருகிறார். ... இந்தியில் தயாரிக்கும் நான்கு படங்களும்...

...க்க கேயார் இயக்கிவரும் 'எனக்கொரு மகன் ...ளத்தில் ஜெயராம் கதாநாயகனாக நடித்து ...கண்மணி' படத்தின் தமிழ் வடிவமாகும்.

... நடித்த 'அன்னக்கிளி' படத்தில் தொடங்கி ...ழுதி வரும் ஆர்.செல்வராஜிற்கு அண்மையில் ...ல் வெளியான 'அந்திமந்தாரை' அவரது...



ராம்கி-குஷ்பு
படம்: எனக்கொரு மகன் பிறப்பான்

...கப்பிலி...
...ஷ்பு—ராம்கி
...க்கொரு மகன் பிறப்பான்

## எம்.ஜி.ஆர். சாயலில்

மணிரத்னத்தின் ஆனந்தம் படத்தில் எம்.ஜி.ஆர் சாயலில் உள்ள பாத்திரத்தில் நடிப்பவர் மோகன்லால். எம்.ஜி.ஆரை, எம்.ஆர்.ராதா சுட்டதுபோல, மோகன்லாலும் சுடப்பட்டு படுக்கையில் கிடக்கும் காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டதாம்.

எம்.ஜி.ஆரை போன்ற பாத்திரத்தில் மோகன்லால் துணிந்து நடிக்கிறார். கருணாநிதியின் சாயலுள்ள பாத்திரத்துக்குத்தான் எந்த நடிகரும் துணிந்து முன்வரவில்லை.

## லாபம் இரண்டு

புதிய நடிகைகளை அறிமுகப்படுத்துவதால் தயாரிப்பாளர்களுக்கும், இயக்குநர்களுக்கும் பலப் பல அனுகூலங்கள். அதில் ஒன்று மிகக் குறைவான சம்பளம் கொடுக்கலாம். இரண்டு, குறிப்பிட்ட படம் வெளியாகும் வரை நடிகையை தமது நேரடியான கவனிப்பில் வைத்திருக்கலாம். அதனால்தான் புது முகம் தேவை என்று ஊர் ஊராக அலைகிறார்களாம் சில தயாரிப்பாளர்கள்.

## அமெரிக்காவில் சிவாஜி

பல மாதங்களுக்கு முன் சினிவிசிட்டில் ஒரு செய்தி வந்ததே ஞாபகம் இருக்கிறதா. சிவாஜி ஒலிம்பிக் பார்க்கப் போகிறார் என்று.

கொள்ளுப்பேத்தி பிறந்த சந்தோசத்தோடு சிவாஜியும், மனைவியும் அமெரிக்கா பறந்துவிட்டார்கள். மூன்றுமாதம் அங்கு தங்கிவிட்டுத்தான் திரும்புவார்களாம்.

தங்கள் வீடுகளில் தங்குமாறு அமெரிக்காவில் உள்ள நண்பர்கள் பலத்த வேண்டுதலாம். ஒவ்வொருத்தர் வீட்டிலும் சில நாட்கள் தங்கியிருக்க முயற்சி பண்ணுறேன் என்றிருக்கிறார் சிவாஜி.

## ...விகள்

...தின் பிரமாண்ட ...விட்டார் விஜய். ...கப்பட்ட நாலு ...சொல்லியுள்ள ...

...ண நடிகர்கள் ...

...த், கார்த்திக் ...ல் பாதிப்ப...

...?
...க நினைக்க... ...ட்டியல்ல... ...நாயாரு...

...க்குவேன்... ...ாள்ளும்... ...இன்ன... ...ர்தான்...

...டுவது ...

...தமிழ்...



கார்த்திக்-நக்மா
படம்: மேட்டுக்குடி



சிரஞ்சீவி-சௌந்தர்யா
படம்: வீரபத்ரன்

## விசித்ராவின் சாகசம்

தமிழில் வாய்ப்பு குறைந்துவிட்டதால் மலையாளப் படவுலகம் சென்றுவிட்டார் விசித்ரா. தமிழ்ப்பட ரசிகர்களுக்கு திகட்டிவிட்டு தனது எடுப்பான கவர்ச்சியை மலையாளப் படவுலக ரசிகர்களுக்குக் காட்டி கலைச்சேவை செய்கிறார்.

'சகவாசம்' என்றொரு படத்தில் சஞ்சய் என்பவருக்கு ஜோடி யாக நடித்தபோது இருவருக்கும் இடையே மின்சாரம் பாய்ந்துவிட்டது. படப்பிடிப்பு முடியும்வரை இருவரும் ஒன்றாகவே வாசம் செய்தார்களாம். படத்தின் பெயருக்கு ஏற்ற வாசம்தான்.

எப்படியோ தனது கலைத் திறமையால் மலையாளத்தில் நான்கு படங்களில் கதாநாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார் விசித்ரா.

## தாத்தாவானார் கவுண்டமணி

தலைப்பைப் பார்த்ததும் படச்செய்தி என்று நினைத்து விடாதீர்கள். இது நிஜச் செய்தி. கவுண்டமணியின் மகளுக்கு திருமணம் நடந்த செய்தியை முன்னர் வெளியிட்டிருந்தோம் அல்லவா. இப்போது அந்த மகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. தாத்தாவாகிவிட்டார் கவுண்டமணி.

## நக்மாவோடு கவுண்டமணி காதல்

அவளோ அழகுச் சிலை. அரண்மனை வாரிசு. அவளைக் காதலிக்கிறான் முறை மாமன். காதலை வெளிப்படுத்த கடிதம் எழுத நினைக்கிறான். எழுத்தாற்றல் போதாது. அதனால் தன் நண்பனை நாடுகிறான். நண்பனும் பிரமாதமாக ஒரு காதல் கடிதம் எழுதிக் கொடுக்கிறான்.

கடிதத்தைக் கொண்டுசென்று முறைமாமன் அவளிடம் கொடுக்க, அவள் வெட்கப்பட்டபடி கடிதத்தை பெற்றுக் கொள்கிறாள். "நான் கடிதத்தை பெற்றுக் கொண்டதாக உங்கள் நண்பரிடம் கூறிவிடுங்கள்" என்கிறாள் அவள். முறைமாமனோ அதிர்ந்து போய் நிற்கிறான்." 'மேட்டுக்குடி' படத்தில் வரும் காட்சி இது.

முறைமாமனாக கவுண்டமணியும், நண்பனாக கார்த்திக்கும், அரண்மனை அழகியாக நக்மாவும் நடித்தனர். இயக்கம், சி.சுந்தர்.

## பழிக்குப் பழி

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய்க்கும் மனிஷா கொய்ராலாவுக்கும் இடையே கடும் பிரச்சனை. நம் நாட்டு இனப்பிரச்சனை மாதிரி என்று வைத்துக் கொள்ளலாம்.

ஐஸ்வர்யாராயின் ஆண் நண்பர் ஒருவரை மனிஷா மடக்கி விட்டாராம். ஐஸ்வர்யாராய்க்கு பல நண்பர்கள் இருந்தாலும்கூட அதில் ஒருவரைக்கூட இழக்கவிரும்பவில்லை. அதனால் மனிஷாமீது பழிவாங்கும் எண்ணத்தில் இருந்தார் ஐஸ்வர்யாராய்.

சன்னி தியோலின் 'இந்தியன்' படத்தில் (கமலின் இந்தியன் அல்ல) மனிஷாவை நடிக்கக் கூப்பிட்டார்கள். விஷயம் அறிந்த ஐஸ்வர்யாராய் சன்னி தியோலை தனியாகச் சந்தித்தார். அவ்வளவுதான். உலக அழகி என்ன மாயம் செய்தாரோ மனிஷாவை தூக்கிவிட்டு ஐஸ்வர்யா ராய்க்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டார் சன்னிதியோல். ஐஸ்வர்யாராய் பழி தீர்த்துக்கொண்டார்.

பாவம் மனிஷா. அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்.

## பம்பாய் வரவு

சரத்குமார் நடிக்கும் 'நேதாஜி' படத்தில் அமர்க்களமாக அறிமுகமாகிறார் அன்ட்ரா.

இவர் பம்பாய் புகைப்பட நிபுணர் ஒருவரின் மகள். எப்படி வேண்டும். என்ன செய்ய வேண்டும் எப்படிச் செய்ய வேண்டும். சொல்லுங்கள் செய்கிறேன் என்று துடிக்கிறாராம் அன்ட்ரா. விடுவார்களா. ஒப்பந்தம் செய்து சென்னைக்கு கூட்டி வந்துவிட்டார்கள்.

## ரசிக வெள்ளம்

இந்தி நடிகர்களில் ஷாருக்கானுக்குத்தான் வெளிநாடுகளில் ரசிக, ரசிகைகள் அதிகமாம். சமீபத்தில் ஷாருக்கான் துபாய் சென்ற போது அவர் தங்கியிருந்த ஹோட்டல் முன்பாக ரசிக வெள்ளம்.

தொல்லை பொறுக்காமல் ஷாருக்கானை தமது ஹோட்டலின் பின்புறவழியாக வேறு இடத்திற்கு அனுப்பியதாம் ஹோட்டல் நிர்வாகம்.

www.padippakam.com

# குழந்தைகளின் ஆர்வத்துக்கு குறுக்கே நிற்காதீர்கள்!

வளர்ந்த மனிதன் தன் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்ய விரும்புவதில்லை. அப்படிச் சூழ்நிலை வந்தால் அதைத் தட்டிக் கழித்து விடுகிறான்.

ஆனால் நாம் நமது விருப்பங்களை, நம் குழந்தைகளின் மேல் திணிப்பது எந்த விதத்தில் நியாயம்? அவர்களுக்கு ஒரு பாடத்தில் ஆர்வம் இருக்கும். ஆனால் நமக்குப் பிடித்த பாடப்பிரிவில் அவர்களைச் சேர்க்கிறோம். விருப்பமில்லாமல் அவர்கள் படிப்பதால், பரீட்சையில் தோல்விகளைச் சந்திக்கிறார்கள். அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகின்றது.

குழந்தைகளுக்கு, அவர்கள் விருப்பமானதைச் செய்வதில் தீராத ஆர்வம். அதற்காக அவர்கள் எதையும் செய்யத் தயாராக உள்ளனர். உங்கள் குழந்தைகளின் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்காதீர்கள். நீங்கள் சிறுவர்களாக இருந்தபோது, உங்களை உங்கள் பெற்றோர்கள் எதற்கெல்லாம் கட்டுப் படுத்தினர்? அப்போது உங்கள் மனம் என்ன பாடுபட்டது என்பதை 'மலரும் நினைவு'களாக எண்ணிப் பார்த்தால் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் செய்வது பளிச்சிடும்.

உங்கள் குழந்தைகளை நீங்கள் கரடு முரடாக வளருங்கள். காரணம்–அவர்கள் எதிர்காலத்தில் நிறைய விஷயத்தில் எதிர்நீச்சல் போடவேண்டி உள்ளது.

உடல், உடை அழுக்காகும் என்று குழந்தைகள் வெளியில் விளையாடச் செல்வதைத் தடுக்காதீர்கள். ஏனென்றால் பிற்காலத்தில் உங்கள் குழந்தைக்கு 'விற்பனைப் பிரதிநிதி' போன்ற வெளியில்–வெயிலில் அலையும் வேலை கிடைக்கலாம். அப்போது சூழ்நிலைக்கு உடல் ஒத்துப்போக மறுக்கும்.

மேலும் உங்கள் குழந்தைகளை ஒரே 'படிப்பு, படிப்பு' என்று நச்சரிக்காதீர்கள்.



விளையாட்டிற்கும் அனுமதியுங்கள். விளையாட்டு-வெறும் விளையாட்டு அல்ல. வாழ்க்கைக்குத் தேவையான பல அனுபவங்களை அது தருகிறது. தலைமை தாங்குதல், பணிந்து நடத்தல், உடல், உள வலிமை ஆகியவற்றைக் கொடையாக அளிக்கிறது. சிறுவயது முதலே நீச்சல், சைக்கிள் ஓட்டம் போன்றவற்றைக் கற்றுக் கொடுங்கள். நீங்கள் வெளியில் செல்லும்போது உடன் அழைத்துச் செல்லுங்கள். அப்போது அவர்களுக்கு வெளியிடங்களுக்குச் செல்லும் கூச்சம் குறையும். அரசு அலுவலகங்கள், வங்கி நடைமுறைகள் போன்றவற்றைக் கற்றுக் கொடுங்கள்.

உங்கள் குழந்தைகள் பாடசாலையில் சுமார் 8 மணி நேரம்தான் இருக்கிறார்கள். மீதி நேரத்தில் உங்களுடன் தான் கலந்திருக்கிறார்கள். எனவே ஆசிரியர்களை விட நீங்கள் தான் அதிகம் கற்பிக்க, போதிக்க வேண்டும்.

பாடநூல்கள் உங்கள் குழந்தைகளை வழிகாட்டிச் செல்லுமே தவிர, வாழ்க்கையை அமைத்துக் கொடுக்காது. ஒரு மனிதனுக்கு அனுபவம் சிறந்த ஆசான். எனவே உங்கள் அனுபவங்களை குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்காதீர்கள். அது நல்லதோ, கெட்டதோ கவலை இல்லை.

ஒரு சிறந்த குடிமகனாக உங்கள் மகனை உருவாக்குவது உங்கள் செயலில் தான் இருக்கிறது என்றால் மிகையில்லை.

# தாலாட்டிலும் பேதம்?

பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்று சும்மாவா சொன்னார்கள்? ஒரு தாயாகப் பட்டவள் பெண் குழந்தையையும், ஆண் குழந்தையையும் எப்படிக் கொஞ்சுகிறாள் என்பதை வசந்தா பார்த்தசாரதி என்பவர் எப்படிப் பட்டியல் போட்டுக் காண்பித்திருக்கிறார் என்று பாருங்கள்:

| பெண் குழந்தை | ஆண் குழந்தை |
|---|---|
| 1. பிறந்தவுடன்... தரித்திரம், தரித்திரம் இது பிறந்தது தான் குறைச்சல். சனியனே! | பையன் எவ்வளவு அழகா இருக்கான். அவங்க அப்பா மாதிரியே! |
| 2. பள்ளிக்கூடம் போகையில்... ஆமா....இவா படிச்சு என்னத்த பெரிசா கிழிக்கப் போறா.... | என் ராசா....நல்லா படிச்சு எஞ்சினியரா வரணும்டா கண்ணு. |
| 3. பருவமடைந்ததும்.... இருக்கிற சொத்தைப் புடுங்கிக் கொண்டு போய் இன்னொருத்தன் கையில குடுக்கிறதுக்கு வந்துட்டா..... | என் சிங்கக்குட்டி...காலா காலத்தில ஒரு பெண்ணைப் பார்க்கணும். |
| 4. திருமணப் பருவத்தில்.... குருடோ, செவிடோ எவனையோ ஒருத்தனப் பாத்து வெளிய தள்ளுறதுக்கு வழியப் பாருங்க. | என் ராசாவுக்கு நல்ல சீர்–சினத்தியோட அழகா, அந்தஸ்தா... ஒரு ராணி கிடைக்கணும். |

# காஸ் சிலிண்டரில் என்ன இருக்கிறது?

எத்தனை வருட காலமாக நீங்கள் காஸ் சிலிண்டரை உபயோகித்து வருகிறீர்கள்? அந்த சிலிண்டருக்குள் என்ன இருக்கிறது என்று ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?

"ஏன் தெரியாது, காஸ் தானே இருக்கிறது" என்று சொல்வீர்கள். அது சரிதான். ஆனால் உள்ளே என்ன என்ன இருக்கிறது என்று விபரமாகச் சொல்லுகிறேன் கேட்டுக் கொள்ளுங்கள்.

உங்கள் வீட்டில் இருக்கும் சிலிண்டரில் 33 லீட்டர் தண்ணீர் பிடித்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட சிலிண்டருக்குள் 28.4 லீட்டர் காஸ் அடைக்கப்படுகிறது. அதாவது 14.2 கிலோ எடை.

இந்த காஸ் என்பது, ப்ரோபேன், பூடேன் என்னும் இரண்டையும் திரவமாக்கி உள்ளே அடைக்கிறார்கள். இதுதான் காஸ். இந்த காஸுடன் வேண்டுமென்றே ஒரு மணத்தையும் சேர்ப்பார்கள். காஸ் கசிந்தால் இந்த மணத்தை வைத்துக் கண்டு பிடித்து விடலாம் என்பதற்காகத்தான்.

உண்மையிலேயே இந்த 14.2 கிலோ திரவம் இருக்கிறதல்லவா? இதை திரவ வடிவம் இல்லாமல் வாயுவாகவே கொண்டு வந்தால் ஒரு பெரிய லொறி வேண்டும். ஆம்.. 5 லட்சத்து 68 ஆயிரம் லீட்டர் வாயுதான் 14.2 கிலோ திரவமாக



சிலிண்டருக்குள்ளேயே இருக்கின்றது.

இந்த 14.2 கிலோ திரவம் போக சிலிண்டரில் இருக்கும் மிகுதி இடத்தில் திரவம் வாயு உருவத்தில் இருக்கும். நாம் காஸைத் திறந்தவுடனே அந்தத் திரவம் காஸாக மாறி சீறிப்பாய்ந்து வெளியே வரும். இதுதான் நெருப்பாக எரிகிறது.

இப்போது புரிந்ததா உங்கள் காஸ் சிலிண்டர் என்ன? எப்படி? என்று.

# கரு...கரு கூந்தலுக்கு!

கூந்தல் மட்டும் பெண்களுக்குச் சரியாக வளரவில்லை என்றால் அவ்வளவுதான். அதை நினைத்து நினைத்து உடம்பு இளைத்துப் போய்விடுவார்கள்

உடம்பு மிகவும் சூடு. அதனால் தலைமுடி உதிருகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். இதற்கு ரோஜாத் தைலம் தேய்த்தால் போதும். உச்சந்தலை குளிர்ந்து முடி கிடுகிடுவென்று வளர ஆரம்பித்து விடும். ரோஜாத் தைலத்திற்கு எங்கே போவதென்று கேட்கிறீர்களா? ஏன்.. நமது வீடுகளிலேயே செய்தால் போச்சு.

சுத்தமான தேங்காய் எண்ணெயை 1/4லீட்டர் எடுத்துக் கொள்ளுங்கள். அதை அப்படியே



ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்துச் சூடாக்கிக் கொள்ளுங்கள்.

அதற்கு முன்னர் வாடாத ரோஜாப் பூக்களை வாங்கி வந்து அதை இடித்துச் சாறு எடுத்துக் கொள்ளுங்கள். 1/4 லீட்டர் எண்ணெய்க்கு ஒரு 200 மில்லி லீட்டர் ரோஜாப்பூச் சாறு வருமளவிற்குப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது அந்தச் சாற்றைக் கொதிக்கின்ற எண்ணெயில் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் கலக்கிக் கொண்டே இருங்கள். ஒரு பக்குவத்திற்கு வந்ததும் இறக்கி ஆற வைத்து வடிகட்டி ஒரு போத்தலில் ஊற்றிக் கொள்ளுங்கள். அவ்வளவு தான். ரோஜாத் தைலம் ரெடி..

தினசரி இதைத் தலையில் தேய்த்து வாருங்கள். அப்புறம் பாருங்கள் கூந்தலை-பக்கத்து வீட்டு அக்கா இளைத்துப் போய்விடுவார் பொறாமையால்.

# பெண் குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

பெண்களைக் குழந்தைகளாக இருக்கும் போதே தைரியமும், தன்னம்பிக்கையும் உள்ள குழந்தைகளாக வளர்க்க வேண்டும். விட்டுக்கொடுத்துப் போவதில் உள்ள இன்பத்தை வயதுப் பெண்களுக்கு உணர்த்த வேண்டும். உள்ளதைக் கொண்டு திருப்தி அடையும் மனநிலையைப் பெண் குழந்தைகளுக்கு வளர்க்க வேண்டும்.

அவரவர் சக்திக்கேற்ற அளவு எவ்வளவு கல்வியறிவை ஒரு பெண்ணுக்கு வழங்க முடியுமோ அந்த அளவு வழங்க முயல வேண்டும். அதிகம் படிக்க வைக்க இயலவில்லை என்றாலும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல் பயிற்சி போன்றவற்றைக் கற்றுத் தரவேண்டும்.

எல்லாவற்றையும் விட, பெண் குழந்தைகளைச் சுறுசுறுப்பாக வளர்த்தல் அவசியம். எதையுமே சொல்லிக் கொடுக்க வசதி வாய்ப்பற்ற ஏழைக் குடும்பமாக இருந்தால், சமையல் கலையிலாவது உங்கள் மகளை தேர்ச்சி பெற்றவளாக ஆக்குங்கள்.

ஆண் மகனின் உதவியின்றிச் சுயசம்பாத்தியத்தில் ஒரு பெண் சிறந்த முறையில் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நம்பிக்கையோடு பெண் குழந்தைகளை வளர்க்க வேண்டும். உங்களது தகுதிக்கேற்ற இடத்தில் திருமணம் செய்து கொடுங்கள். அப்போது தான் உங்கள் மகளுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கும்.



கடன் வாங்கி சக்திக்கு மீறிய இடத்தில் மணம் பேசி, திருமணத்தின் போது எல்லா சீர் சினத்திகளையும் செய்து விட்டுப் பின், எதுவுமே பெண்ணுக்குச் செய்ய இயலாத நிலைக்கு ஆளாகாதீர்கள். நினைத்தவுடன் போய்ப் பார்த்து வரக்கூடிய தூரத்தில் பெண்ணை மணம் செய்து கொடுக்க வேண்டும்.

பெண்ணின் திருமண விஷயத்தில் நல்ல அறிவுரைகள் வழங்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வற்புறுத்தி மணம் முடிக்காதீர்கள். திருமணம் முடிந்ததும் கடமை முடிந்தது என்று இல்லாமல், மகளுடன் கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். மாதம் ஒரு முறை சென்று நேரில் பெண்ணைப் பார்த்து வருவது நல்லது.

பெண்ணை மணம் செய்து கொடுத்துப் புது ஊரில் உங்கள் மகளுக்கு புகுந்த வீட்டிலிருந்து பஸ் நிலையம், புகையிரத நிலையம், தபால் கந்தோர் போன்றன உள்ள இடங்களைக் காண்பித்து வையுங்கள்.

# சமைப்போம் சுவைப்போம்

## வாழைக்காய் வடை

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

தேவையான பொருட்கள்:

- வாழைக்காய் – 2
- வெங்காயம் – 1/4. கிலோ
- பச்சை மிளகாய்– 6
- இஞ்சி – சிறுதுண்டு
- மாவு – 1/4 கிலோ
- உப்பு – தேவையான அளவு.
- தேங்காய் எண்ணெய்– தேவையான அளவு.

செய்முறை:

முதலில் வாழைக்காயைத் தோல் சீவி, வேக வைத்து நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி இவற்றைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பிசைந்து வைத்த வாழைக்காயோடு சேர்க்கவும். பின்னர் மாவையும், உப்பையும் சேர்த்து அத்துடன் கொட்டி கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கெட்டியான பதத்திற்குப் பிசைந்து கொள்ளவும். வாணலியில் எண்ணெயை ஊற்றி, வடைபோல் தட்டிப் போட்டுச் சிவந்ததும் எடுக்க வேண்டியதுதான்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை AA

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

கையொப்பம்:.....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:03-08-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# ஒலிம்பிக் செய்திகள்

★ பண்டைக்கால ஒலிம்பிக் போட்டியைக் காண பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

★ முதல் ஒலிம்பிக் நீளம் தாண்டுதலில் தங்கம் வென்ற அமெரிக்கரான ரோய் சி. எவ்ரி சிறு வயதில் போலியோ தாக்குதலுக்குள்ளானவர்.

★ 1920ம் ஆண்டு அண்ட்வெர்ப் ஒலிம்பிக் போட்டியில் இருந்து தான் வீரர்கள், வீராங்கனைகள் உறுதி மொழி எடுக்கும் பழக்கம் அறிமுகமானது. முதலில் உறுதி மொழி எடுத்தவர் கத்திச் சண்டை வீரரான விக்டர் பொயின் என்பவர்.

★ 1936ம் ஆண்டு பெர்லினில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தான் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றும் வழக்கம் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

★ ஒலிம்பிக் ஜோதி இந்த ஆண்டு ஏப்ரல் 27ம் திகதி லொஸ் ஏஞ்சலிஸில் இருந்து புறப்பட்டு உலகம் முழுவதும் சுற்றி அட்லாண்டா வந்தது.



★ கடந்த முறை பார்சிலோனா ஒலிம்பிக் துவக்க நிகழ்ச்சியில் ஸ்பெயினின் அன்ரனியோ ரெபல்லோ என்னும் வில் வித்தை வீரர் மிகத் துல்லியமாக அம்பு மூலம் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி வைத்தார். இவருக்குக் கால் ஊனம் என்பது குறிப்பிடத் தக்கது.

★ நூறாண்டுகளுக்கு முன் நடைபெற்ற போட்டியில் மொத்தம் 13 நாடுகளைச் சேர்ந்த 311 வீரர்கள் கலந்து கொண்டனர். அதலடிக், சைக்கிள் பந்தயம், கத்திச் சண்டை, ஜிம்னாஸ்டிக், துப்பாக்கி சுடுதல், நீச்சல், டென்னிஸ், பளு தூக்குதல், மல்யுத்தம் ஆகிய 9 பிரிவுகளில் போட்டி நடைபெற்றது.

★ தற்போது நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து 197ஐ எட்டியுள்ளது. வீரர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தைத் தொட்டுவிடும். அட்லாண்டாவில் 27 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

★ அட்லாண்டா போட்டியில் 1836 பதக்கங்களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் 604 தங்கப் பதக்கங்களாகும்.

★ தற்போது நடைபெற்று வரும் அட்லாண்டா போட்டியில் மகளிர் கால்பந்தும், முப்பாய்ச்சல் போட்டியும் சேர்க்கப்பட்டுள்ளன.

★ முந்தைய ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நகரங்களைக் காட்டிலும் அட்லாண்டாவில் அதிக பட்ச வெப்பம் நிலவும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதற்காக விசேஷ குளிரூட்டு வசதியும் செய்யப்பட்டுள்ளது.

★ ஒலிம்பிக் சின்னங்கள் 1968ம் ஆண்டு மெக்ஸிக்கோ சிட்டியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலிருந்துதான் அறிமுகம் செய்யப் பட்டன.

★ ஆசியா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா கண்டங்களை ஒருமுகப் படுத்தப்பட்ட ஐந்து வளையங்கள் மிகவும் பிரபலமானவை.

★ 1900ம் ஆண்டில் ஒரே ஒரு முறை ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாடப் பட்டுள்ளது. இங்கிலாந்தின் டெவன் வொன்டரர்ஸ் கிரிக்கெட் கிளப் அணி பிரெஞ்சு அணியை வென்றது. ஒவ்வொரு அணியிலும் 12 வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். இதற்குப் பதக்கம் ஏதும் வழங்கப்படவில்லை. அணிப் போட்டியாக கால்பந்து சேர்க்கப்பட்டதும் இந்த ஒலிம்பிக்கில் தான்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**திருமதி. சி. இராஜேஸ்வரி.**
22ஏ, ஸ்டேசன் வீதி, கொழும்பு-06.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

www.padippakam.com

## சமாதான ஒப்பந்தம்

எதற்கடி...
உன் பார்வை(த்) தோட்டாக்களால்
என்னை அனுதினமும்
துளைத்து விட்டு போகிறாய்?
**
எதற்கடி...
உன் கருங்கூந்தலால்
என் இதயத்தை சுருக்கிட்டு
உன் பின்னே இழுத்துப் போகிறாய்?
**
எதற்கடி...
உன் மோனலிஸா(ப்) புன்னகையால்
என்னை மயக்கி விட்டு
என் சுயநினைவைப் பறித்துக் போகிறாய்?
**
எதற்கடி...
உன் கால் கொலுசு சத்தத்தால்
பொம்பர் சத்தம் கேட்டு
பங்கருக்குள் பதுங்குவது போல்
என்னை
எனக்குள் பதுங்க(ச்) செய்கிறாய்?
**
எதற்கடி...
நம்மிடையே இப்படியோர் போராட்டம்?
விரைவில் நிறுத்தி விடுவோமே;
சமாதான ஒப்பந்தமொன்றில்
கையெழுத்திட்டு...!
**



எதற்கடி...
தேசம் எப்போது போராட்ட நிறுத்தம்,
என்ற கேள்வி...?
அது தெரிந்தவர் யாருமில்லையே....
இதுவரையில்....!
**
எதற்கடி...
அதை(ப்)பற்றி சிந்திப்பான்?
சிந்தித்ததில் தலைவலி வந்ததும்,
தலைமுடி போனதும் தானே மிச்சம்?
**
எதற்கடி...
தேசத்திற்கு சமாதான ஒப்பந்தமெல்லாம்?
ஒப்பந்தம் செய்து விட்டு,
அதை பின்பற்றவா போகிறார்கள்......?
**
எதற்கடி....
அதை(ப்)பற்றி பேசி என்னை
நோகடிக்கிறாய்.
விரும்பினால் விரைந்து வா!
நாமாவது சமாதான ஒப்பந்தமொன்றில்
கையெழுத்திட்டு
நம் போராட்டத்தை நிறுத்தி விடுவோம்!

மனசு, நீர்கொழும்பு.

## தேன் கிண்ணம்

## பூணும்

மனிதனை விரட்டும்
மாம சக்தி...
*
நியாயத்தை பஸ்பமாக்கும்
இடுகாடு.....
*
அதர்மத்தை ஒளிரச்செய்யும்
இரவுச்சூரியன்.....
*
ஏழையின் கற்பனைக்
குதிரை-ஓடி
விளையாடும் ஓய்யாரத் தளம்....
*
செல்வந்தனை சிறப்பிக்கும்
சுவர்க்க பூமி....
*
இறைவனை விலை கோரும்
மொத்த வியாபாரி....
*
வறியவனை ஏங்கவைக்கும்
வக்கிரவம்சம்....
*
ஆண்டிக்கு
எட்டாத சுவர்க்கம்.....
*
செல்வந்தனுக்கு
சிறப்பான அரியணை
*
நண்பர்களுக்கு
உறவு முறியும் களம்....
*
எதிரிகள்
விலைபோகும் சந்தை.....
*
செல்வாக்கு
சொல்வாக்கை மிதித்த தளம்.....

நகர்ஒளியில்-கலாதிரு.

## நிஜ கனாக்கனோடு

சீமைத் துணிகூட கந்தையான பின்னும்
விண்ணப்ப ஊர்வலங்கள்
விலை பேசிக் கொள்கின்றன;
விளக்குகளுக்கு திரி செய்வதற்காய்...

விளக்குகளோ மாய விளக்குகள்- எண்ணெய்
ஊற்றாமலே எரியும் நெருப்பு வாய்கள்!

பஞ்சணை மெத்தையாய் நினைவுகள் துள்ள
தேளும் எறும்பும் கொடுக்கோடு கொத்திவிட
ரெத்தம் பீச்சிய மேனியின் நடுக்கத்தில்
விஷமும் ரணமும் பார்வையில் தெரிய-கரை
ஒரக் கொக்குகள் ஒற்றைக் கால்மடித்து
உற்றுப்பார்க்கின்றன இனம் தெரியாத
அந்த மனிதபிரேதத்தை....!

வளமைக்கு திரும்பவில்லை;
இரவினிலும் கோடையாய் ஊர்!

கொக்குகளின் காத்திருப்போ- பிணத்தை
காகங்களிடம் விடுவதா...?
கடைசிவரை காப்பதா என்று...!
பேச்சுக்கள் முடியும் முன்னமே தூரத்தே
மனிதங்கள் வருவதைக்கண்டு
பறந்தன கொக்குகள் மேலே!
யதார்த்தமாய் வருகின்ற கனவுகள் போலவே...
நாளையும் "பலர்" பிணமாக மிதந்துவரலாம்,
இன்னொரு கரையில்.....!

உவைஸ்கனி

## ஏமாற்றம்

நாயொன்று எசமான்முன் அமர்ந்து கொண்டது;
நாவில்நீர் ஊறச்சப்புக் கொட்டிக் கொண்டது;
வாயைநோக்கி உயரும்கையில் வாழ்க்கை கண்டது;
வாழவைப்பார் எசமான் என நம்பி நின்றது.

கமகமக்கும் மீன் குழம்பும் இறைச்சிப் பொரியலும்,
கைபுதையக் குவித்த சோறும் அவித்த முட்டையும்,
தமக்கும் தான கிடைக்கும் எனக் காத்திருந்தது;
நக்கிச் சுவைக்கும் எசமான்முகம் பார்த்திருந்தது.

இப்போவரும் பின்னேவரும் என்று இருந்தது;
எப்போவேனும் கிடைக்கும் எனக் காத்திருந்தது;
தப்பாய் எதிர் பார்ப்பு எல்லாம் பொய்த்துப் போனது;
தன்பலமே தனக்குதவி என்று உணர்ந்தது.

தெருவில் நின்ற நாய்களுடன் சேர்ந்து கொண்டது;
திருடியேனும் வாழ்வதென்று உறுதி கொண்டது!
அரசியலைப் பேசுவது ஆபத் தென்கிறார்:
அடியேன் நான் கவிஞன் அதைப்பேச வேயில்லை!

க.கோணேஸ்வரன்-

| கவர்ச்சி | இனப்பெருக்கம் | கவிதை |
|---|---|---|
| நேற்று:- | நேற்று:- | நேற்று:- |
| பட்டுச்சேலையில் | நாமிருவர், | மரபுக் |
| பானுமதி...! | நமக்கறுவர்...! | கவிதை...! |
| இன்று:- | இன்று:- | இன்று:- |
| ரூ பீசில் | நாமிருவர், | புதுக் |
| நக்மா....! | நமக்கொருவர்.....! | கவிதை....! |
| நாளை:- | நாளை:- | நாளை:- |
| இலைகுலையில் | நாமறுவர், | புத்தம் புதுக் |
| இளசுகள்....! | நமக்கொருவர்! | கவிதை! |

எஸ். பிரபா

## காத்திருப்பு...!

'கண்மணி...!'
காத்திருப்பேன்
உனக்காக-
காலமெல்லாம்!

'சகியே...!'
அன்று-நீ
சொல்லிப்போன
சோகங்களால்
சுருங்கிப்போனது
என்னிதயம்.

••
உன்
அழகுமுகம் அசையும்
நினைவுகளில்-
என்-
ஆத்மா
உறங்குகிறது.
••

'சின்னவளே..!'
உன்-
வருகையை
எண்ணியே...
என்-
வாழ்வும்
நீளுகிறது.
••

என்-
ரசனைக்குரிய-
நந்தவனமே..!
உன்னில்-
தேன்குடிக்க
காலமெல்லாம்
காத்துக் கிடக்கிறது
இந்த-
வாலிப வண்டு.....!

ஆர். சாந்தசீலன், பொத்துவில்-03.

## மனிதர்களுக்கு மட்டும்

உன்னோடு என்னை
ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.
கண்
காது
வாய்
.........
ஒன்றுதான்!

நீயும் நானும்
பூமியை
குத்தகைக்கு எடுத்து
வாழ வந்தவர்கள்!

எப்படி நண்பா
பிரிபட்டோம்
'இனமென்று,
மதமென்று....'
யார்பிரித்தார்...?

மதங்கள்-நல்
வழிகாட்ட வந்தவை:
இப்போது-யுத்த
"வழி" காட்டுகின்றன.

நண்பா!
ஆயுதங்களை திருப்பு!

உனக்கு நான்-
எனக்கு நீ
எதிரியல்ல!

இனமென்று
மதமென்று
மொழியென்று
எவன் சொன்னாலும்
விட்டு வைக்காதே!

எப்போது வருவாய்
நண்பா
கைகுலுக்க?


சுபா வரன்,
கண்டி.

## மௌன யுத்தம்

இதயம் உன்னை நேசிக்க
எத்தனை காலம் காத்திருப்பாய்?
உன்மேல் பதிந்த என் விழிகள்
உரசி சொன்னது மௌனயுத்தம்!
இலவம் பஞ்சம் காத்திருக்க
இன்றும் ஏனிந்த மௌனங்கள்?
ஏங்கித் தவிக்கிறது இதயங்கள்
தூங்கிக் கிடக்கிறது கனவுகள்!

தெ. ஜோஹனா, கொழும்பு-15.

## அந்த நாள் ஞாபகம்



யார் இந்த ஜோடி என்று தெரிகிறதா? ஜெயலலிதாவின் உயிர்த் தோழி சசிகலாவும், நடராஜனும் திருமணமான புதிதில் எடுத்துக் கொண்ட புகைப்படம்தான் இது. இந்நாள் கோலஸ்வரியின் முன்னாள் தோற்றம்.



யார் இந்தச் சிறுவன்? இன்று தமிழ் திரையுலகில் வெற்றிப் பவனி வரும் ஒருவர்தான் இவர் என்றால் நம்பவா முடிகிறது? நம்பித்தான் தீரவேண்டும். சின்னவயதில் கமலின் தோற்றம் இதுதான்.







தற்போது அடித்துத் தூள் பண்ணும் ஆவேச பாத்திரங்களில் நடிக்கும் விஜயசாந்தியின் குழந்தைத் தோற்றம் இது. வியப்பாக இருக்கிறதல்லவா? அப்போதே என்ன ஒரு குறு குறுப்பு. திருஷ்டி சுத்திப் போடவேண்டும்!

## இந்த வாரம் உங்கள் பலன்

( 28.07.96 முதல் 03.08.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன். |
| சிம்மம் | - புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மிதுனம் | - செவ்வாய், வெள்ளி. |

★ சந்திரன்- தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், மனக் கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் உதவி, பணக் கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | காலை 8 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வியாழன்-தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பணத்தடை. | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பண வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 6 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- கடன் தொல்லை, மனக் கவலை. | காலை 6 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், துயர் நிங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பணக் கஷ்டம், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| சனி- பயனற்ற செயல், காரிய நஷ்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பயனுள்ள செயல். | பி.ப. 3 மணி |
| திங்கள்- மனக் கவலை, உறவினர் பகை. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 6 மணி |
| சனி- வெளியிடப் பயணம், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள் அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நஷ்டம், பிரயாண மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், காரியசித்தி. | காலை 7 மணி |
| புதன்- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| சனி- துயர் அதிகம், கடன் தொல்லை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், அந்நியர் சகவாசம். | காலை 6 மணி |
| புதன்- செல்வாக்கு மிகுதி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் அதிகம், இனசன விரோதம். | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| புதன் - மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை. | காலை 7 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை. | காலை 7 மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியசித்தி. | காலை 6 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக் கவலை, தொழிலில் நஷ்டம். | காலை 7 மணி |
| சனி- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும் | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- பொருள் வரவு, இனசன நன்மை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 2 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, புதிய முயற்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பிரயாணமிகுதி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் நஷ்டம், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| சனி- மனக் கவலை, உறவினர் உபத்திரவம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் பகை, பண இழப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், புகழ் கீர்த்தி. | பகல் 12 மணி |
| புதன்- பயனுள்ள செயல், கௌரவ மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| சனி- தொழில் நஷ்டம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்தநிலை, செல்வாக்கு மிகுதி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் தொல்லை, பண இழப்பு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கவலை. | காலை 7 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் நஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3


படிப்பகம்





## மீனும் நானும்

மீனே மீனே மீனே-நீ
நீந்தும் போது நானே,
தரையில் நின்றே உன்னை-தினம்
பார்த்து மகிழ லானேன்!

துள்ளிப் பாயும் மீனே-நீ
பாயும் போது நானே,
அள்ளி உன்னை எடுக்க-மனதில்
கொள்ளை ஆசை கொண்டேன்!

அம்மா வந்தார் மீனே-என்
ஆசை சொன்னேன் நானே!
வேண்டாம் மகனே என்றார்-உன்
இயல்பைப் பற்றிச் சொன்னார்!

மஞ்சள் வண்ண மீனே-உனைக்
கொல்லப் பார்த்தேன் நானே!
உண்மை அறிந்து கொண்டேன்-உன்
உற்ற நண்பன் ஆனேன்!

மிருதுபாஷினி-பதுளை.

துன்பம் நெருங்கி வந்த போதும்-நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்பு மிகுந்த தெய்வமுண்டு-துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!

-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# ஏமாந்த சாமியார்



முன்னொரு காலத்தில் போலிச் சாமியார் ஒருவன் ஓர் ஊரின் எல்லையில் வாழ்ந்து வந்தான். அவன் மௌன விரதம் பூண்டிருப்பதாக நடித்தான். பல மக்கள் அவனைக் காண வந்தனர்.

விலை மதிப்பு மிக்க பரிசுகள், உணவு வகைகள், பணம் முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுத்து அவர்கள் அவனுக்கு மரியாதை செலுத்தினர்.

அவற்றில் பெரும் பகுதியை அந்தப் போலிச் சாமியாரே எடுத்துக் கொண்டான். எஞ்சிய சிறு பகுதியைச் சீடர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு அவனுடன் கூட இருந்தவர்களுக்குக் கொடுத்தான்.

ஒரு நாள் செல்வம் மிக்க வணிகர் ஒருவர் வந்தார். அவருடன் மனைவியும், மகளும் வந்திருந்தனர். போலிச்சாமியார், வணிகரின் மகளை மனைவியாக்க ஆசைப் பட்டான்.

அவன் அந்த வணிகரைத் தனியே அழைத்து,

"நான் மௌன விரதம் பூண்டிருப்பது உனக்கே தெரியும். ஆனால் உன் மீது கொண்ட அக்கறையினால் பேசுகிறேன். நான் உன் மகளைப் பற்றித்தான் கவலைப் படுகிறேன். அவள் அதிஷ்டம் இல்லாதவள், உன்னோடு இருப்பாளானால் நீ தரித்திரனாக மாறுவாய்," என்று கூறினான்.

"அதற்கு பரிகாரம் ஏதாவது உண்டா? அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும்?" என்று மிகுந்த கவலையுடன் கேட்டார் வணிகர்.

"அது மிகவும் எளியது. அவளை ஒரு பெட்டகத்தில் வைத்து, அதை ஆற்றில் விட்டு விடு. ஆற்றில் விடும் போது பெட்டகத்தின் மேல் ஒரு விளக்கையும் வைத்து விடு", என்றான்.

"சரி அப்படியே செய்கிறேன்", என்றார் அந்த வணிகர்.

முன்னிரவுப் பொழுதில் ஓர் இளவரசன் வேட்டையாடிவிட்டுத் தனது நாட்டிற்குச் செல்வதற்காக நதியைக் கடந்து கொண்டிருந்தான். அந்த நதியில் ஒரு பெட்டகம் சென்று கொண்டிருந்ததைக் கண்டான். உடனே அந்தப் பெட்டகத்தைக் கரைக்குக் கொண்டு வந்தான். அதைத் திறந்தான். அதனுள் அழகான பெண் ஒருத்தி அழுது கொண்டிருப்பதைக் கண்டான்.

அந்தப் பெண்ணிடமிருந்து நடந்தவைகளை அறிந்து கொண்டான்.

காட்டிலே பிடித்த முரட்டுக் குரங்கு ஒன்று இளவரசனிடம் இருந்தது. அதை, அந்தப் பெட்டகத்தில் வைத்து மூடினான். முன்பிருந்த படியே விளக்கைப் பெட்டியின் மீது வைத்து அதை ஆற்றின் போக்கிலேயே விட்டான்.

ஊரின் எல்லையில் இருந்த ஆற்றங்கரையில் போலிச்சாமியார் விளக்கு வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். பெட்டகம் ஒன்று வந்து கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், அதைக் கரைக்குக் கொண்டு வருமாறு சீடர்களை ஏவினான்.

உடனே அவர்கள் குருவின் இருப்பிடத்திற்குக் கொண்டு சென்றார்கள். தன் சீடர்களை வெளியே அனுப்பிவிட்டு அளவில்லா ஆர்வத்துடன் பெட்டியைத் திறந்தான்.

என்ன நடந்தது என்பதை அறியும் முன்னரே உள்ளே இருந்த குரங்கு போலிச்சாமியாரைப் பலமாகத் தாக்கிக் காயப்படுத்தியது.

போலிச்சாமியார் பைத்தியம் பிடித்தவனைப் போல் கதறிக்கொண்டு அந்த ஊரை விட்டே ஓடிவிட்டான்.

சிறிது நாட்களில் இளவரசன் அழைத்துச் சென்று அப்பெண்ணை மணந்து கொண்டு இன்பமாக வாழ்ந்தான். ■

## ஒரு நாடு ஓரம்

# நைஜீரியா



தலைநகர்-அபுஜா.
பரப்பு- 9,23,768 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 11.93 கோடி.
மொழி-ஆங்கிலம், ஹவுஸா, இபோ.
எழுத்தறிவு- 31%
சமயம்- இஸ்லாம், கிறிஸ்தவம், பழங்குடி சமயம்
நாணயம்- நைரா.
தனிநபர் வருமானம்- 315 டொலர்.

அமைவிடம்:-


நைஜீரியா மேற்கு ஆபிரிக்கக் கடற்கரையில், கினி வளைகுடாவில் அமைந்துள்ளது. நைஜர் ஆறு தென்மேற்கு நைஜீரியாவில் ஓடுகிறது.

வரலாறு:-

பிரிட்டன் 1960 ல் சுதந்திரம் வழங்கியது. 1963 ல் குடியரசானது. 1983 ல் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இது ஆபிரிக்க கண்டத்தின் மக்கள் தொகை மிகுந்த நாடாகும்.

பொருளாதாரம்:- கொக்கோ, தாவர எண்ணெய், ரப்பர் போன்றவை முக்கிய விளைபொருட்கள், தகரம், நிலக்கரி போன்ற தாதுக்கள் அதிகம். கோல்மணைட் உற்பத்தியில் உலகில் முதலிடம் பெற்றுள்ளது. ஏற்றுமதியில் 95 சதவீதமும் எண்ணெய் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.08.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 151
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 149

பரிசுக்குரியவர்:
செல்வி ஒலிவியா நிர்மலி சொலமன்.
மேட்டுக்கடை வீதி, பூண்டுலோயா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இஸ்ஸதுல் பலீனா., அல்மதீனா மஹா வித்தியாலயம், குடாநெலுபேவ அநுராதபுரம். | கோபாலசிங்கம் சாந்தப்பிரியா. தேசிகர் வீதி, காரைதீவு-10. |
| புஸ்பராஜு விேனாதா., நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம். | ரஷிதா லாபீர். கிரின்கதெனிய, மாவனல்லை. |
| சிவநேசராசா வியூரகன். மட்/சிவானந்தா வித்தியாலயம் தேசியபாடசாலை, கல்லடி. | உ. யோசுவா பிரதாப். மேசி சேவிசஸ் பாடசாலை, நுவரெலியா. |
| அ.அ. முஹம்மது அஸாம். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | எஸ்.பி.ஜி.அன்ரு ராஜன். புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. |
| கஜாந்தி கணேசலிங்கம். விஜயரெட்ணம் மத்திய மகா வித்தியாலயம், நீர்கொழும்பு. | பாத்திமா றஸ்னா ஜலீல். காமாச்சோடை மு.வி., நீர்கொழும்பு. |

# மயில்



மயிலுக்கு ஏராளமான இறகுகள் உண்டு. பலர் இதனை வால் எனத் தவறாகக் கருதுவதும் உண்டு. ஒரு மயிலுக்கு 150 இறகுகள் வரை இருக்கும். அவை மயிலின் உடலை விட ஐந்து மடங்கு நீளமாக இருக்கும். இவைக்குக் குஷி வந்தவுடன் தோகையை விரித்து ஆடும். ஆகஸ்ட் இறுதியில் இருந்து செப்டெம்பர் முதல் வாரத்திற்குள் இறகுகள் உதிர்ந்துவிடும். பெப்ரவரி மாதத்திற்குள் புதிய இறகுகள் முளைத்து விடும்.

மயில்கள் குறைந்த தூரத்திற்கு வேகமாகப் பறக்கும். ஆனால் நடந்து போவதுதான் இவற்றுக்குப் பிடிக்கும். ஆறு, கால்வாய் போன்றவைகளைக் கடக்கவும் அந்நியரைக் கண்டதும் தப்பிக்கவும் மட்டுமே பறக்கும்.

விதைகள், தானியங்கள், இலை, புல், பூச்சிகள், பல்லி, தவளை, பாம்பு, எலிகளை மயில்கள் உணவாக உட்கொள்ளும். மயில்களால் சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாது. எனவே சூரிய உதயத்திற்கு முன்னும், சூரியன் மறையும் போதும் வெயில் குறைவாக இருக்கும் வேளையிலும்தான் உணவு தேடச் செல்லும்.

பெண் மயில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட சாம்பல் நிற முட்டைகளைப் பாதுகாப்பான இடத்தில் இடும். குஞ்சு மயில்கள் ஆறுமாதம்வரை பெண் மயில்களைப் போன்று தோகை இல்லாது இருக்கும். அதன் பின்னர்தான் இறகுகள் வளரத் தொடங்கும்.

மயில்களின் விரோதிகள் பூனை, நாய், மற்றும் மனிதர்கள். மயில்கள் காடுகளில் 15 முதல் 20 ஆண்டுகள் வரை உயிர் வாழும். கூண்டில் வசிக்கும் மயில்கள் மேலும் சில ஆண்டுகள் வாழும்.

இலங்கை, வங்காள தேசம், இந்தியா ஆகிய காடுகளில் மயில்கள் அதிகம் உள்ளன. பர்மா மற்றும் கிழக்காசிய நாடுகளிலும் மயில்கள் உள்ளன. ஆசியாவுக்கு வெளியே மயில்கள் உள்ள இடம் காங்கோ மட்டும் தான்.

## செய்தி ஸ்தாபனங்கள்

| | |
|---|---|
| இலங்கை- | லங்கா புவத் |
| இந்தியா- | பி.ரி.ஐ., யு.என்.ஐ. |
| ஈராக்- | ஐ.என்.ஏ. |
| பிலிப்பைன்ஸ்- | பி.என்.ஏ. |
| பாகிஸ்தான்- | ஏ.பி.பி. |
| ஜப்பான்- | கியோடே, கிகி. |
| ஃபிரான்ஸ்- | ஏ.எஃப்.பி. |
| இத்தாலி- | அன்சா |
| ஜெர்மனி- | டி.பி.ஏ, ஏ.டி.என். |
| யூகோஸ்லாவியா- | டான்ஜிக் |
| ரஷ்யா- | டாஸ். |
| எகிப்து- | மேனா |
| டுனீஸியா- | ரி.ஏ.பி. |
| மொராக்கோ- | எம்.ஏ.பி. |
| ஸைரே- | ஏ.இஸட்.பி. |
| கானா- | ஜி.என்.ஏ. |
| கியூபா- | பெரிலா |
| பிரேசில்- | ஏ.என். |
| ஆர்ஜென்டினா- | டீலம் |
| மலேசியா- | பெர்நமா. |

தொகுப்பு-செல்வி ஏ.ஷில்மியா, மருதானை.

## பரபரப்பான விமான நிலையம்



அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரத்தில் இருக்கும் 'ஓ ஹேர்' விமான நிலையம் தான் உலகிலேயே மிகவும் பரபரப்பான விமான நிலையமாகும். இங்கு ஒரு வருடத்தில் 5 கோடி 50 இலட்சம் பயணிகள் வருகின்றனர். ஒரு மணிநேரத்தில் 6 ஆயிரத்து 700 மக்கள் இவ்விமான நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர்; 2,200 விமானங்கள் இங்கு வந்து செல்கின்றன. ■

# பெர்ட்ரன்ட் ரஸ்ஸல்



* பெர்ட்ரன்ட் ரஸ்ஸல் என்பவர் யார்?
ஆங்கில கணிதமேதை. இதுமட்டுமன்றி இலக்கியம், தத்துவம், அறிவியல் போன்ற பல துறைகளிலும் புகழ் பெற்றவர்.
* இவர் எப்போது பிறந்தார்?
1872 ஆண்டு மே மாதம் 18ம் திகதி பிறந்தார்.
* முதலாம் உலகப்போரின் போது இவரை ஏன் கைது செய்தனர்?
அஹிம்சாவாதியான இவர் போரைக் கடுமையாக எதிர்க்கவே, ராஜதுரோகம் என்று இவர் மேல் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்தனர்.
* இவர் எழுதிய நூல்களில் மிகவும் புகழ் பெற்ற நூல்கள் எவை?
'த பிரின்சிபியா மெதமாட்டிகா','தி அனலைசஸ் ஒவ் மாட்டர்', 'மிஸ்டிசிஸம்','லொஜிக் அன்ட் த ஹிஸ்ட்ரி ஒவ் வெஸ்டேன் ஃபிலோசபி' போன்றவை.
* இவருக்கு 1950 ம் ஆண்டு கிடைத்த பரிசு என்ன?
இலக்கியத்திற்கான நோபல் பரிசு இருவருக்குக் கிடைத்தது.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

"நரசிம்மன் தான் சார். தடயம் தேடறார்."

"எங்கே. ஒரு மைலுக்கு அந்தப் பக்கமா?"

"நரசிம்மன்! இங்கே வாங்கய்யா. ஏன் ஓடி வர்றீங்க. மெதுவா வாங்க."

"சார், சார், இந்த மணி பர்சைப் பாருங்க."

"என்னய்யா இது, கைப்பை எடுத்தே, மணிபர்ஸ் எடுத்தே இது என்ன கடற் கரையா, இல்லை ஷாப்பிங் காம்ப் ளெக்ஸா? என்ன சசிதரன், யார் பர்சு?"

"ஒரே ஒரு அம்பது ரூபா நோட்டு இருக்கு சார். விலாசம்.. இதோ கையால எழுதி செருகி வச்சிருக்குது. மாம்பலம் அட்ரஸ் சார். யாரோ எஸ். மதன்!"

"கேசைக் குழப்பிக்கக் கூடாது சசிதரன். அதே சமயம் எதையும் அலட்சி யப் படுததவும் முடியாது. சாயங்காலம் இங்கே வந்த எவனாவது இதை தவற விட்டிருக்கலாம்."

"இல்லைன்னா நம்ம குற்றவாளி அவசர அவசரமா குத்திட்டு, கத்தியை வீசிட்டு ஓடினப்போ கீழே விழுந்ததாகவும் இருக்காலம்."

"மே பி. மே பி. எல்லா யூகங்களும் தேவை. வச்சிக்குங்க. விசாரிச்சுடலாம்."

"விசாரிக்கிறதென்ன சார்? சுத்தமா அட்ரஸ் இருக்கு. நேரா போயி ரெண்டு அறைவிட்டு லாக்கப்புக்குக் கொண்டாந்து சொல்டான்னா கக்கிடுவான்."

இப்ப பாத்ரூம் காலியா இருக்கும்."

"இப்பவே குளிச்சிட்டு வந்துடறேன் றியா? டேய், மணி இப்போ பத்தரைடா."

"குளிக்கலை. இந்த வெள்ளைப் பாண்ட்டை மட்டும் துவைச்சுப் போட்டுட்டு வந்துடறேன். நாளைன்னைக்கு ஒரு இண்ட் டெர்வியு இருக்கு. ரவி உன் சோப் எடுத்துக்கறேன்."

"அப்படியே என் பனியன் ஒண்ணையும் துவைச்சிடறியா?"

"இன்னிக்கு பனியன். நாளைக்கு ஜட்டி தருவே. போடா. வந்து கதவை சாத்திக்க."

"ஆமாம். இங்கே கொள்ளை அடிக்கிற துக்கு வைரமா இருக்கு? திறந்தே இருக்கட் டும். நீ போ. அந்த டேப் ரிக்கார்டரை போட்டுட்டு போ. புன்னகை மன்னன் போடு."

"மங்கை இவள் வாய் திறந்தால் மல்லிகைப் பூ வாசம், ஓடையெல்லாம் பெண் பெயரை உச்சரித்தே பேசும். யார் இவர்கள்? இரு பூங்குயில்கள். இளம் காதல் மா...!"

"ஏண்டா நிறுத்.... சார், நீங்க...."

"ஐ யாம் சப்-இன்ஸ்பெக்டர் சசிதரன். உங்க பேரு?"

"ரவி, உக்காருங்க சார். என்ன விஷயம்னு..."

"இங்கே மதன்னு யாரும் இருக்காங் களா?"

"ஆமாம் சார். என் ஃபிரண்டு தான் சார்."

"தெரியும். வந்து.... எதுக்காக இந்த விசாரணை?"

"சொல்றேன். பதறாதிங்க. எங்கே போனாரு?"

"அஷ்டலக்ஷ்மி கோவில் போய்ட்டு வர்றேன்னு போனான்."

"வெரிகுட். தனியாவா? நீங்களும் போனிங்களா?"

"இல்லை சார். அவன் மட்டும்தான் போனான். கூப்பிட்டு வந்துடறேனே."

"கூப்புடலாம், இருங்க. எதுக்காகப் போனார்?"

"வந்து... வந்து..."

"சும்மா சொல்லுங்க. மறைக்காதிங்க."

"அவன் , ஒரு பொண்ணை லவ் பண்ணிட்டிருக்கான். அவளை சந்திக்கிற துக்காகப் போனான்."

"யாரு அந்தப் பொண்ணு.?"

"எனக்கு விபரம் எல்லாம்



தெரியாது சார்."

"பொண்ணு பேர்கூட தெரியாதா?"

"கீதான்னு சொன்னான்."

"இந்த மணி பர்சைப் பாருங்க, உங்க ஃபிரெண்டோடதா இது?"

"வாங்க கீழே போலாம்."

"சார், இந்த மணி பர்சை ஒப்படைக்கத்தான் வந்திங்களா?"

"ஆமாம்."

"நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன்."

"என்னன்னு பயந்திங்க?"

"அவன் வேற வெள்ளைப் பாண்ட்ல ரத்தக்கறை மாதிரி கறைபட்டுக்கிட்டு வந்தானா. நீங்க வேற வந்து விசாரிச்சிங்களா, ரொம்ப பயந்துட்டேன்."

"ரத்தக் கறையா?"

"ரத்தமில்லையாம். ஹோட்டல் போயிருக்கான். சேர்ல தக்காளி சாஸ் சிந்தியிருந்தது தெரியாம உக்காந்துட்டான். இதான் சார். என் ஸ்கூட்டர்."

"இதென்ன சீட்ல? இதுவும் தக்காளி சாஸா?"

"அப்படித்தான் இருக்கணும்."

"வாங்க. பாத்ரூம் போலாம்."

"டேய் மதன், உன்னோட மணிபர்ஸ் கிடைச்சிடுச்சி. இதோ பாரு."

"அட! சார். ரொம்ப தேங்க்ஸ்சார்"

"என்ன பண்றிங்க? அதென்ன பாண்ட்ல கறை?"

"எங்கேயோ உக்காந்தப்போ ஒட்டிருக்கு சார். சாமான்யமா போகமாட்டேங்குது. பெய்ண்ட்ன்னு நினைக்கிறேன்."

"அப்படியா? எங்கே, பேண்ட்டை

"ஒரு நிமிஷம் சார். கைலி மாத்திட்டு பாண்ட் போட்டுட்டு வந்துடறேன்."

"பரவால்லை வாங்க. ராத்திரி நேரம் தானே!"

"சரி. ரவி, இந்த பாண்டை கொடில காயப்போட்டுடு. சலவைக்குப் போட்டு கறை போகுதான்னு பார்க்கலாம்."

"மதன், உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா நான் சொல்ற மாதிரி செய்யலாம்."

"என்ன சார்?"

"இதை அப்படியே ஒரு பைல போட்டு எடுத்துட்டு வாங்க. ஸ்டேஷன்ல ஒரு லிக்விட் இருக்கு. ப்ளட் ஸ்டெய்ன்ஸ் எடுத்துடும் சுத்தமா. தரச் சொல்றேன். ரெண்டு சொட்ட விட்டா போதும்; கறை போய்டும்."

"ரொம்ப தாங்ஸ் சார். நாளைன் னைக்கு எனக்கு இண்ட்டெர்வியு இருக்கு. ஒரு நிமிஷம். நான் மாடிக்குப் போயி ஸ்கூட்டர் சாவியும், ஒரு பையும் எடுத்துட்டு வந்துடறேன்."

"சீக்கிரம் வாங்க. அப்புறம்.. உங்க பேர் என்ன சொன்னீங்க?"

"ரவி சார்?"

"என்ன பண்றீங்க?"

"போஸ்ட்டல் டிபார்ட்மெண்ட்ல எல்.டி.சி. சார்."




**இதுவரை**

**மதன்-கீதா காதலர்கள்.**
**கடற்கரையில் சந்தித்து பேசுகின்றனர்.**
**இருட்டாகிவிட்டது.**
**கீதா விடைபெறுகிறாள்.**
**மதன் தனது பர்ஸை தொலைத்துவிட்டான்.**
**தேடிப்பார்க்கிறான். கிடைக்கவில்லை.**
**தன் அறைக்குத் திரும்புகிறான்.**
**காற்சட்டையின் பின்புறம் இரத்தக்கறை.**
**அதே சமயம் அதே கடற்கரையில்**
**ஒரு பெண் பிணம் கிடக்கிறது.**
**விசாரணை செய்த பொலிசாருக்கு**
**மதன் தொலைத்த பர்ஸ் கிடைக்கிறது. இனி......**

கொடுங்க பார்க்கலாம்."

"இந்தாங்க. ரொம்ப தாங்ஸ் சார். ஒரு மணி பர்சை ஒரு சப்-இன்பெக்டர் தேடிவந்து கொடுக்கிறது நம்பவே முடியலை."

"இன்னும் நிறைய இருக்கு. மதன், வர்றிங்களா ஸ்டேஷன் வரைக்கும் போய்ட்டு வந்துடலாம்."

"எதுக்கு சார்?"

"மணிபர்ஸ் வாங்கிக்கிட்டதுக்கு அங்கே ஒரு லெட்ஜர்ல கையெழுத்து போடணுமே."

"காலைல வந்து போடக்கூடாதா?"

"இல்லை சார். இப்பவே முடிச்சாக ணும் நான். ஃபிரெண்டு ஸ்கூட்டரை எடுத்துட்டு வாங்களேன். உடனே திரும் பிடலாம்."

"போய்ட்டு வந்துடட்டுமா ரவி?"

"சரி. போய்ட்டு வா."

"உங்க ஃபிரெண்டு மாதிரி நீங்க யாரையும் லவ் பண்ணலையா?"

"சேச்சே."

"ஏன், பாவமா என்ன? உங்க ஃபிரெண்டு ரொம்ப நாளா காதலிக் கிறாரா?"

"ஆறு மாசமா"

"எப்ப கல்யாணம்?"

"அந்த பொண்ணு சைடிலே ஏதோ பிரச்னைன்னு சொன்னான்."

"சார், போலாமா?"

"போலாம். என் பைக்குக்கு பின்னா டியே வாங்க. அப்போ, குட் நைட் மிஸ்டர் ரவி. நாம மறுபடி சந்திப்போம்னு நினைக்கிறேன்."

(தொடர்ந்து வரும்)

இது வேகம். நான் சொல்றதைக் கேளுங்க. அதுபடி நடந்துக்கங்க. இந்த பர்சுக்காரன்தான் கொலைகாரன்னு தீர் மானிச்சிக்கணும் நாம். அப்புறம் அடுத்த ஸ்டெப்புக்குப் போலாம்."

"சரி. சார்."

"ரவி, தூங்கேண்டா. நாளைக்குப் படியேன்."

"நான் படிச்சா உனக்கென்ன கஷ்டம்?"

"அப்ப நாளைக்கு ஒரு டேபிள் லைட்டாவது வாங்கிட்டு உக்கார்ந்து படி. இப்படி டியூப் லைட்டைப் போட்டுக்கிட்டு படிச்சா எப்படி தூக்கம் வரும்?"

"குப்புறப் படுத்துக்கோ."

"தூக்கமே போச்சி போ. சும்மா படுத்துக்கிடக்கிறதுக்கு உருப்படியா ஒரு வேலையாச்சும் செய்றேன்."

"என்ன செய்யப் போறே?"

"காலைலன்னா கூட்டம் வந்துடும்.

## தமிழக கிரைம் கதை மன்னன்
## பட்டுக்கோட்டை பிரபாகர்

"எங்கே இப்போ?"

"கீழே பாத்ரூம்ல துணி துவைச்சிட்டி ருக்கான்."

"இந்த நேரத்திலேயா?"

"ஆமாம். ஒரு பாண்ட் ஒண்ணு துவைக்கி றான். அவசரமா தேவைப்படறதாலே. கூப்பிட்டு வந்துடவா?"

"இருங்க. கூப்புடலாம். உக்காருங்க. என்ன செய்றார் உங்க ஃபிரண்டு?"

"சும்மாதான் இருக்கான். வேலை தேடிக் கிட்டிருக்கான்."

"இன்னிக்கு சாயங்காலம் உங்க ஃபிரண்டு எங்கே போனாருன்னு தெரியுமா?"

"ஆமாம் சார், தொலைஞ்சிடுச்சின்னு சொல்லிட்டிருந்தான்."

"எத்தனை மணிக்கு ரூமுக்கு திரும்பி வந்தார் மதன்?"

"எட்டரை மணி இருக்கும்."

"ஆட்டோல வந்தாரா?"

"இல்லை சார். என்னோட ஸ்கூட்டரை எடுத்துட்டு போயிருந்தான்."

"ஐ.சீ.எங்கே ஸ்கூட்டர்?"

"கீழே நிறுத்திருக்கான்."

"பாத்ரூம் எங்கே இருக்கு?"

"அதுவும் கீழேதான் இருக்கு."


**விரைவில் முரசில்**

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமாரின்**


**தொடர்**

**நந்தினி ப்ளஸ் வேல்ஸ்**

**வாரம் தோறும்-திக்...திக்...**




## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம்.பஸ்ரி.
வயது: 19
முகவரி: ஜாவா வீதி, பெரிய கிண்ணியா-6.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ. சுரேஷ்குமார்.
வயது: 19
முகவரி: 85, கோவில் வீதி, நோட்டன் பிரிட்ஜ்.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி., கிரிக்கெட்.

பெயர்: ஏ. கிங்ஸ்லி பெர்னாண்டோ.
வயது: 18
முகவரி: 124 1/3, உனுக்கொட்டுவ, கெட்டப்புல, நாவலப்பிட்டிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: எம். சிவசங்கர்.
வயது: 24
முகவரி: SCHONEGG STR. 147. DITIKON, ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு: சினிமா, புத்தகம்.

பெயர்: எம். பௌமி.
வயது: 18
முகவரி: 79/4, மீரானியா வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம், வானொலி.

பெயர்: எம்.ரொஷான் நபீல்.
வயது: 22
முகவரி: 731, மல்வானஹின்னை, அக்குறணை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீவி., பேனாநட்பு.

பெயர்: ஐ.தஸ்மின்.
வயது: 27
முகவரி: HOUSE NO.449. BLOCK NO.2. AHMATI NO.60000. KUWAIT.
பொழுது போக்கு : வழமையானவை.

பெயர்: எம்.சாபி.
வயது: 21
முகவரி: 450, பிரதான வீதி, மாத்தளை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: பாலா தாமோதரன்.
வயது: 30
முகவரி: 685,MC COWDON RD, P.O.BOX-66532, SCARBO., ONT., M1J 3N8, CANADA.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ரி.ராஜசேகரன்.
வயது: 22
முகவரி: கோவில் புதுக்குளம், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி, பத்திகை.

பெயர்: ஜி.சுதன்.
வயது: 17
முகவரி: 256/30, உட்துறைமுக வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: புத்தகம் படித்தல்.

பெயர்: எம்.இர்ஷாட்.
வயது: 14
முகவரி: பெரிய பள்ளியடி, சம்மாந்துறை-4.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.


படிப்பகம்

www.padippakam.com

# 86

# தாய்

## மக்சீம் கார்க்கி

"என் பக்கத்திலே உட்கார்," என்று ஒரு பெஞ்சில் ஒதுங்கி இடம் கொடுத்துக் கொண்டே கூறினான் சிஸோவ்.

அவள் பணிவோடு உட்கார்ந்து, தன் உடுப்பைச் சரியாக இழுத்து விட்டுக் கொண்டு சுற்றும்முற்றும் பார்த்தாள். அவளது கண்முன்னால் பச்சை, சிவப்புப் புள்ளிகளும், கோடுகளும், மஞ்சள் நாடாக்களும் நடனமிட்டன.

"எங்கள் கிரிகோரியை உன் மகன் தான் இதில் இழுத்து விட்டு விட்டான்." என்று அவளுக்கு அடுத்தாற்போல் இருந்த ஒரு பெண் முனகினாள்.

"வாயை மூடு, நதால்யா!" என்று கோபத்தோடு சொன்னான் சிஸோவ்.

தாய் அந்தப் பெண்ணைப் பார்த்தாள். அவள்தான் சமோய்லவின் தாய். அவளை அடுத்து அவள் கணவன் உட்கார்ந்திருந்தான்; சுமுகமான தோற்றமும், மெலிந்த முகமும், வளர்ந்து பெருகிய சிவந்த தாடியும் வழுக்கைத் தலையுமாகக் காட்சியளித்த அவன் தன் கண்களை நெரித்து ஏறிட்டுப் பார்த்தான்; உள்ளுக்குள் பட்டுக்கொண்டிருந்த சிரமத்தால் அவனது தாடி நடுநடுங்கிக் கொண்டிருந்தது.

வெளிப்புறத்திலிருந்து பனி படிந்துள்ள உயர்ந்த ஜன்னல்களின் வழியாக, மங்கிய ஒளி மயக்கம் நீதி மன்றத்துக்குள்ளே பரவி ஒளிசெய்தது. ஜன்னல்களுக்கு மத்தியில் அலங்காரமான முலாம் சட்டத்தில் அமைந்த ஜார் அரசனின் சித்திரம் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் இருபுறத்தையும் கருஞ்சிவப்பான ஜன்னல் திரைகள் மடிமடியாகத் தொங்கி மறைத்துக் கொண்டிருந்தன. அந்தச் சித்திரத்துக்கு முன்னால் பச்சைத் துணியால் மூடப்பட்டிருந்த ஒரு பெரிய மேஜை அந்த ஹாலின் அகலம் முழுவதையுமே வியாபித்துக் கொண்டிருந்தது. கைதிக் கூண்டுகளுக்குப் பின்னால், வலதுபுறச் சுவரையொட்டி இரண்டு மரப் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. இடது புறத்தில், கருஞ்சிவப்பு துணி வைத்துத் தைக்கப்பட்ட கைநாற்காலிகள் இரு வரிசையாகப் போடப்பட்டிருந்தன. தங்க நிறப் பித்தான்களைக் கொண்ட பச்சை உடுப்புக்கள் அணிந்த கோர்ட்டுச் சேவகர்கள் வாய் பேசாது முன்னும் பின்னும் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அந்த மப்பும் மந்தாரமும் நிறைந்த சூழ்நிலையில் உள்ளடங்கி ஒலிக்கும் பேச்சுகளும், பற்பல மருந்துகளின் கார நெடியும் கலந்து நிறைந்தன. இவையெல்லாம்- இந்த வர்ண பேதங்கள், பிரகாசம், குரல்கள், நெடி. எல்லாம்-கண்ணையும் காதையும் உறுத்தின; சுவாசத்தோடு இதயத்தில் புகுந்து அர்த்தம் ஒன்றுமற்ற பயவேதனையை நிரப்பின.

திடீரென யாரோ உரத்த குரலில் பேசினார்கள். தாய் திடுக்கிட்டாள். எல்லோரும் எழுந்து நிற்பதைக் கண்டு அவளும் சிஸோவின் கையைப் பற்றிப் பிடித்தவாறே எழுந்து நின்றாள்.

இடதுபுறமாக இருந்த ஒரு பெரிய கதவு திறந்தது; மூக்குக் கண்ணாடி அணிந்த ஒரு வயதான மனிதர் ஆடியசைந்து கொண்டு உள்ளே வந்தார். அவரது சாம்பல்நிறக் கன்னங்களில் மெல்லிய வெள்ளையான கிருதாக்கள் அசைந்து கொடுத்தன. மழுங்கச் செய்யப்பட்ட அவரது மேலுதடு பற்களேயற்ற வாய் ஈறுக்குள் மடிந்துபோயிருந்தது. அவரது மோவாயும் தாடையும் அவரது உத்தியோக உடுப்பின் உயர்ந்த காலர்மீது சாய்ந்து கழுத்தே இல்லாததுபோல் தோற்றமளித்துக் கொண்டிருந்தது. கொழுத்துத் திரண்ட, நெட்டையான வெள்ளை முஞ்சி இளைஞன் ஒருவன் கைகொடுத்து அவரை மேலேற்றிவிட்டான். அவர்களுக்குப் பின்னால் தங்க நிறக்கரை வைத்துத் தைத்த உத்தியோக உடைகளோடு மூன்று பேர் வந்தார்கள்; சாதாரண உடையணிந்து மூன்று பேர் வந்தார்கள்.

அந்த நீண்ட மேஜை முன்னால் அவர்கள் உட்கார்ந்து முடிப்பதற்கே வெகு நேரம் பிடித்தது. அவர்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தவுடன் மழுங்கச் சவரம் செய்து வழவழப்போடு விளங்கும் சோம்பல் முகமுள்ள ஒரு மனிதன் அந்த வயோதிகரின் பக்கம் குனிந்து தனது தடித்த உதடுகளை என்னவோ போல அசைத்துக் கொண்டு, இரகசியமாக ஏதோ சொல்லத் தொடங்கினான். அந்தக் கிழவர் நிமிர்ந்து அவன் கூறுவதை அசையாமல் கேட்டார். அவரது கண்ணாடிக்குப் பின்னால், இரு சிறு புள்ளிகள் மாதிரி தோன்றும் உணர்ச்சியற்ற கண்களைத் தாய் கண்டாள்.

அந்த மேஜையின் ஓரமாகக் கிடந்த எழுதும் சாய்வு மேஜைக்கு அருகே ஒரு நெட்டையான வழுக்கைத் தலை ஆசாமி நின்று கொண்டிருந்தான்; அவன் தொண்டையைக் கனைத்துச் சீர்படுத்திக் கொண்டே, தஸ்தாவேஜுகளைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

அந்தக் கிழவர் முன்புறமாகக் குனிந்து பேசத் தொடங்கினார். எடுத்த எடுப்பில் அவரது பேச்சு தெளிவாக ஒலித்தது; அப்புறம் அந்தப் பேச்சு அவரது மெல்லிய உதடுகளுக்குள்ளாக மடிந்து உள்வாங்கிப் போய்விட்டது.

"விசாரணை தொடங்குகிறேன்.... அவர்களைக் கொண்டு வாருங்கள்...."

"பார்!" என்று தாயை முழங்கையால் இடித்து, நிமிர்ந்து நின்றவாறே மெதுவாகச் சொன்னான் சிஸோவ்.

கைதிக் கூண்டுக்குப் பின்புறமுள்ள கதவு திறந்தது. பளபளக்கும் வாளைத் தோளில் சாத்தியவாறே ஒரு சிப்பாய் வந்தான்; அவனைத் தொடர்ந்து பாவெல், அந்திரேய், பியோதர் மாசின்; கூஸெவ் சகோதரர்கள், சமோய்லவ், புகின், சோமவ் முதலியோரும், தாய்க்கு அறிமுகமில்லாத ஐந்து இளைஞர்களும் வந்து சேர்ந்தார்கள். பாவெல் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். அந்திரேய் பல்லைக் காட்டி, தலையை ஆட்டினான். அவர்களது புன்னகையும், உற்சாகம் நிறைந்த முகங்களும், அசைவுகளும் அந்த நீதி மன்றத்தின் உம்மணா மூஞ்சிச் சூழ்நிலையை மாற்றி, அதைத் தளரச் செய்தது. உத்தியோக உடுப்புகளின் பொன்னொளி ஜாலம் மங்கிப் போயிற்று. தைரியம் மீண்டும் தாயிடம் குடி புகுந்தது. அந்தக் கைதிகள் தம்மோடு கொணர்ந்த அமைதியான தன்னம்பிக்கையும் ஜீவ சக்தியும் அவளுக்கு வலுவூட்டின. அவளுக்குப் பின்னுள்ள பெஞ்சிகளில், இத்தனை நேரமும் சோர்ந்து அசந்துபோய் நின்ற மக்கள், தங்களுக்குள் குசுகுசுத்துப் பேசத் தொடங்கினார்கள்.

"அவர்கள் பயப்படவே இல்லை!" என்று சிஸோவ் இரகசியமாகச் சொன்னான். சமோய்லவின் தாயோ உள்ளுக்குள்ளாகப் பொருமத் தொடங்கினாள்.

"அமைதி!" என்று ஒரு கடுமையான குரல் ஒலித்தது.

"முதலிலேயே நான் உங்களை எச்சரித்து விடவேண்டும்..." என்று சொன்னார் அந்தக் கிழவர்.

முன்னாலுள்ள பெஞ்சியின்மீது பாவெலும் அந்திரேயும் ஒருவர் பக்கம் ஒருவராக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களோடு மாசின், சமோய்லவ், கூஸெவ் சகோதரர்கள் முதலியோரும் உட்கார்ந்திருந்தார்கள். அந்திரேய் தன் தாடியை எடுத்துவிட்டிருந்தான்; ஆனால் மீசையை மட்டும் வளரவிட்டிருந்தான். அந்த மீசை வளர்ந்து படிந்து அவனது உருண்டை முகத்தைப் பூனைமுகம் மாதிரி காட்டிக் கொண்டிருந்தது. அவனது முகத்தில் ஏதோ ஒரு புதுமை இருந்தது; கூர்மையும் குத்தலும் நிறைந்த பாவம் அவனது முகத்தில் தோன்றியது. கண்களில் ஏதோ ஒரு கருமை தென்பட்டது. மாசினுடைய மேலுதட்டில் இருகரிய கோடுகள் காணப்பட்டன; அவனது முகம் உப்பி உருண்டு திரண்டிருந்தது. சமோய்லவின் சுருட்டைத் தலை எப்போதும் போலவே இருந்தது; இவான் கூஸெவ் பல்லைக்காட்டிச் சிரித்தான்.

"ஆ! பியோதர்! பியோதர்!" என்று தலையைக் குனிந்து கொண்டே முணுமுணுத்தான் சிஸோவ்.

அந்தக் கிழவர் தமது உத்தியோக உடுப்பின் காலருக்குள் அசையாமல் புதைந்து கிடந்த தலையைக் கொஞ்சம்கூட அசைக்காமல் நிமிர்ந்தும் பார்க்காமல் கைதிகளைப் பார்த்து ஏதேதோ கேள்வி கேட்டார்; அந்தத் தெளிவற்ற கேள்விக் குரலைத் தாயும் கேட்டுக்கொண்டிருந்தாள். அந்தக் கேள்விகளுக்கு, தன் மகன் கூறிய அமைதியான சுருக்கமான பதில்களையும் அவள் கேட்டாள். பிரதம நீதிபதியும் அவரது சகாக்களும் தன் மகன் விஷயத்தில் குரூரமாகவும் கொடுமையாகவும் நடந்துகொள்ள முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. அந்த நீண்ட மேஜைக்கு எதிரே இருந்தவர்களின் முகத்தைப் பார்த்து விசாரணையின் முடிவை அவள் ஊகிக்க முயன்றாள்; அவளது ஊகத்தால், அவளது இதயத்தினுள்ளே ஒரு நம்பிக்கை வளர்ச்சி பெற்று ஓங்குவதை அவள் உணர்ந்தாள்.

ஒரு வெள்ளை முக ஆசாமி ஒரு தஸ்தாவேஜை உணர்ச்சியற்று ஒரே குரலில் வாசித்தான். மந்திரத்தால் கட்டுப்பட்டவர்கள் மாதிரி அதைக் கேட்ட ஜனங்கள் ஆடாது அசையாது உட்கார்ந்திருந்தார்கள். விசாரணைக்காக நிற்பவர்களைப் பார்த்து, நாலு வக்கீல்கள் உணர்ச்சியோடும் அமைதியோடும் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது அசைவுகள் பலமாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தன. அவர்கள் பெரிய கரும் பறவைகளைப்போல் தோன்றினார்கள்.

அந்தக் கிழ நீதிபதிக்கு அருகில் இருந்த நாற்காலியில் ஒரு கொழுத்த உப நீதிபதி உட்கார்ந்திருந்தார். அவரது சிறு கண்கள் கொழுத்த சதைப் பகுதிக்குள் புதைந்துபோயிருந்தன. இன்னொரு கைப்பக்கத்தில் கூனிய தோள்களும், வெளுத்த முகமும், சிவந்த மீசையும் கொண்ட இன்னொரு உப நீதிபதி உட்கார்ந்திருந்தார். அவர் தமது தலையைச் சோர்வோடு நாற்காலியின் பின்புறம் சாய்த்து கண்களைப் பாதி மூடியவாறே சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். அரசாங்க வக்கீலும் களைப்புணர்ச்சியோடும் எரிச்சலோடும் இருப்பதாகத் தோன்றியது. நீதிபதிகளுக்குப் பின்னால் மூன்று முக்கிய பிரமுகர்கள் உட்கார்ந்திருந்தார்கள்; ஒருவர் நகரத்து மேயர்-அவர் கனத்துத் தடித்த ஆசாமி; அவர் தமது கன்னத்தைத் தடவிக் கொடுத்தவாறு உட்கார்ந்திருந்தார். மற்றொருவர் பிரபு வம்சத் தலைவர்-நரைத்த தலையும், சிவந்த கன்னமும், நீண்ட தாடியும், கவர்ச்சிகரமான விசாலமான கண்களும் கொண்டவர் அவர்.

அடுத்தாற்போல் ஜில்லா அதிகாரி இருந்தார். பெரிய தொந்தியுள்ள ஆசாமி அவர். தொந்தி விழுந்திருப்பது அவருக்கு மனச்சங்கடத்தை உண்டு பண்ணியது போல் தோன்றியது. ஏனெனில் அவர் தமது கோட்டினால் அந்தத் தொந்தியை எவ்வளவோ மறைக்க முயன்றும், முடியவில்லை.

"இங்கு கைதிகளும் இல்லை, நீதிபதிகளும் இல்லை!" என்று பாவெலின் உறுதியான குரல் ஒலித்தது. "பிடிபட்டவர்களும் பிடித்தவர்களும்தான் இருக்கிறார்கள்!"

எல்லோரும் அமைதியானார்கள். சில விநாடிகள் வரையிலும் கரகரவென்று எழுதிச்செல்லும் பேனாவின் சத்தத்தையும், அவளது இதயத் துடிப்பையும் தவிர வேறு எதையுமே தாய் கேட்கவில்லை.

பிரதம நீதிபதியும் அடுத்தாற்போல் என்ன நடக்கப்போகிறது என்பதையே கவனித்துக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அவரது உதவி நீதிபதிகளும் நிலையிழந்து அசைந்து கொடுத்தார்கள். முடிவாக அவர் சொன்னார்:

"ஹூம்.... அந்திரேய் நாஹோத்கா! நீங்கள் குற்றவாளி என்று ஒத்துக் கொள்கிறீர்களா?"

அந்திரேய் மெதுவாக எழுந்தான்; நிமிர்ந்து நின்றான். மீசையை இழுத்து விட்டான்; தன் புருவங்களுக்குக் கீழாக, அந்தக் கிழ நீதிபதியைப் பார்த்தான்:

"நான் எப்படி என் குற்றத்தைக் கூறமுடியும்?" என்று நிதானமாக, இனிமையாக, தோள்களை உலுப்பிக் கொண்டே கூறினான் அந்திரேய். "நான் யாரையும் கொலை செய்யவில்லை; எதையும் திருடவில்லை. ஆனால் ஒருவரையொருவர் திருடவும், கொலை செய்யவும் தூண்டிவிடும் இந்த வாழ்க்கை அமைப்பைத்தான் நான் எதிர்க்கிறேன்...."

"சுருக்கமாகப் பதில் சொல்க" என்று அந்தக் கிழவர் சிரமப்பட்டுச் சொன்னார்.

தனக்குப் பின்னால் உள்ள பெஞ்சிகளிலுள்ளவர்கள் பரபரத்துக் கொண்டிருப்பதைத் தாயால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஜனங்கள் குசுகுசுத்து இரகசியம் பேசினார்கள்; அங்குமிங்கும் அசைந்தார்கள்; அந்த வெள்ளை மூஞ்சி ஆசாமியின் பேச்சினால் தம்மீது படர்ந்து விட்ட தூசி தும்புகளைத் துடைத்து விடுவது போலவும் நடந்துகொண்டார்கள்.

"அவர்கள் சொல்வதைக் கேள்" என்று சிஸோவ் இரகசியமாகச் சொன்னான்.

"பியோதர் மாசின், பதில் சொல்லுங்கள்...."

"முடியாது. சொல்ல மாட்டேன்" என்று துள்ளிக்கொண்டு கூறினான் பியோதர். அவனது முகம் சிவந்து போய்விட்டது. கண்கள் பிரகாசமடைந்தன. என்ன காரணத்தினாலோ அவன் தன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டிருந்தான்.

(தொடர்ந்து வரும்)



**ஒருவரையொருவர் திருடவும், கொலை செய்யவும் தூண்டிவிடும் இந்த வாழ்க்கை அமைப்பைத்தான் நாம் எதிர்க்கின்றோம்......**

---

# முள்ளில் ஓர் அரும்பு

**அவன் முகத்தில் அலாதியான கவர்ச்சி அதையும் மீறி ஒரு உணர்ச்சி**

சில்லென்ற காற்று முகத்தில் வந்து அறைந்தது. குளிர் உடம்பின் நரம்பெங்கும் பரவி குளுகுளுவென்றிருந்தது. பின்னாலிருந்த பயணி ஜன்னல் கண்ணாடியை இழுத்து மூடினார்.

எனக்குள் எரிச்சலும் கோபமும். 'சீ.. இயற்கையை ரசிக்கத் தெரியாத ஜென்மம். எவ்வளவு இதமான, இனிமையான காற்றும் காட்சிகளும்...' நினைத்தேன். "அ.. அச்சூ" பின்னாலிருந்து தும்மல் புறப்பட்டு என்காதை வந்தடைந்தது. திரும்பிப் பார்த்தேன்.

தலை, காது முழுதும் மூடியபடி வயதான மூதாட்டி சிரித்தார். "ம்... சரியான தடுமல் தங்கச்சி... காத்து, கூதல் புடிக்காது. அதான் ஜன்னலை மூடிட்டேன். கோவிச்சுக்காதீங்க..."

என் மனதை வாசித்தவர் போல புன்சிரிப்பு மாறாமலேயே சொல்லி முகம் பார்த்தார். அசடு வழிய புன்னகை வழங்கி திரும்பினேன்.

பஸ் அதன் பாட்டுக்கு ஏற்றத்தில் ஏறியும் பள்ளத்தில் வழுக்கியும் ஊர்ந்து கொண்டிருந்தது. இன்னும் அரை மணிநேரம் பயணம் மீதியிருந்தது. என்ன செய்வது? யோசித்து "தினமுரசை" விரித்தேன். அட்டை வண்ணத்தாலும் படங்களாலும் கவரப்பட்ட பக்கத்து இருக்கை சகோதர மொழி பெண் பத்திரிகையை நோட்டம் விட்டார். என்னையும் தான்.

"காதிலை பூ கந்தசாமியை" வாசித்து 'பக்' கென புறப்பட்ட சிரிப்பை அடக்க மாட்டாது தவித்து தடுமாறி சிரித்து வைத்தேன். பஸ்ஸின் என் இருக்கைக்கருகில் நின்றிருந்தவர்களும் என்னை நோட்டமிட சிரிப்பை சமாளித்து தடுத்து வைத்தேன். எப்படித்தான் இந்த 'காதிலை பூ' இத்தனை நகைச்சுவையை எழுதுகிறதோ? யோசித்தேன்.

சாரலாக விழுந்த மழை தூறலாகி பின் 'ஹோ'வென பெய்யத் தொடங்கிவிட்டது. குடையை எடுத்தேனா? ஒரு தரம் பார்த்துக் கொண்டேன்.

சகதியும் சேறும் நிறைந்து குளம் போலான இடத்தில் பஸ்ஸை நிறுத்திய சாரதியை சபித்துக் கொண்டே இறங்கினேன். பெரியம்மாவின் வீட்டையடைந்து வாசல் மணியை அழுத்த வந்து திறந்தவனைக் கண்டு வியந்தேன்.

யாரிது? கையில் தும்புத்தடியும் மறு கையில் தூசு தட்டும் குஞ்சமுமாக. தும்புத்தடி அவனை விட உயரம். கிழிந்த நீல நிற ஷோர்ட்டும் கறுப்பு கட்டை கழுசானுமாக. கன்னங் கரேல் நிறம். புன்னகைத்து "வாங்க" சொன்ன போது பளீரென்ற பல் வரிசை.

"யாரிது பெரியம்மா?" முதலாவதாக என் வாயிலிருந்து வந்த வார்த்தைகள்.

பெரியம்மா சற்று நேரம் என்னை வியப்பாய் பார்த்தார். "இது நான் புதுசா எடுத்த 'சேர்வன்ட்போய்'... நல்ல பொடியன் எல்லா வேலையும் நல்லா துறுதுறுன்னு ஓடியோடி செய்வான்." அவன் முகத்தல் அலாதியானதோர் கவர்ச்சி. அதையும் மீறிய ஏதோவோர் உணர்ச்சி. "ஓ... அவனுக்கு எத்தன வயசிருக்கும் சொல்லுங்க..?" நான். "ஏண்டியம்மா ஒனக்கு இதெல்லாம்? ஒரு பத்து பதினொண்டு இருக்கலாம். வா... வந்து முகம் கழுவிட்டு வா சாப்பிடலாம்." கனிவோடு அழைத்த பெரியம்மாவைப் பார்த்தேன். சாப்பிட பீங்கான் கழுவி மேசை ஒழுங்குபடுத்தினான்.



என் வீட்டிலுள்ள கடைக்குட்டி தம்பியை நினைவுக்குள் கொண்டு வந்தேன். இவன் வயது தான் அவனுக்கும். பாவம் பாடசாலை போய் படிக்க வேண்டிய வயதில் இவன் இங்கு. இப்படி. மனம் நொந்தது. அவன் இன்னும் பாதியில் விட்டுவிட்ட கதிரைகளைத் தூசு தட்டியபடி துடைத்து கூட்டிக் கொண்டிருந்தான். பெரியம்மா சொன்னது சரிதான். மரக்கறி வெட்டுவது முதல் சில சமயங்களில் தேனீர் ஊற்றுவது வரை வேலைகள். குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரினதும் கட்டளைப் பணிகள் வேறாக. அதைத் தேடு. இதை எடுத்துத்தா. கொஞ்சம் கழுவிப் போடு. அயர்ண் பண்ணி தாவேன்' என ஓயாத வேலை. அவன் பேர் 'சிவு' என்றார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து தனியே அவன் சமையலறையில் அடுப்பு மூட்டும் போது கேட்டேன்: "ஏன் சிவு, உனக்கு வீட்டுக்குப்போய், ஸ்கூல் போய் படிக்கிற வயசில்லையா? ஏன் வேலைக்குவந்தே? இது கஷ்டமாயில்ல? படிக்கணும்னு ஆசையாயில்லையா?"

சிவு பளீரென பற்கள் காட்டி சிரித்தான். கண்கள் மின்னின. "போங்க நோனா! வீட்ல எனக்குப் பொறவு ஆறு பிள்ளைகள். அப்பாக்கு தீராத நோய் வருத்தம். அம்மா தான் ஒரு வீட்ல வேலை செய்ஞ்சு ஏதோ சம்பாதிச்சு... சாப்பிடுவோம். எந்தா நாளும் பசிதான். அரை வயிரோடு எப்படி நோனா படிக்கிறது? ஸ்கூலு போறது? அதெல்லாம் நமக்கு சரிபட்டு வராது. அதான் நான் இங்க வந்துட்டேன். சாப்பாடும் கெடக்கிது. சல்லியும் தாராங்க. இந்த வேலை ஒண்ணும் கஷ்டமில்ல பழகிடுச்சு." வயதுக்கு மீறிய வார்த்தைகள் என்னால் பேசமுடியவில்லை.

**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி**

www.padippakam.com

# மனதில் ஒரு பிரசவம்

முத்து

> "இன்னைக்கு எப்படியும் டெலிவரி ஆகிடும்னு டாக்டரம்மா சொல்றாங்க. இப்பவாவது உன் கணவரோட பேசக்கூடாதா?"

காலையிலிருந்தே மகேஸ்வரியின் மனம் சரியாக இல்லை. கலங்கிய சாக்கடை நீராக, மனம் குழம்ப அவளது கண்கள் சுவர்க் கடிகாரத்தில் நிலைகுற்றி நின்றது. ஒன்று மட்டும் நிச்சயம். தன் பிடிவாதக்கார அப்பா, எப்படியாவது நிச்சயம் இன்றைக்கு நிச்சயதார்த்தத்தை நடத்திவிடுவார்.

பிடிக்காத மாப்பிள்ளை. வயது இருபத்தாறு. இவளோடு படித்தவர்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்து விட்டது. ஆனால் மகேஸ்வரிக்கு மட்டும் ஏனோ திருமணம் பிடிக்கவில்லை.

'சே' தன்னையே பிதற்றிக் கொண்டிருந்தாள் மகேஸ்வரி. அந்த ஒரு விஷயம்

காரு. உனக்கு ஈவினிங் நிச்சயதார்த்தம்ல. டல்லா இருக்கே?"

"அத சொல்லு- டல்லுன்னா டல்லு அவ்வளவு டல்லுடி. எனக்கு கல்யாணம் பிடிக்கலைடி."

"அடிப்பாவி! ஏன்? என்னாச்சு? இந்த கோப்பியை குடி."

போலியாக டம்ளரை வாங்கிக் கொண்டாள் மகேஸ்வரி.

"எதுக்குடி பிடிக்கல?"

"வனஜா! உன்கிட்ட சொல்றதுக்கு என்ன? எனக்கு கல்யாணம் பிடிக்கும் டீ ஆனா, ஆனா-"

"என்ன..... சொல்லு. என்ன தயக்கம்?"

"யாருக்கிட்டேயும் சொல்ல முடியாம



தாறுமாறாக மகேஸ்வரியின் இதயத்தை பாதித்துவிட்டது. ஒன்றுமில்லை.

முதலிரவு விஷயம்தான்.

முடிவு காண வேண்டும் என்ற எண்ணத்திற்கு முடிவு கட்டியவள், விருட்டென்று சேலையை மாற்றிக் கொண்டு தோழி வனஜா வீட்டிற்குச் சென்றாள் மகேஸ்வரி.

"ஹாய்! மகேஸ் வா-வா" வனஜா வரவேற்றாள்.

"உன் வீட்டுக்காரர் இல்ல?"

"இல்ல. அவரு ஆபிசுக்கு போயிருக்

தவிக்கிறேன்டி. எனக்கு இருபத்தாறு வயசு ஆச்சாம். இப்ப பாத்துருக்கிறது நல்ல வரனாம். என்ன பிடிச்சி கிணத்துல தள்ளப் போறாங்க."

"என்னடி சம்பந்தமில்லாம உளர்ற?"

"எனக்கு கல்யாணம் பிடிக்குதடி. ஆனால், முதலிரவு பிடிக்கல."

அந்த ஹோலே அதிரும்படி- 'ஹ ஹா-ஹா'சிரித்தாள் வனஜா.

" அடி மடச்சி! இதுக்கா இப்படிப் போயி அலட்டிக்கிற? முதலிரவுங்கிறது முதல்ல பயமாத்தான் இருக்கும். எனக்கும் அப்படித்தான் இருந்தது. போகப் போக

எல்லாம் சரியாப் போயிடுச்சி."

"சீ...! எனக்குத் தெரியும். ஆனால்...!"

"என்ன ஆனா, ஆவன்னா- கல்யாணம்னா அது இல்லாமலா இருக்கும்? எல்லாம் போகப் போக சரியாப் போயிடும். போடி, சீக்கிரம் குளிச்சி, முழுகி ட்ரஸ் பண்ணு. மணி நாலாகப் போகுது. நீ, முன்னால போ, கரெக்ரா ஃபங்ஷன்ல வந்து அட்டன்ட் பண்ணிக்கிறேன்."

தெம்பற்றவளாக வீதியில் நடந்து சென்றாள் மகேஸ்வரி.

'அப்பாகிட்ட எப்படி எடுத்து சொல்றது? அம்மான்னு ஒருத்தி இருந்திருந்தா அவகிட்ட சொல்லியாவது இந்த கல்யாணத்த தடுத்துப்புடலாம்.'

பல கேள்விகளை அவளே கிளப்பி மனதில் விடையளித்தபடி வீடு வந்து சேர்ந்தாள். அப்பா தனியாக ஹாலில் உட்கார்ந்திருந்தார்.

"எங்கம்மா போயிட்டு வர்ற?"

"என் ப்ரண்ட் வீட்டுக்கப்பா."

"இன்னைக்கு உனக்கு நிச்சயதார்த்தம்னு தெரியாது? பக்கத்து வீட்டு அக்கா, எதிர் வீட்டு அக்கா, எல்லாரும் கேட்டுப்புட்டு இப்பதான் போனாங்க. சரி-சரி சீக்கிரம் போயி அலங்காரம் பண்ணிக்க. அவுங்களெல்லாம் இப்ப வந்துடுவாங்க."

அம்மாவை இளம் வயதிலேயே இழந்த மகேஸ்வரிக்கு அப்பாதான் எல்லாம். ஒரே செல்வ மகள் அல்லவா மகேஸ்வரி?

நிச்சயம் முடிந்தது. திருமணம் முடிந்தது. இப்பொழுது மகேஸ்வரி தாயாகப் போகிறாள்.

இன்று அவளுக்கு முதல் பிரசவம்.

மகேஸ்வரி மனதிற்குள் 'கும் இருட்டு. முதலிரவுக்குப் பயந்தவள், முதல் பிரசவத்திற்கு பயப்படாமலா இருப்பாள்?

முதலிரவிலிருந்தே அருவருப்பாக கணவனைப் பார்த்து வந்த மகேஸ்வரி, 'இந்தக்

குழந்தை பிறக்கட்டும், இனி எந்தக் காலத்திலும் கணவனோடு இணையக் கூடாது. அவன் ஆசைக்கு இணங்கக் கூடாது' என்ற முடிவுக்கு வந்தவளாய் ஆஸ்பத்திரி படுக்கையில் கிடந்தாள்.

வனஜா வர, தலைமாட்டில் அமர்ந்திருந்த பிரசாத் ஸ்டூலை விட்டு எழுந்தான்.

"பரவாயில்லை. நீங்க உட்காருங்க."

வனஜா, மகேஸ்வரியின் தலைமாட்டில் அருகில் சென்று-

"இன்னைக்கு எப்படியும் டெலிவரி ஆகிடும்னு டாக்டரம்மா சொல்லியிருக்காங்க. ஒண்ணும் பயப்படாதே.. உன் புருஷன்கிட்ட இப்பகூட பேசக் கூடாதா? பாவம் அவரப் பாரு; வெளியில போயி நிக்கிறாரு. முகத்துல கொஞ்சம் கூட கலகலப்ப காணோம்."

"போனா போவட்டும். அந்த மனுஷனாலத்தான் இப்ப எனக்கு இந்த வேதனை. எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். விடலயே என்ன." சலித்துக் கொண்டாள் மகேஸ்வரி.

"மகேஸ், நீ கொடுத்து வச்சவ. எத்தனையோ மிருகங்ககிட்ட நம்ம மாதிரி பெண்கள் கஷ்டப்படுறாங்க."

மகேஸ்வரியின் காதருகில் மெல்ல பேச ஆரம்பித்தாள், வனஜா "அவ்வளவு தூரம் ஏண்டி போகணும்? என் புருஷனே என் விருப்பத்த கேட்கமாட்டாரு. ஒரு நாள் கூட நான் இல்லாம அவரு தூங்கமாட்டாரு. எனக்கு உடம்பு வலிக்குதுன்னு சொன்னாலும் அந்த மனுஷன் என்னை விட மாட்டார். இன்னிக்கி நான் அந்த மனுஷனோட சகஜமா குடும்பம் நடத்தல?"

எவ்வளவு சொல்லியும் மகேஸ்வரி மசிவதாக இல்லை.

"அப்புறம் உன் தலையெழுத்துத்தான். நான் போயிட்டு வர்றேன்."

வனஜா கிளம்பியவுடன் பிரசாத் மெல்ல பூனையாக மகேஸ்வரியின் அருகில் வந்தான்.

"என்ன வேணும்?"

"ஒரு மண்ணாங்கட்டியும்... ஆ..ஆ.." கணவனை திட்ட ஆரம்பித்தவளுக்கு பிரசவ வலி. வேதனையில் துடித்தாள் மகேஸ்வரி. அறைக்கு வெளியே பிரசாத்.

'அம்மா..! அம்ம்..ம்..மா'. ரூமுக்குள்ளிருந்து அலறல் பெரிதாகப் பெரிதாக பிரசாத்துக்கு கண்ணீரே வந்துவிட்டது.

'சே! மகேஸ்கிட்ட இனிமே எந்த தொடர்பும் வச்சுக்கக் கூடாது.' மௌனமாக மனதிற்குள் அழுதான் - பிரசாத்.

"வீல்...ல்." கடைசி அலறல் அறையிலிருந்து; அதன் பிறகு எந்தச் சப்தமுமில்லை.

அறையின் கதவு திறக்கப்பட்டது. "டாக்டர்!" கூறியவாறே டாக்டர் பின் சென்றான் பிரசாத்.

"ஸாரி சார்! குழந்தை இறந்தே பிறந்திடுச்சி. உங்க மனைவியை மட்டும்தான் காப்பாற்ற முடிஞ்சுது."

சில நிமிடங்களில் அறைக்குள் சென்றான். குழந்தை இறந்து பிறந்ததை அறிந்து கொண்ட மகேஸ்வரி அமைதியாக படுத்திருந்தாள். அவள் முகத்தைப் பார்க்கவே பிராசத்துக்கு திராணியில்லை.

"ஏங்க, ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க?"

பிரசாத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் மனைவியா நம்மிடம் இவ்வளவு பிரியமாக பேசுகிறாள்.

அருகில் சென்றான் பிரசாத்.

"என்ன மனிச்சிடு மகேஸ்."

"எதுக்கு?"

"என்னாலதானே உனக்கு இவ்வளவு வேதனை?"

வனஜாவும் அறைக்குள் வந்து விட்டாள்.

"போனா போவுது விடுடி. அழாத" வனஜா மகேஸ்வரியை தேற்றினாள்.

"நான், என் குழந்தைக்காக அழல; என் புருஷனுக்காக அழறேன்."

"என்னடியம்மா திடீர் அக்கற?"

பிரசாத் சந்தோஷத்தின் எல்லைக்கே போய்விட்டான்.

★ ★ ★ ☆

"**வா!** மகேஸ்!"

வனஜா வரவேற்றாள்.

"ஏண்டி மகேஸ். உன் கணவர்கிட்ட பாம்பாட்டம் சீறி விழுந்தே! இன்னைக்கு உசுரயே விடுறே?"

"வனஜா! உனக்கு, எனக்கு முன்னாலயே கல்யாணம் ஆயிடுச்சு. ஆனால் குழந்தை பாக்யம் உனக்கு இல்ல. நம் தாய்மை உணர்ச்சியே அந்த பிரசவ வலியில தாண்டி இருக்கு. அந்த வலிதான் என் புருஷன் மேல எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையையும், பாசத்தையும் வளத்துருச்சி."

இலேசாக சிரித்தாள் மகேஸ்வரி.

"எப்படியோ, உன் புருஷனோட சண்டையில்லாமல் சந்தோஷமா இருந்தா சரி."

"சண்டையா? எனக்கும், அவருக்கும் தினம் தினம் முதலிரவுதான். இப்ப நான் நாலு மாசம்."

தாய்மையின் மகத்துவத்தை உணர்ந்து கொண்ட மகேஸ்வரி சந்தோஷமாகச் சிரித்தாள்.

---

# தொலைந்து போனவர்கள்

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

'**எ**ப்ப காகிதம் வருமோ' லண்டனிலும் அமெரிக்காவிலும் இருக்கின்ற பிள்ளைகளின் நினைவோடு திண்ணையில் சாய்ந்தேன். பூநூல் வியர்வையில் பிசுபிசுத்து உறுத்தியது. அங்க வஸ்திரமில்லாத வெற்றுடம்பில் வியர்வை கொட்ட எரிச்சலும் சினமும் ஒருங்கே குபீரிட்டன. திதி வீட்டுக்குப் போய் வந்த களைப்பு வேறு. கையிலிருந்த தருப்பைக் கட்டைத் தாழ்வார இறப்பில் செருகிவிட்டு செம்புத் தண்ணீர் பருகினேன். நாற்பது வருஷங்களாக பூசை புனஸ்காரமென ஓய்ந்து போன சரீரம். புரோகித வருமானமே இல்லாமல் காலங்கெட்டுப் போக மனசும் உடலும் தளர்ந்து போனது உண்மை.

ஷெல் வீச்சில் குடிமனை அழிந்து போய், கோயில் பிரகாரம் பாதுகாப்பு வலயத்துள் சிறைப்பட்டாலும் இந்த சந்நிதானத்தைவிட்டு என்னால் அகல முடியவில்லை. இந்த மண்ணைவிட்டு வெளியேறுவதில் உடன்பாடில்லை.

திவசப்பட்டோலைக் கொப்பி புரட்டிமேய, வாசலில் சைக்கிள் மணியோசை. "குருக்களய்யா..! நாளைக்கு வவுனியாக்கு வரட்டாம். உங்கடை மோன் பரமேசுவரக் குருக்கள் லண்டன்லையிருந்து வந்து நிக்கிறாராம். வேளைக்குப் போங்கோ... பேத்தீன்ர கலியாணம் பார்க்க அமெரிக்கா

பறக்கப் போறியள். பேந்தென்ன...?" எனக்குப் பெரும் குழப்பம். 'மகன் என்னைக் கூட்டிப்போக வந்திருக்கிறானோ...? ஐயப்பா நானெப்பிடி உதை விட்டுக் கிளம்புறது... பெடியள் பெமிஷன் தருவாங்களோ... தந்தாலும் நான் அமெரிக்கா போய் என்னெண்டு சமாளிப்பன். பேரப்பிள்ளையளோட என்ன பாஷையில பேசுறது; சாடைமாடையாய் இங்கிலீஸ் விளங்கும்... பேச வராதே. குடுமிக்கட்டும் வெற்றுமார்புமாய்ப் போனால் நையாண்டி பண்ணுங்களே! கதிகலங்கிப் போனேன்.

வவுனியா பஸ் தரிப்புக்கு முன்னால் இருக்கும் சிவாவின் புத்தகக் கடைக்குள் அமர்ந்து கொண்டு பஞ்சாங்கம் புரட்டுவதும் வீதியைப்பார்ப்பதுமாக இருக்கிறேன். 'பரமன் எப்பிடியிருப்பானோ.. எத்தினை மணிக்கு வருவானோ..' சிந்தனையோடு காத்திருந்தேன்.

வெள்ளை வேன்-கறுப்புக் கண்ணாடி பதியக் கிறீச்சிட்டு நின்றது "ஐயா" என்றொரு குரல் வந்தது. என்னால் ஆளடையாளம் காண முடியவில்லை "ஆரப்பு.... சிவா... வேனிலையிருந்து பார்க்கிறான்?" சிவா சிரிசிரியென்று சிரித்தான். "குருக்களய்யா உங்கடை மோன் பரமேசுவரன் அண்ணை நல்லா உருமாறிப்போட்டார்"

"என்னது? என்ரை பரமுவோ...? சிவசிவா எங்கயப்பா குருக்கள் லெட்சணம் உதென்ன கன்றாவி!"

"ஐயோவ்.. ஏனய்யா பிரமிச்சுப் போனாய்" பாய்ந்து வந்து இறுகத்தழுவினான். வேஷ்டித் துண்டும், பூநூலும் குடுமியுமாய் வலம் வந்த என்ரை மகனோ இது...? வெள்ளைக் காரத் துரைபோல கோட்டுச் சூட்டு, சாப்பாத்து, கூலிங்கிளாஸுமாய் ஐயப்பா இதென்ன காட்சி, மனதுக்குள் புலம்பினேன்.

"எப்பிடியப்பா •சுகபெலம், தனியாக் கிடந்து கஷ்டப்படவேணுமெண்ட தலைவிதியே? என்ரை பிள்ளைக்கு வாறமாசம் கலியாணம் செய்ய வேணும். அதுதான் வந்தனான்; உங்களைக் கூட்டியொண்டு

> **உங்களுக்கு இங்கிலீஸ் தெரியாது. எங்களுக்கு தமிழ் தெரியாது. எப்படிப்பேசுறது?**
>
> —பேரக்குழந்தைகள்—

போக. தொடர்ந்து இருக்காட்டாலும் ஆறு மாசமாவது லண்டன்லயும் அமெரிக்காவிலயும் நிண்டு.. பிள்ளையளோட சந்தோஷமாய் இருந்து கொண்டு வாங்கோ."

சிவாவிடம் விடைபெற்று கொழும்பு போய் லண்டனில்- இறங்கினேன். புதுமையான அனுபவம்.

இதமான சீதோஷ்ணம். டலஸ் விமான நிலையம் பரபரப்பாய் இருந்தது. "ஐயா இனி நாங்கள் எல்பாஸோ போகும் பிளேனில் ஏறவேண்டும்" என்றான் பரமு. விமானப் பயணம் எனது முதலாவது அனுபவம். எல்பாஸோ விமான நிலையம் ஜொலித்துக் கொண்டிருந்தது. ராமேசுவரன் கார் கொண்டு வந்திருந்தான். அவனும் உருமாறிப் போனான்.

"ஐயா எப்பிடியய்யா ஊர் நிலவரம்" என்று என்னைத் துளைத்தெடுத்தான்.

நான் மௌனித்தேன். அந்நியனாகிவிட்ட உணர்வு.

கார் வேகமெடுத்தது. ஆறு ஏழு வாகனம் சமாந்தரமாய் செல்லும் விஸ்தீரபாதை..

நியூ மெக்சிக்கோ என்ற பதாதை பளிச்சிட்டது. லொஸ்குறூசெஸ் ற்ரவுண் வந்தடைந்து ஷாடோ மௌண்ரென் வீதி வழியாக அந்த மாடி மனையில் இறக்கப்பட்டேன்.

பேரப்பிள்ளைகளைப் பார்க்கும் பேரார்வத்தில் உஷாரானேன்-திகீர் என்றது. பெருந்தொடை தெரியும் களிசானும் கையில்லாத பொடியுமாய் ஒரு இளம்பெண் வெளியே வந்து 'கிராண்ட் ஃபாதர்' என்று ப்ளொச் என்று என் கன்னத்தில் முத்தமிட்டாள்.



மெழுகுப் பொம்மைகளாய் குழந்தைகள் சூழ்ந்து கொண்டு என்னை முத்தமிட்டார்கள். என்னோடு பேசுவதற்கு தமிழ் தெரியாமல் சைகைப் பாஷையில் அவஸ்த்தைப்பட்டார்கள்-கதிகலங்கிப் போனேன்.

பூ நூலும் புரோகிதமுமாய் திரிந்த இந்த வைத்தீஸ்வரக் குருக்களுடைய வாரிசுகளா இவர்கள்?

என் மக்களைப் பார்த்தேன். அவர்கள் நியாயம் சொன்னார்கள் "ஐயா இது தவிர்க்க முடியாது... றெட்டைச் சூழல்.... அதோட பாரம்பரிய இடைவெளி, சூழல், பாடசாலைப் பாதிப்பு, பொருளாதாரச் சுதந்திரம், அரச உதவிச் சேவைகள் இதுகளால பிள்ளையள் இந்த நாட்டுக்கு இசைவாய் இந்த நாட்டுக் கலாசாரங்களோட தான் வளருதுகள். என்ன செய்யுறது நாங்கள். வந்து சேர்ந்திட்டம் ஒத்துப்போறது தவிர வேற மார்க்கமில்ல."

என்னுள் வேதனைச் சுமை.

"ஏய் கிரான்ஃபா! உங்களுக்கு இங்கிலீஸ் தெரியாது. எங்களுக்கு தமிழ் தெரியாது எப்பிடி பேசுறது..?" என்று வினாவினார்கள். "ஏன் இந்த லுங்கி கட்டுறது ஜீன்ஸ் போடாமல்? சே... சிறீலங்கா கள்ச்சர் நல்ல மில்ல" என்றெல்லாம் ஏதேதோ உளறினார்கள். வெள்ளைக்கார விடலைகளோடு சகஜமாய் நெருங்கிப் பழகினார்கள். நான் வேதனையானேன்.

பிரம்மச்சாரியாய் வாழ்ந்து விட்ட பிரமை. வழித்தோன்றல்களில்லாத மலடனாய்ப் போன உணர்வு. ஆங்கில நாடுகளில் தொலைந்து போனவர்களாக என் உயிரணுக்கள் போன வேதனை நெஞ்சை நிறைத்தது. பாலும் பன்னீரும் அபிஷேகமும் பெருக்கெடுத்தோடிய கோமுகை இப்போது ஊரில் வற்றிக்கிடப்பதுபோல என் மனமும் உணர்வுகளும் வறண்டு போயின. 'பூர்வ பாவப்பலன் தான் நாங்கள் அனுபவிக்கிறது' என்று தேறிக்கொண்டேன்.

ஊர் திரும்பும் நாளை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றேன்.

---

# மீண்டும் ஒரு 'திக்!'

**ப**ல்கனியில் படித்துக் கொண்டிருந்த உமாவிற்கு கோப்பி கொண்டு போன ரங்கநாயகி அதிர்ந்தாள்.

அங்கே அவள் மகள் உமா கெமிஸ்ட்ரி கொப்பியை கையில் பிடித்தபடியே, எதிர் வீட்டு மொட்டை மாடியில் எக்ஸர்சைஸ் செய்யும் அந்த இளஞனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனும் இவளைப் பார்த்தபடியே உற்சாகமாய் உடற்பயிற்சி செய்தான். ரங்கநாயகிக்குத் திக்கென்றது.

அவளுக்குக் கண்டிக்கும் வயதல்ல. ரங்கநாயகி ஒரு முடிவுக்கு வந்தாள். நாம் தான் சூழ்நிலையை மாற்ற வேண்டும். இன்று கணவர் வந்தவுடன் பேசி வேறு வீடு பார்க்க ஏற்பாடு செய்தாள்.

புது வீடு மாறி ஒரு வாரம் கழித்து ரங்கநாயகியும், உமாவும் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பிய போது வீட்டினுள் பக்கத்து வீட்டுப் பெண்ணின் மெல்லிய பேச்சு. காதுக்கு உன்னிப்புக் கொடுத்தாள் ரங்கநாயகி. அவள் குரல் புரியவில்லை.



நாகேந்திரராஜா

ஆனால் இவளது கணவர் பேசியது தெளிவாகப் புரிந்தது.

"உங்களுக்கு நாற்பது வயசுங்கிறத நம்பவே முடியலை!"

ரங்கநாயகிக்கு மீண்டும் திக்கென்றது.


படிப்பகம்

www.padippakam.com

# மாலையில் மலரும்

பஞ்சணையில் குப்புறக் கவிழ்ந்து
நெஞ்சுக்குள் இருந்த நினைவுகளை
கொஞ்சு மொழியாள் கோர்த்துக்கொண்டிருந்தாள்.

எப்படி மடல் எழுதுவதாம்.
செப்படி வித்தையா மடல் வரைவது?
எழுதி எழுதிக் கிழித்துப் போட்டாள்.
எல்லாம் குப்பையாய் ஓரத்தில் கிடந்தது!

கோர்த்துக்கொண்ட நினைவுகளை
எழுத்தில் வார்க்க முடியவில்லையே!
தவறாகி விடும் என்று
மனது தகராறு செய்கிறதே!

நெஞ்சுக்குள் செருகியிருந்தது
நேற்று அவன் அனுப்பிய மடல்.
இன்றுவரை படித்தது நூறுமுறை.
விரித்து, விரித்து
விழிகளால் மேய்ந்தே
மடல் தேய்ந்து கிடந்தது.

நேரடியாகவே ஆரம்பித்திருந்தான்.
"கள்ளி! திருடிய என் உயிர் நிலவரம்
எப்படியிருக்கிறது என்று தெரிவி!
என் உடல் உன் உயிரால்
இயக்கப்படுவதும் சுகமாக உள்ளது!

இலையுதிர்காலம் இங்கே ஆரம்பம்.
உன் நினைவுகள் மட்டும் உதிரவில்லை.
நேற்று இரவும் நீ வந்தாய்.
காற்று தழுவியபோது அப்படி உணர்வு!

குளிரும், மெல்லிய சூடும்
இரண்டறக் கலந்த இனிய காற்று!
உன்னை என்னில் அணிந்தபோதும்
அப்படித்தானே இருந்தது!
ஒரு வித்தியாசம் நீ உயிர்க்காற்று!

என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
நகம் கடித்துக் கொண்டிருக்கிறாயா?
நிறுத்து! விரல்களுக்கு வலிக்கும்!
வீணைக் கச்சேரிக்கு விரல்கள் வேண்டும்!

எப்போது வருவீர்கள்?
வழக்கமான கேள்வி வருகிறதா?
எப்போதும் நான் வரக்கூடும்.
நினைவுகளை புசித்தாலும் போதவில்லை.
தினமும் நான் பசித்திருக்கிறேன்

கனிகளோடு தேனுண்டு பசியாறவேண்டும்.
கண்ணோடு கண்நோக்க களிப்பாக வேண்டும்.
காலோடு கால் பின்ன இளைப்பாற வேண்டும்.
தோளோடு தோள்சேர களைப்பாற வேண்டும்.

என்னமாய் எழுதியிருக்கிறார்?
வெட்கம் வந்து முகம் தொட்டது.
பக்கத்தில்தான் யாரும் இல்லையே
வெட்கத்துக்கு வேறு வேலை இல்லையா?

பதிலுக்கு பதிலாக ஒரு மடல்.
எழுத நினைத்து எத்தனை முயற்சி.
சரியாக வரவில்லையே என்று
துக்கத்தில் கிழித்தது பாதி.
வெகுவாக எழுதிவிட்டேனோ என்று
வெட்கத்தில் கிழித்தது மீதி.

காதல், காமம், கடிதம்
மூன்றுக்கும் ஒரு பொதுவிதி.



ஆரம்பிப்பதில்தான் அவஸ்தை வரும்.
எப்படி ஆரம்பிப்பது என்ற அவஸ்தை!

ஆரம்பித்துவிட்டால் போதும்.
வெள்ளம் மடை உடைக்கும்.
உள்ளம் உல்லாச படை நடத்தும்!
ஆரம்பிக்க வேண்டும்! எப்படி?

கண்ணில் பட்டது திருக்குறள் ஏடு.
விண்ணில் உள்ள நிலா வசப்பட்டதுபோல
கண்ணில்கூட சந்தோசப் பூ
கரத்தில் எடுத்துப் புரட்டினாள்.

குறள் இருக்கப் பயமேன்?
மடல் எழுத ஆரம்பித்தாள்.

திருடா. திருடா!
திருஷ்டி சுற்றிப் போடவேண்டும்.
உயிரைத் துருவும் மடல் வரைய
என்னுயிரே எங்கே கற்றாய்?

காற்றாக நான் வந்தேன் என்று
கூத்தாடும் வழக்கம் ஒழிக!
காற்றோடு போய்க்கொண்டிருக்கிறது
வருவேன் விரைவில் என்ற வாக்குறுதி!
நேற்றோடு எத்தனை நாள்?
கூற்றோடு விசுவாசம் வேண்டாமா?

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?
காற்றும்-குளிரும்- நான்-நீ ஆகுமா?
நேரில் வரத் தாமதத்துக்கு
சுற்றிவளைத்து பொய்கள் தேவையா?

எனக்கு மட்டும் ஆசையில்லையா?
கணக்குப் பார்த்து விரல்கள் மாயுது.
பிரிந்த நாட்கள் கண்ணீரில் கரையுது.
திரிந்த பாலாக உடலும் கெட்டது.

விரிந்த உன் மார்பில்
விழி மூடிக் கிடப்பது எந்நாள்?
மார்பும் மார்பும் அழுந்திக் கொள்ள
வானும் நிலவுமாய் ஒட்டிக் கிடப்பது
எந்நாள் என்று நெஞ்சு துடிக்குது!

மயக்கும் மாலையும், சிரிக்கும் நிலவும்
நீயின்றி வரும் போது சகிக்கவேயில்லை!
தேனும் தினைமாவும் கலந்து உண்டாலும்
நீயின்றி உணவும் செரிப்பதேயில்லை!

வெட்கத்தை உதறிப் போட்டுவிட்டு
துக்கத்தை சொல்கிறேன் கேளும்!
பக்கத்தில் நீர் இருப்பதாய் நினைத்து
பற்றித் தழுவினேன், அசைவேயில்லை.
விழிகளைத் திறந்தால் அருகே தலையணை!

இச் முத்தம் ஒன்று கொடுத்தேன்
இனிக்கவேயில்லை. விழித்துக் கொண்டேன்.
கனவில் வந்து வாங்கிப் போனீரோ?
இனிக்குமா கனவு. நேரில்தான் இனிக்கும்!

முரசறையும் ஒலி கேட்பதுபோல
நெஞ்சு துடிப்பது சிந்தைக்கு கேட்கிறது.
இதயத் துடிப்பாய் இருப்பதும் நீர்தான்!
இயமனைப் போல வதைப்பதும் நீர்தான்!

நினைத்துப் பார்க்கிறேன்
எப்படி நான் பிழைத்திருக்கிறேன்?

பிரிவென்னும் கடலை
எப்படித் தாண்டி கரையில் கிடக்கிறேன்?
பிழைத்தது பேராச்சரியம்.



## இலக்கிய நயம்

நீயில்லா ஊரில் நான் இருப்பது
கோவிலில்லா ஊரில் குடியிருப்பது மாதிரி!

உன் அணைப்பில்லாமல்
நான் மட்டும் தனித்திருப்பது
ஆலையில் சிக்கிய கரும்புபோல!
பிழியப்படுகிறது வாழ்க்கை!

அஞ்சவேண்டாம். மாயமாட்டேன்
என்று சொல்ல ஆசைதான்.
கொலைவாளாய் நீண்ட
பிரிவைக்கூட தாங்கிநின்றேன்.
இன்னொரு எதிரியிடம்
எப்படித் தப்புவேன்?

யாரந்த எதிரி?
உறையில் இருந்து
உருவாதே வாளை!

ஆசை என்ற நோய்;
காமம் என்ற இனிய தீ!
நாள் ஒரு வண்ணமும்
பொழுதொரு மேனியுமாய்
வளர்ந்து வளர்ந்து மாய்க்கிறதே!

அதனை விபரிக்க வார்த்தையில்லை.
திருவள்ளுவரிடம் இருந்து
வெகுமதியாக வாங்கிக் கொண்டேன்.

"காலையில் அரும்பாக உருவெடுத்து,
பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் வளர்ந்து
மாலைப் பொழுதில் மலராகின்றது"
வாழ்க வள்ளுவர். எத்தனை உண்மை!

மலர் இங்கே!
வண்டு வருவதெப்போது"
எழுதி முடித்தபோது கைவலித்தது. மனது இனித்தது.

*"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி*
*மாலை மலரும்இந் நோய்"*

அதிகாரம்:- 123. பாடல்:- 1227

## தருவது ரசிகன்

*திருமணம். ஒரு திருமணம் அதைக் குணப்படுத்த முடியவில்லையென்றால், வேறு எதனாலும் அதைக் குணப்படுத்த முடியாது. எனவே நீ மணம் புரிந்துகொள். பின் என்றுமே நீ காதலிக்க விரும்பமாட்டாய்."*

பின்குறிப்பு:- சிந்தியாவாகிய நான், இது என் சொந்தக் கருத்தல்ல என்பதை இத்தால் அறியத் தருகிறேன்..

★ வறுமை, பெருமை, பொறாமை, இம் மூன்றில் பொல்லாதது எது?

கே. புவனலோஜினி, இறக்குவானை.

*பொறாமை! அடுத்தவர்களைப் பார்த்து பொறாமைப்படுகிறவர்களுக்கு வறுமையில் இருந்து மீள வழி தெரியாது. பொறாமை பெருமையைப் பெறாமையுமாக்கும்.*

★ பொறுமை வேண்டும். பொறுத்தார் அரசாள்வார் என்று அடிக்கடி சொல்கிறார்களே. பொறுமையின் எல்லை எது?

செல்வி ஜெ. மகேஸ்வரி, கண்டி.

*ஒரு துறவியும் சீடனும் அமர்ந்திருந்தார்கள். சீடனுக்கு துறவியை பரிசோதித்து பார்க்க ஆசை வந்தது.*

*அவரது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்:*

*உண்மையான அந்தத் துறவி மறு கன்னத்தையும் காட்டினார்.*

*சீடன் தனது பலம் அனைத்தையும் திரட்டி மறு கன்னத்திலும் அறைந்தான்.*

*உடனே துறவி அவனைப் பாய்ந்து பிடித்து புரட்டி எடுக்கத் தொடங்கிவிட்டார்..*

*அலறியபடி அவன் கேட்டான்:*

*"நீங்கள் என்ன செய்கிறீர்கள் குருவே? காலையில்தான் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று உபதேசம் செய்தீர்கள்?"*

*துறவி சொன்னார்:*

*"ஆம்! ஆனால் எனக்கு மூன்றாவது கன்னம் இல்லையே! ஏசு மறு கன்னத்தைக் காட்டு என்பதுடன் நிறுத்திவிட்டார். அதற்குப் பிறகு நான் விரும்பியதைச் செய்து கொள்ளலாம்."*

★ 'யால'வனவிலங்கு சரணாலயத்தில் புலிகள் வந்துவிட்டதாக அறிந்தேன்? உங்கள் கருத்து யாது?

எஸ்.எஸ். டெமிசி, கலவானை.

*வரவேண்டிய இடம்தானே!*

★ கலைஞர் கருணாநிதியும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாபோல ஒரு திருமணம் நடத்தினால்?

எஸ். பத்மப்பிரியா, ராக்ஸாவ எஸ்டேட்.

*யானை தன் தலையில் தானே மண் அள்ளிப் போடலாம்; ஆனால் புலி...? கலைஞர் அரசியல் புலி.*

★ ஹலோ சிந்தியா! விலைவாசி ஏறாத பொருள் ஒன்று கூறுங்களேன்?

என்.ரி. அமீனுதீன், அக்கரைப்பற்று-06.

*உயிரய்யா, மனித உயிர்!*

★ டெண்டுல்கர், கங்குலி, திராவிட்- இவர்களை துடுப்பாட்டத்தில் மும்மூர்த்திகள் எனலாமா?

கா. பாஸ்கரன், தலவாக்கலை.

*அவசரப்பட்டு அபிப்பிராயம் சொல்ல மாட்டேன். முன்னவர் ஓ.கே. பின்னவர்கள் இருவரும் இப்போதுதான் துடுப்பை சுழற்றவே தொடங்கியிருக்கிறார்கள். ஆரம்பம் அமர்க்களந்தான். எதற்கும் போகப் போக பார்த்துவிட்டுத்தான் சொல்லவேண்டும். ஆனாலும் கங்குலி தேறுவார்.*

★ பெரிய நடிகர்களின் படங்கள் எதையும் காணவில்லையே?

கே. பாண்டியன், குருநாகல்.

*தேர்தல் ஆரவாரம்; பின்னர் 'இந்தியன்', 'சிறைச்சாலை' போன்ற படங்களின் வெளி யீட்டு அமர்க்களம். இனித்தான் இதம், பதம் ,நேரம் அறிந்து வெளியிடப்போகிறார்கள். சத்யராஜ், பிரபு, விஜயகாந்த் படங்கள் தயங்கித் தாமதித்து வெளிவரத் தயாராகி விட்டன.*

## அப்படியா..? அடடே..!

*1932ம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் நூறுமீட்டர் ஓட்டப் பந்தயத்தில் போலந்துநாட்டுப் பெண் வீராங்கனை தங்கப் பதக்கம் வென்றாள். அளது பெயர் ஸ்டெல்லா வோல்ஷ்.*

*அதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் பெர்லினில் நடந்த ஒலிம்பிக்போட்டியில் நூறுமீட்டர் பந்தயத்தில் ஸ்டெல்லா வோல்ஷ் தோற்றுப்போனாள். ஹெலன் ஸ்டிபன் என்னும் ஜெர்மன் வீராங்கனை தங்கம் வென்றாள்.*

*உடனே ஒரு புதுமையான குற்றச்சாட்டு வீசப்பட்டது. ஹெலன் ஒரு பெண்ணே அல்ல என்று புகார்கள் கிளம்பின.*

*மருத்துவ பரிசோதனையில் ஹெலன் ஒரு பெண் என்று நிரூபிக்கப்பட்டது.*

*ஹிட்லர் ஹெலனை அழைத்து பாராட்டினார். கட்டித்தழுவினார். தன்னுடன் ஒரு வார இறுதிநாளை தனியாகக் கழிக்க வேண்டும் என்று கோரினார். ஹெலன் மறுத்துவிட்டாள்.*



ஹெலன் ஹிட்லருடன்

*ஹெலன் ஒரு ஆணா பெண்ணா என்ற சர்ச்சையெல்லாம் அடங்கிய 44 வருசத்துக்கு பின்னர், ஹெலனிடம் தோல்வி கண்டாரல்லா ஸ்டெல்லா என்னும் பெண், அவர் சுட்டுக் கொல்லப்பட்டாள். கொள்ளைக்காரன் ஒருவன் ஸ்டெல்லாவை சுட்டுவிட்டான்.*

*ஸ்டெல்லாவின் பிரேத பரிசோதனை வெளியானபோது பலத்த அதிர்ச்சி.*

*பிரேத பரிசோதனையில் அப்படி என்ன தகவல் இருந்தது என்கிறீர்களா?*

*ஸ்டெல்லா ஒரு ஆண்மகன்.*





ஸ்டெல்லா

## சிந்தியா பதில்கள்

★ டியர் சிந்தியா! மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றால், கணவன் அமைவதெல்லாம் எப்படி?

மு. தெய்வீகரஞ்சனி; பது / தெளிவத்தை.

*போனால் போகிறது. அதற்கான பொறுப்பையும் இறைவனிடமே கொடுத்து விடுங்கள். என்ன மறுப்பறிக்கையா விடப் போகிறார்?*

★ டியர் சிந்தியா! அடுத்த நூற்றாண்டிலாவது தமிழன் கண் விழிப்பானா?

செல்வி கலையரசி சாமிநாதன், இரத்தினபுரி.

*இப்போது மட்டும் என்ன தூங்கிக் கொண்டு இருக்கிறான் என்றா நினைக்கிறீர்கள்?! விழித்துக்கொண்டே தவறான திசையில் பார்த்துக்கொண்டிருக்கிறான். பார்வையில்தான் கோளாறு.*

★ டியர் சிந்தியா! முல்லைத்தீவு தாக்குதல் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? சூட்டோடு சூடாக பதில் தேவை!

இ. தாமோதரன், கொழும்பு-9.

*வெற்றி- தோல்வி நிரந்தரமில்லை. நிரந்தரத் தீர்வைத் தேடுவதைவிட பயங்கர ஆயுதங்களை நம்புவதில் பிரயோசனம் இல்லை என்பவையெல்லாம் புரியவேண்டிய செய்திகள். யாருக்குப் புரிந்து என்ன, புரிய வேண்டியவர்களுக்கு புரியவில்லையே.*

★ ஈடுசெய்ய முடியாத இழப்பு எது?

எம்.எஸ்.எம். முஹம்மது அலி, வெல்லம்பிட்டி.

*நம் கையைவிட்டுப் போன சமாதானம்.*

★ உடலில் காயம் பட்டால் மருந்து இருக்கிறது. உள்ளத்தில் காயம்பட்டால்?

ஏ.சி.எம். முஸம்மில், குளியாப்பிட்டி.

*நம்பிக்கை என்ற கரத்தால் உற்சாகம் என்ற களிம்பை எடுத்துப் பூசிக்கொள்ளுங்கள். அதுதான் அருமருந்து.*

★ தோல்வியே வெற்றிக்கு முதல்படி- சரிதானே?

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

*அதற்காக கண் மண் தெரியாமல் விழுந்து மண் கவ்விவிட்டு, விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்றரீதியில் முதல்படி., மூன்றாம்படி யென்று பம்ஸ்விடுவதும் பிழைதான்.*

## ஆசை கூடாததா?



★ காதல் நோய்க்கு மருந்தென்ன சிந்தியா?

வி. இளவரசு, பதுளை.

*ஒஷோ சொன்ன குட்டிக்கதையொன்று சொல்கிறேன் கேளுங்கள்.*

*'இளைஞன் ஒருவன் அனுபவ முதிர்ச்சியடைந்த ஒரு பெரியவரைச் சந்தித்தான். அவன் அவரிடம் கேட்டான்:*

*"நான் காதல் வியாதியால் பீடிக்கப் பட்டுள்ளேன். தங்களால் எனக்கு உதவ முடியுமா?"*

*பெரியவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு கூறினார்,*

*காதல் நோயைக் குணப்படுத்த ஒரேயொரு மருந்துதான் உள்ளது. அதுதான்*

★ இந்தியன் 'தாத்தா', அந்திமந்தாரை 'தாத்தா' இருவரையும் ஒப்பிடுக?

ஜெ. யூட் ஹீவேரியன், மட்/ தாண்டவன்வெளி.

*முன்னது புயல்; பின்னது பூந்தென்றல்.*

★ உலக அழகிக்கு வரவேற்பு எப்படி சிந்தியா?

எஸ்.எம். நுவைஸ், கிண்ணியா-06.

*வரவேற்பா அது? வளைவேற்பு! அழகி உயரம். அவர் கொடுத்த முத்தம் வாங்கிய சிலர் கொஞ்சம் குள்ளம். அழகி வளைந்துகொடுத்ததை அவர்கள் வாங்கிய லாவகம் இருக்கிறதே, அதுதான் வளைவேற்பு.*

★ சமீபத்தில் வெளியாகியுள்ள அதிரடியான ஒரு படம் சொல்லுங்கள்?

மு. வெற்றிவேல், தெகிவளை.

*கவர்ச்சி விஷயத்தில் என்றால் 'காதல் கோட்டை'. கதை விஷயத்தில் என்றால்.... மன்னிக்கவும்....எதுவும் தேறாது.*

★ ஆசைகள் கூடாது என்பது சரிதானா?

தனபால். ஆர்., கொழும்பு-11.

*அப்படிச் சொல்லிச் சொல்லியே நியாயமான ஆசைகளையும் அடக்கிவைத்து அவஸ்தைப்படாதீர்கள். வாழ்க்கை வாழ்வதற்கே. தேவையான ஆசைகளை குற்ற உணர்வாகக் கருதி மறைக்காதீர்கள். வாழ்வது ஒரு முறை. வாழ்வே மாயம் என்று வேதாந்தம் எதற்காக? அப்படியானாலும் இன்றே செத்துவிடலாமே. ஆசைதான் வாழவைக்கிறது. வாழ்வில் சுவை வைக்கிறது. ஆகவே தனபால் ஆசைப்படுங்கள்!*

★ ஒலிம்பிக் போட்டிகள் எப்போது ஆரம்பமாகின?

செல்வி எம். மனோகரி, புத்தளம்.

*கி.மு.776ல் ஒலிம்பிக் விழா தொடங்கிவிட்டது. நவீன ஒலிம்பிக் 1896 இல்தான் ஆரம்பமானது. நவீன ஒலிம்பிக்கின் வயசு நூறு.*



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 41

இராமருடன் சீதையும் இலக்குமணனும் அகத்திய மாமுனிவரைத் தரிசித்துவிட்டு- அவர் காட்டிய வழியே தண்டகவனத்தை நோக்கி வரும்போதுதான் முதன் முதலில் கழுகரசன் ஜடாயுவைக் காண்கின்றனர். தான் தசரத மாமன்னரின் உற்ற நண்பன் என்று தன்னை அறிமுகப்படுத்திய ஜடாயு,

## அரக்கனின் பிடியில் அகப்பட்ட அபலை

அம்மன்னர் மறைந்து விட்ட செய்தி கேட்டு துயரடைகிறார். இராமருடைய வனவாச காலம் முடியும் வரை மூவருக்கும், அப்பிர தேசத்தில் தீங்கு வராமல் காப்பதாகவும் வாக்களித்தார் ஜடாயு.

தான் கொடுத்த வாக்குக்கேற்ப, இராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்ற பறந்தோடி வருகிறார். தனது வானூர்தியில் இராவணன் சீதையைக் கடத்திச் செல்வதைக் கண்டு, முதலில் அவ்வூர்தியைச் செலுத்தும் சாரதியைத் தனது அலகினால் கொத்திக் கீழே தள்ளி விடுகிறார். இரதம் கட்டுப் பாட்டினை இழக்கிறது. இருப்பினும் இராவணன் இரதத்தை நிலை தளம்பாது தடுத்து மீண்டும் நேர்பாதையில் செலுத்துகிறான்.



ஜடாயு விடவில்லை. "மதிகெட்ட இராவணா! மிதிலை மாமன்னன் மகளாம் சீதை கற்பின் கொழுந்தடா! அவதார புருடனான இராமரின் தர்ம பத்தினி அவள். உண்மையில் உனக்கு உன்னுயிர் மேலாசையிருந்தால் சீதையைத் தரையில் பத்திரமாக இறக்கிவிடு. இல்லாவிட்டால் என் கூரிய அலகுகளால் உன்னைக் குத்திக் குதறி விடுவேன்." இவ்வாறு ஜடாயு கூறியதும் இராவணன் நகைத்தான்.

"ஏ கிழட்டுக் கழுகே! யாரிடம் நீ மோத வருகிறாய்—என்பதைச் சற்று யோசித்துப்

**இராஜகுமாரன்**

பார். கைலயங்கிரியையே பெயர்த்து அந்த சிவபெருமானையே கிலி கொள்ளச் செய்த என்னுடன், கேவலம் ஒரு சிறு பறவை- நீ- மோதவரலாமா? உன்னுடன் போர் புரிவதென்பது எனக்கு கேவலமல்லவா? எட்டி நில்...!" என்று தனது பயணத்தை இராவணன் தொடர்ந்தான்.

ஜடாயு பாய்ந்தெழுந்து தன் அலகுகளால் முதலில் இரதத்தைச் செலுத்திய கைகளைக் கொத்தினார். இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. சற்று வேதனையும் அளித்தது. மற்றொரு கரத்தினால் ஜடாயுவைத் தட்டிவிட்டான். ஜடாயுவும் விட்டுக் கொடுக்கவில்லை. இருப்பினும் 'அசுரபலம்' கொண்ட இராவணனுடன்-வயதாகி வலுவிழந்த ஜடாயுவால் ஈடு கொடுத்துப் போரிட முடியுமா? இருப்பினும் தன் உயிர்போனாலும் பரவாயில்லை-இறுதிவரை போராடியே தீர்வதென்ற முடிவுடன் மூர்க்கத்தனமாக இராவணனைத் தாக்கினார். இராவணனுடைய தலைகளிலிருந்த முடிகளைத்தட்டி விட்டார். வில்லை உடைத்தார், தேரின் பல பாகங்களையும் பிய்த்தெறிந்தார். இராவணனின் அங்கங்களிலெல்லாம் அலகுகளினாலும் கால் நகங்களினாலும் கீறி பல இரத்தக் காயங்களை ஏற்படுத்தினார்.

இராவணனால் ஜடாயுவின் இம்சையைப் பொறுக்க முடியவில்லை. தனது வாளினை எடுத்து ஜடாயுவின் இறக்கைகள் இரண்டையும் வெட்டினான். இதனால் ஜடாயுவால் வான் வெளியில் நிற்க முடியாமற் போய் விட்டது. அந்தரத்தில் சுழன்று நிலத்தில் வீழ்ந்தார். சீதை ஜடாயுவின் நிலை கண்டு தாங்கொணாத் துயர் கொண்டு அழுது புலம்பினாள். "இந்த அவலைக் காப்பாற்ற ஓடோடிவந்த ஜடாயு ஐயா! தாங்களே நிலை குலைந்து சாய்ந்து விட்டீர்களே!" என்று கதறினாள்.

### பண்பாடு காத்த புலவர் பெருமான்

வால்மீகி தமது காவியத்தில் இராவணன் சீதையை தன் கைகளால் வாரி எடுத்துக் கொண்டு வானில் பறந்ததாகத்தான் கூறுகிறார். ஆனால், வேற்று ஆடவனின்- அதுவும் ஒரு காமுகனின்-அங்கம் ஒரு கற்புக்கரசியின் உடலைத் தீண்டலாகாது என்று, தமிழர் பண்பாட்டுடன் இக்கட்டத்தை கம்ப நாட்டாழ்வார் சித்தரிக்கிறார். இதனால்தான் பர்ணசாலையுடன் பெயர்த்தெடுத்துச் செல்வதாகக் கூறுகிறார்.

இதுதவிர, பல பெண்களை-அவர்களின் விருப்பத்துக்கு விரோதமாக இராவணன் கெடுத்ததாகவும்-பல சாபங்களைப் பெற்றதாகவும் பல உபகதைகள் கூறப்படுகின்றன. பிரம்மதேவனும் இராவணனுக்கு இத்தகைய சாபம் கொடுத்துள்ளார். குபேரனுக்குரியது அழகாபுரி. அங்கு ஒரு முறை சென்ற இராவணன், அங்கிருந்த தேவமகள் அரம்பையைக் கண்டு காமுற்றான். இவனுடைய விருப்பத்துக்கு இசையாத அரம்பையை இராவணன் கற்பழித்தபோது, "ஒரு பத்தினிப் பெண்ணை அவளுடைய விருப்பத்துக்கு மாறாகத் தீண்டினால் அக்கணமே நீ எரிந்து சாம்பலாவாய்" என்று சாபமிட்டாள்.

சீதையை பலாத்காரமாக அடையாமல், அவள் தானாகவே விரும்பி மனம் மாறுவதற்கு இடம் தரவேண்டும் என்று இராவணன் கருதியமைக்கும் மேற்படி சாபங்களும் காரணமாக இருக்கலாம்.

✣☆✯✣

### இலங்கை சேர்ந்தான் இராவணன்

ஜடாயு வீழ்ந்ததும் தன்னுடைய பாதையில் இனி எவரும் தடைசெய்யப் போவதில்லை என்ற துணிவு பெற்றவனான இராவணன் தனது விமானத்தை அதிவேகமாகச் செலுத்தினான். தன்னை இவ்வரக்கனிடமிருந்து இப்போது காப்பாற்ற எவரும் வரப்போவதில்லை என்று சீதையும் எண்ணினாள். தான் அணிந்திருந்த நகைகளை எடுத்து சில இடங்களில்-பூமியில் விழுமாறு போட்டுக்கொண்டே சென்றாள். தன் கணவன் தன்னைத் தேடிவரும்போது தான் எடுத்துச் செல்லப்பட்ட பாதையைக்கண்டு கொள்ள உதவுமே என்பதற்காக இவ்வாறு செய்தாள்.

ஒரு மலை உச்சியிலே ஒரு மனிதர் நின்று இராவணனின் இரதத்தைப் பார்ப்பதைக் கண்டாள். தனது சில நகைகளை தனது உத்தரியத்தில் முடிந்து அந்த உருவம் அவதானித்து அதனை எடுக்கக் கூடியவாறு எறிந்தாள். யாரோ ஒரு பெண்ணை ஒருவன் வான வீதியில் கடத்திச் செல்வதை சில வானரங்களும் பார்த்து நின்றன.

தற்போது கேரளா நாட்டில் பாய்ந்து செல்லும் பம்பை நதியைத்தாண்டிச் சென்று சிறிது நேரத்தில் கடல் மட்டத்துக்கு மேல் விமானம் பறந்து சென்றது. சற்று நேரத்தில் கடல் மறைந்து கீழே நாடு நகர்ப்புறங்களையும் சீதை கவனித்தாள். இராவணனின் இலங்காபுரி இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று சீதை தெரிந்து கொண்டாள்.

விமானம் கீழிறங்கியது. நெடிதுயர்ந்த மரங்கள் சூழ்ந்த வனத்தின் நடுவே அழகிய மாளிகை தென்பட்டது. அம்மாளிகை நன்கு அரண் செய்யப்பட்டிருந்தது. சீதையை அழைத்துக் கொண்டுபோய் பயங்கர-விகார உருவங்கொண்ட அரக்கிகளை அழைத்து சீதையை அவர்களிடம் ஒப்படைத்தான் இராவணன். எத்தகைய குறைகளுமின்றி சீதையைக் கவனிக்கும்படி கட்டளையிட்டான்.

❋★★✤◆◇☆✯★

### இராமரும் இலக்குவனும்

மாயமான் வேடமிட்ட மாரீசனைத் தொடர்ந்து சென்று அவனைக் கொன்ற இராமர், அரக்கர் விரித்த சூழ்ச்சிவலையுள் தான் வீழ்ந்து விட்டதை எண்ணி வெட்கமும் துக்கமுமடைந்தார். பர்ணசாலையில் ஏதாவது விபரீதம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் பயந்தார். பசியும் களைப்பும், ஏமாற்றப்பட்டதனால் எழுந்த அசதியும் வாட்ட, பர்ணசாலையை நோக்கி இராமர் நடக்கலானார். அதே வேளை எதிரே தம்பி இலக்குவன் வேகமாக வருவதை அவதானித்து ஓடிச் சென்று, "தம்பி! எங்கே வந்தாய்? அந்த மாயமான்- நீ சொன்னது போல்- அரக்கர்களின் சூழ்ச்சிதான். அது சரி, சீதை எங்கே? ஜானகியைத் தனியாக பர்ணசாலையில் விட்டுவிட்டு ஏன் வந்தாய்? ஐயோ! ஜனாகிக்கு இதுவரை என்ன நேர்ந்ததோ? அங்கே சீதைக்குக் காவலாக இரு என்று கூறிவிட்டுத்தானே வந்தேன்? இரக்கமே இல்லா அரக்கர்கள் சீதையை இதுவரை பிடித்து தங்கள் பசியைத் தீர்த்திருப்பார்களே! அரக்கர்களை நான் அழித்தமையினாலன்றோ பழி தீர்ப்பதற்காக மாயமானை ஏவி நம்மை ஏமாற்றி, சீதையைத் தனிமைப்படுத்தியிருக்கிறார்கள். ஐயோ தம்பி! இனி என் உயிருக்குயிரான சீதையை உயிரோடு காணப்போவதில்லை. அவளை அந்த அரக்கர்கள் பச்சையாகவே புசித்திருப்பார்களே! இலக்குமணா! இனிநான் உயிர்வாழமாட்டேன்." இவ்வாறு சிறு குழந்தையைப் போல் இலக்குவனின் தோளில் சாய்ந்த வண்ணம் இராமர் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

"அண்ணா! நான் எவ்வளவோ எடுத்துரைத்தேன். பிராட்டியார் கேட்கவில்லை. 'ஏ சீதா..! ஏ இலட்சுமணா..?" என்று தங்கள் குரலிலேயே அபயக்குரல் கேட்டதும் அண்ணி தாங்கொணாத் துயருடன் அழுது புரண்டார். அக்குரல் தங்களுடையதல்ல... 'எம் அண்ணல் எக்காலத்திலும் அத்தகைய அவலக்குரல் எழுப்பவே மாட்டார். இது அரக்கர்களின் சூழ்ச்சி' என்றெல்லாம் ஆறுதல் கூறினேன். தொடர்ந்து அந்தத் தெய்வம் வேண்டாத வார்த்தைகளையெல்லாம் வீசி என்னை 'சுயநல நோக்கோடு சுற்றித்திரியும் துரோகி' என்றும் 'மோசக்காரன்' என்றும் திட்டினார் கள். அதுமட்டுமல்லாமல் உடனே தங்களைத் தேடி நான் போகவில்லையானால், தீவளர்த்து அத்தீயில் பாய்ந்து மாயப் போவதாகக் கூறினார். அவ்வார்த்தையைக் கேட்ட பின்னர் நான் என்னதான் செய்ய முடியும்? என்னை மன்னியுங்கள். தங்கள் கட்டளையை மீறியமைக்காக என்னை மன்னித்தருளுங்கள் அண்ணலே," என்று கூறிய இலக்குவன் இராமரின் காலடியில் வீழ்ந்து வணங்கினான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 39

**சரியானவிடை:- நிலம், நெருப்பு, நீர், காற்று, ஆகாயம்.**

1. K. பிரசாத் குமார். இல.70 மெயின் வீதி, பண்டாரவளை.
2. தி. ஆனந்தகுமார். இல.60. சிங்கபுர வீதி, சிலாபம்.
3. செல்வி சானாஸ் வபா. மங்கெதர, துல்கிரிய.
4. சா. கவிதா. இல.200 நுவரெலிய வீதி, வதுலபிட்டிய, புஸல்லாவ.
5. **எஸ்.எம்.எம். சிவராம்.,** திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

**போட்டி இல. 41** கேள்வி:- இராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்ற வந்தவர் யார்?

ஆகஸ்ட்.03 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:


**இராமாயணப் போட்டி – இல.41, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர்:— | பரரா... சிங்கம். |
| தொழில்:— | அரசியல் |
| உப தொழில்:— | பலதும் பத்தும். |
| பிடித்தது:— | அறிக்கையும்-முழக்கமும். |
| பிடிக்காதது:— | கிழக்கில் உள்ள போட்டியாளர்கள். |
| சமீபத்திய எரிச்சல்:— | கிழக்கில் புலிகளின்பிடி இறுகுவது. |
| சாதனை:— | தொடர்ந்து பதவியில் இருப்பது. |
| விருப்பமான நாள்:— | முழக்கங்கள் பத்திரிகைகளில் வெளியாகும் நாள். |
| சமீபகால சாதனை:— | வீழ்த்தவும் தயங்கோம் என்று முழங்கியது. |
| எதிரிகள்:— | உள்ளே-வெளியே. |
| நண்பர்கள்:— | சிபாரிசுகளை கவனிக்கும் அதிகார தரப்பினர். |
| பொழுது போக்கு:— | வெளிநாட்டுப் பயணங்கள். |
| ஒரே சந்தோசம்:— | சர்வதேசரீதியாக குடும்பத்தினரை குடியேற்றி முடித்தது. |
| ஒரே இலட்சியம்:— | நிரந்தர நாற்காலி. |
| நம்பும் ஆயுதம்:— | அட்டகாசமான அறிக்கைகள். |

## காணவில்லை



பெயர்:- தீர்வுத்திட்ட பொதி.
பிறப்பு:- கொழும்பு-சிறீலங்கா.
வயது:- கிட்டத்தட்ட ஒன்று.
நிறம்:- அடிக்கடி மாறும்.
நிறை:- இறுதியாக மெலிந்துகாணப்பட்டது.
விசேஷ அடையாளம்:- எக்கச்சக்கமான வெட்டுக் கொத்துக் காயங்கள்.
குணம்:- குழப்பமான நிலை.
இறுதியாக காணப்பட்ட இடம்:- தெரிவுக்குழு.

எங்காவது முழுதாகவோ, அல்லது துண்டு துண்டாகவோ காண்பவர்கள் உடனடியாக தகவல் தரலாம்.. தக்க சன்மானம் தரப்படமாட்டாது என்பதை மட்டும் வருத்தத்துடன் அறியத்தருகிறோம். ஏனெனில் காணாமல் போனதையிட்டு பெற்றோர்கள் மனநிம்மதியுடன் காணப்படுகிறார்கள்.

# வேண்டுகோள்

## "உடன் வா பொதியே உருகுகிறோம்"

அன்பும், வம்பும் நிறைந்த தீர்வுப் பொதியே! நீ பிறந்த போது நிறை குறைவாக இருந்தபோதும், உன் அங்கங்களில் குறையிருந்தபோதும், ஏதோ இந்தளவிலாவது பிறந்துவந்தாயே என்று பூரித்தோம்.

உன் புன்னகையை பேய் நகை என்று புரளி கிளப்பினார்கள் சிலர்.

குடும்பத்தை பிரிக்கவந்த கோடாரி என்று கூக்குரலிட்டனர் வேறு சிலர்.

குழந்தையென்றும் பாராமல் உன் குரல்வளையை நசிக்க நீண்ட கரங்கள் எத்தனை.

உன் பெற்றோர் ஊராருக்கு அஞ்சி, உன்னை போஷாக்காக வளர்க்காமல் இருந்த போதும், நாங்கள் பால்புட்டியுடன் உன்னிடம் ஓடிவந்தோம்.

உன்னைப் பெற்றவர்கள்- உன்னை ஆளாக்கும் பொறுப்பை எம்மிடமல்லவா தள்ளிவிட்டனர்.

வேறு குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்று ஆளாளுக்கு யோசனை சொன்னார்கள்.

சொக்ஸி அண்ணா ஒரு பரிசோதனைக் குழாயுடன் ஓடிவந்தார். அழகான குழந்தை பெறலாம் என்று யோசனையும் சொன்னார்.

நீயோ பாலுக்கு அழுதாய். தொட்டிலில் இருந்து விழுந்து தலையில் அடிபட்டாய்.

உன் பெற்றோரோ பரிசோதனைக் குழாய் குழந்தை பற்றி பரிசீலிக்கப் போய் விட்டனர்.

எம் இனிய பொதியே! நாம்தானே பிளாஸ்ரர்களோடு ஓடிவந்தோம்.

ஒரு கையில் பால் புட்டி. மறுகையில் பிளாஸ்ரர் பெட்டி.

நீ எங்கே போய்விட்டாய்?

போனாயோ எம் பொதியே! எல்லாப் பொதியும் பொதியல்ல. என்னைப் போல ஒரு பொதியில்லை என்று வந்த பொதியே, இன்று நீ எங்கே?

நாங்கள் திருத்தம் வைத்திருக்கிறோம். உன் கை வளைவை நிமிர்த்திவிடலாம். உன் கால் முறிவை மாற்றிவிடலாம். உன் நாரிப் பிடிப்பை எடுத்து விட்லாம். உன் கழுத்துச் சுளுக்கை போக்கிவிடலாம்.

வாராய் நீ வாராய்! போகுமிடம் வெகு தூரமில்லை, நாலைந்து செக்கிங் பொயின்ற் கடந்தால் வந்துவிடும்! வாராய். நீ வாராய்!

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. எம்மைச் சொல்லிக் குற்றமில்லை. இன வாதம் செய்த குற்றமன்றோ. வாராய். நீ வாராய்!

நீ வந்தால், உனக்கு பட்டுக் குஞ்சம் கட்டி அழகு பார்போம். எனவே உடனடியாக ஓடோடி வருமாறு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
உன்னை நினைத்து ஏங்கும்
தமிழ் கட்சிகள்.

(**பின்குறிப்பு:-** உன் பெற்றோர் உனக்குப் பதிலாக ஒரு பொம்மை வாங்கப் போகிறார்கள் என்று அறிகிறோம்.)

# இன்னும் நானே பிரதமர்

## நரசிம்மராவ் மர்மப் புன்னகை

**முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் ஒரு கற்பனைப் பேட்டி.**

நிருபர்:- **வணக்கம். பிரதமராக இருந்ததுக்கும், இப்போது எதிர்க்கட்சியில் இருப்பதற்கும் இடையே என்ன வித்தியாசம்?**



**நரசிம்மராவ்:-** (முன்னர் ஆளும்கட்சி வரிசையில் இருந்து பிரதமராக இருந்தேன். இப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் பிரதமராகத்தான இருப்பதாக உணர்கிறேன்.

**நிருபர்:-** இப்போது தேவ கவுடாதானே பிரதமர்?

**நரசிம்மராவ்:-** (வழக்கத்திற்கு மாறான புன்னகையுடன்) அப்படித்தான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**நிருபர்:-** அப்படியானால் இப்போது ஆளும்கட்சி எது?

**நரசிம்மராவ்:-** எதிர்க்கட்சிதான் ஆளும் கட்சி, ஆளும்கட்சிதான் எதிர்க்கட்சி.

**நிருபர்:-** தேவ கவுடா. பிரதமராகத் தகுதி உள்ளவர்தானா?

**நரசிம்மராவ்:-** நான் இன்னமும் முடிவு செய்யவில்லை.

**நிருபர்:-** எப்போது முடிவு செய்வீர்கள்?

**நரசிம்மராவ்:-** எப்போதுமுடிவு செய்வது என்பதையும் இன்னமும் முடிவு செய்யவில்லை.

**நிருபர்:-** நீங்கள் முடிவுகள் எடுப்பதில் இப்படி தாமதிப்பதின் காரணம் என்ன?

**நரசிம்மராவ்:-** தாமதம் வேறு, தள்ளிப்போடுவது வேறு, தள்ளிப்போடுவதும் தாமதமும் ஒன்றல்ல. என்ன புரிகிறதா?

**நிருபர்:-** புரிகிறது, புரிகிறது. தேவகவுடா ஐந்தாண்டுகள் நீடிப்பாரா?

**நரசிம்மராவ்:-** அவர் பிரதமரல்ல. பிரதமரின் பிரதம செயலாளர் மாதிரித்தான். அவர் நல்ல பிரதம செயலாளர்தானா, பதவியில் நீடிக்கலாமா என்பதை பிரதமர்தான் தீர்மானிப்பார்.

**நிருபர்:-** யார் அந்த பிரதமர்?

**நரசிம்மராவ்:-** (நமட்டுச் சிரிப்பை வீசுகிறார்.)

**நிருபர்:-** இன்று ஒரு அதிசயம் நிகழ்ந்து விட்டது.

**நரசிம்மராவ்:-** என்ன?

**நிருபர்:-** இரண்டுதடவை, அதுவும் குறுகிய நேரத்தில் சிரிப்பை உதிர்த்துவிட்டீர்கள்.

**நரசிம்மராவ்:-** நன்றி. (போன் வருகிறது. பேசிவிட்டு நிருபரைப் பார்க்கிறார்) மன்னிக்கவேண்டும், இன்றைய தனது கடமைகள் என்ன என்று தேவகவுடா கேட்டார். அது தான். சரி, நீங்கள் பேட்டியைத் தொடரலாம்.

காதில பூ கந்தசாமி

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
4363331

# உல்லாச வலம்



← வானத்தில் வட்டமடித்துவிட்டு திரும்பிவர சொகுசான விமானம். ஒரே ஒரு குறை. ஜோடியாகச் செல்ல முடியாது. அதுவும் நல்லதுதான். வேறு விஷயங்களில் கவனம் சிதறி விபத்தாகிவிடாமல் திரும்பலாம். இந்த விமானத்தின் பெயர் 'பம்பீள் பீ ரு'. உலகில் மிகச் சிறிய விமானம் இதுதான். நீளம் 8 அடி 10 அங்குலம். அகலம் 5 அடி 6 அங்குலம். எடை 396 இறாத்தல். மணிக்கு உச்சவேகம் 306 கிலோமீட்டர். அமெரிக்கரான றொபேர்ட் ஏச். ஸ்ரார் என்பவர் இந்த உலக சாதனை விமானத்தை தயாரித்தார்.

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

# எப்பவும் ராஜா




இவர் முன்னரே 'முரசு' வாசகர்களுக்கு அறிமுகமானவர்தான். பெயர் கல்யாண் ராம்ஜி செயின். இந்தியாவைச் சேர்ந்தவர். 1976முதல் படு சிரத்தையாக மீசை வளர்க்கத் தொடங்கினார். சூப்பர் சைஸ். ஆனாலும் இரு புறமும் ஒரே அளவல்ல. வலது புறம் 167 சென்ரி மீட்டர். (65 3/4 அங்குலம்) இடதுபுறம் 160 சென்ரி மீட்டர் (63 அங்குலம்).

சமீபத்தில் இவருக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. 1992 முதல் 1996 வரை உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் இடம்பெற்று வருவதற்குத்தான் பாராட்டு. மீசை அண்ணாச்சி தனது சாதனை மீசையை வளர்க்கப்பட்டபாட்டை விட அதனை பராமரிப்பதில் தான் எக்கச்சக்கமாக கஷ்டப்பட்டுப் போனாராம். மனைவி தான் ஒத்தாசையாக இருந்து எண்ணெய் போட்டு சிக்கெடுத்து பேருதவி புரிகிறாராம். ஆக மொத்தில் மீசை அண்ணாச்சியின் சாதனைக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறார்.

# ஒலிம்பிக்குத் திரை



→ ஒலிம்பிக் போட்டிகள் மகா அமர்க்களமாக ஆரம்பித்து விட்டன. நம் நாட்டு தொலைக் காட்சியிலும் நீங்கள் கண்டு களித்துக் கொண்டிருப்பீர்கள்.

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மத்தியில் தமக்கு பிடித்தமானவர்கள் பதக்கம் பெறுவதுதான் ரசிக, ரசிகைகளுக்கு உச்ச பட்ச சந்தோசம்.

படத்தில் இருக்கிறார் பாருங்கள் வீராங்கனை. இவரது பெயர், ஃபுளொறென்ஸ் கிறிஃபித் ஜோய்னர். இவர் களத்தில் இறங்கிவிட்டாலே போதும் அமெரிக்க ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தான். ஓட்ட வீராங்கனைகளிலேயே மிகக் கவர்ச்சியாக உடையணிந்து கலக்குவதுதான் இவரது தனித்துவம். இப்போது 36 வயது. ஆனாலும் பழைய வேகம் போகவில்லை. இம்முறையும் ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பிடித்துவிட்டார்.

1988 இல் சியோலில் நடந்த ஒலிம்பிக்கில் 200 மீட்டர் ஓட்டப் போட்டியில் 21.34 செக்கனில் ஓடி முடித்து உலக சாதனை படைத்தார். 1988 ஒலிம்பிக்கில் மூன்று தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் என்பவற்றை தட்டிக்கொண்டதும் மாபெரும் உலக சாதனை.

1988 ஜூலையில் அமெரிக்காவில் நடைபெற்ற 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் உலக சாதனை படைத்தார். 10.49 செக்கனில் ஓடி முடித்தார்.

இம் முறையும் இந்த மான் வென்றுதரும், பதக்கம் கொண்டுவரும் என்று அமெரிக்கா நம்பியிருக்கிறது. நம்பிக்கை நிறைவேறுமா? இதுதான் இவர் கலந்து கொள்ளும் கடைசி ஒலிம்பிக்காக இருக்கலாம் என்பதும் ரசிகர்களுக்கு வருத்தமான செய்தி.

ஃபுளோரன்ஸின் கணவரும் ஒரு விளையாட்டு வீரர். றிபிள் ஜம்ப் (முப்பாய்ச்சல்) விளையாட்டில் சூரர். கணவர்தான் இவருக்கும் பயிற்சியாளர்.

ஃபுளோரனஸ் விளையாட்டில் மட்டுமல்ல, தனது உடலை காத்திரமாகவும், கவர்ச்சியாகவும் வைத்திருப்பதிலும் கவனம் செலுத்திவருவதுதான் குறிப்பிடத்தக்க அம்சம்.

# முப்பாய்ச்சல்




→ ஜோனதன் டேவிட் எட்வேர்ட். வயது 30. பிரித்தானிய வீரர். முப்பாய்ச்சலில் இவர் தங்கம் வென்று தருவார் என்று நம்பியிருக்கிறது பிரிட்டன்.

இம்முறை ஒலிம்பிக்கில் கலந்துகொள்வதற்கு முன்னர் முப்பாய்ச்சலில் பல சாதனைகளைப் படைத்திருக்கிறார் எட்வேர்ட்.

1995 ஆகஸ்ட் மாதம் கொதேன் பேர்க்கில் நடைபெற்ற முப்பாய்ச்சல் உலக சாதனைப் போட்டியில் இரு தடவைகள் 18 மீட்டர் தூரத்தை தாண்டிய ஒரே வீரர் இவர்தான்.

முப்பாய்ச்சலில் இவருக்கு முற்பட்ட உலக சாதனை 17.77 மீட்டர். ரசிய வீரரான வியோனிட் வேலோசின் என்பவர் படைத்த சாதனை இது. அதனை முறியடித்து 18 மீட்டர் தூரத்தை எட்வேர்ட் கடந்து காட்டினார்.

அதனால்தான் இம்முறை ஒலிம்பிக்கில் எட்வேர்ட் சாதனை படைப்பார் என்று பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

முப்பாய்ச்சல் போட்டிகளில் பெண்கள் கலந்துகொள்ளும் போட்டிகள் இம்முறைதான் ஒலிம்பிக்கில் அறிமுகமாகின்றன.

1995 ஆகஸ்ட் மாதம் கொதேன்பேர்க்கில் நடைபெற்ற முப்பாய்ச்சல் போட்டிகளில் பெண்கள் பிரிவில் உலக சாதனை படைத்தவர் இன்சா கிரவெட்ஸ். உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்தவர். 15.50 மீற்றர் தூரத்தை கடந்தார். அதற்குப் பின்னர்தான் பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியை நடத்த ஒலிம்பிக் ஏற்பாட்டாளர்கள் முன்வந்தனர். இன்சா கிரவெட்சும் ஒலிம்பிக் போட்டியில் பங்குகொள்கிறார். அநேகமாக பதக்கம் நிச்சயம்.



→ வண்ணத்திப் பூச்சியிலும் பல ரகங்கள் இருக்கின்றன. படத்தில் உள்ள வண்ணத்திப் பூச்சி 'மொனார்ச்' என்று அழைக்கப்படுகிறது.

# சாதனைச் சிறகு

ஏனைய ரக வண்ணத்திப்பூச்சிகள் பொறாமைப் படக்கூடிய அளவுக்கு 'மொனார்ச்' ரக வண்ணத்திப் பூச்சிகள் அழகானவை. அழகு மட்டுமல்ல இவற்றின் சிறகுகள் மிகப் பிரமாண்டமானவை. அவற்றிலும் படத்தில் காணப்படும் 'மொனார்ச்' தனிச் சிறப்பு வாய்ந்தது.

இதன் சிறகின் அகலம் 11 அங்குலம். எடை 25 கிராம். பிரமாண்டமான சிறகைப் பெற்றதால் உலக சாதனைப் புத்தகத்தில் படத்தோடு இடம் பிடித்து விட்டது. வண்ணத்திப் பூச்சி வரலாறாச்சு.